# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 14-01-1994

அன்பளிப்பு 40P


**நடுப்பக்கத்தில்.....**

விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகப் பொறுப்பாளராக இருந்து, சர்வதேசக் கிளைகளைச் செம்மைப்படுத்தி, சமாதானத் தூதுவனாகத் தமிழீழம் நோக்கிச் சென்ற 'கேணல் கிட்டு' அவர்கள் மாவீரனாகி ஓராண்டு நிறைவடைகின்றது. அவரது நினைவாக அஞ்சலிக் கவிதை பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**விசேட இணைப்பு ..**

'கேணல் கிட்டு' அவர்களினதும், அவரோடு சேர்ந்து தம்மை அழித்து, இந்திய வல்லாதிக்கக் கரங்களில் சிக்காது, மாவீரர் ஆகிக் கொண்ட, 9 சக போராளிகளினதும் ஓராண்டு நினைவாக அவர்களது படங்களைத் தாங்கிய விசேட பிரசுரம் உள்ளே இணைக்கப்பட்டுள்ளது.

# வடக்கிற்கென விசேட யுத்த விதிகள்: சிறீலங்கா அரசு அவசர ஆலோசனை

சிறீலங்கா அரசாங்கம் வடக்கை யுத்தப் பிரதேசமாக பிரகடனப்படுத்தி, அதனை இராணுவச் சட்டத்தின் (Martial Law) கீழ் கொண்டுவருவதற்கான அவசர ஆலோசனைகளை நடாத்தி வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு முன்னோடியாக மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் பகுதிகளில் போலியான தேர்தல் ஒன்றை நடாத்தி, தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்து வருவதாக உலகுக்கு காட்ட முற்படுகிறது. இத்தேர்தல்களின்போது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் மட்டுமே வாக்குச் சாவடிகளை அமைத்து, ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களை, இந்த வாக்குச்சாவடிக்கு வந்து வாக்களிக்கும்படி சிறீலங்கா அரசாங்கம் கேட்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த அகதிகளுடைய வாக்குரிமை பற்றி சிறீலங்கா அரசாங்கம் எவ்வித அக்கறையும் எடுக்கவில்லை. பல்லாயிரம் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால், இப்பிரதேசங்களில் எஞ்சியுள்ள சிங்கள மக்களின் வாக்குகளாலும், மற்றும் நேர்மையற்ற முறையில் வாக்குகளை செயற்படுத்துவதாலும், போலியான அரசு ஆதரவுத் தோற்றம் ஒன்றை உருவாக்கலாமென சிறீலங்கா அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இதன் அடிப்படையில் வடக்கு, கிழக்கு மக்களிடை அரசியல் கருத்து வேறுபாடு உள்ளது எனவும், எனவே வடக்கு, கிழக்கு இணைப்பு என்பதற்கு குடியொப்பம் ஒன்றை நடத்த வேண்டிய தேவையுள்ளதெனவும் சிறீலங்கா உலகுக்கு கூறவிரும்புகிறது. அதேவேளை வடக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் தமிழ் மக்கள், சிறீலங்கா அரசாங்கத்தின் ஒற்றையாட்சி-பௌத்த சிங்கள குடியரசு அரசியலமைப்பை ஆதரிப்பதாகவும், அதனால் வடக்கில் விடுதலைப் புலிகள் எனப்படும் பயங்கரவாத இயக்கத்தை அழிக்க யுத்தப் பிரகடனம் செய்ய வேண்டிய நிலையில் தான் இருப்பதாகவும் காண்பித்து தமிழீழத்தின் மீது நடாத்தவிருக்கும் பாரிய யுத்தத்தை நியாயப்படுத்தலாமென சிறீலங்கா திட்டமிட்டு வருகிறது.


உத்தியோக பூர்வமான யுத்தப் பிரகடனத்தை மேற்கொள்வதன் மூலம் அப்பகுதியில் இராணுவச் சட்டத்தை அமுல் நடத்தச் சந்தர்ப்பம் கிட்டும் எனவும், இதன் மூலம் இன்று குடா நாட்டு மக்களுக்காக சர்வதேச சமூகம் எழுப்பிவரும் மனிதாய குரல்களை முறியடிக்கலாம் எனவும் சிறீலங்கா கருதுகிறது. அரசு நோக்கிய அரசாக (Defacto Government) உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு, சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும் நிலை விரைவு பட்டுவருவதால் அதற்கிடை விரைவாக பாரிய யுத்தமொன்றை நடாத்தி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம் என்று ஒன்றில்லாமல் செய்துவிட வேண்டும் என்பதே சிறீலங்காவின் உள்நோக்கம்.

### சிங்களப் பத்திரிகைகள் ஆதரவு

யுத்த நடவடிக்கைகளை வேகப்படுத்தும் வகையிலும், பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு ஊக்கம் கொடுக்கும் வகையிலும், புதிய அமைச்சரவை மாற்றமொன்றை சிறீலங்கா அரசாங்கம் செய்ய இருப்பதாகவும் தெரிகி

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

## புதிய மூச்சாகி ஓராண்டு



'கிட்டு' நீ சாகவில்லை ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கின்றாய்

– தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்

# மக்களுக்கெதிரான யுத்தத்தை சிறீலங்கா தொடர்கிறது

☆ சாவகச்சேரி — தாவடியில் 13 பேர் பலி

☆ 65 க்கு மேற்பட்டோர் காயம்

☆ மருந்தின்றி 15 பேர் மரணம்

மக்களுக்கு எதிரான யுத்தத்தை சிறீலங்கா அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. சர்வதேச யுத்த விதிகளுக்கு முரணான இச்செயற்பாட்டால் சிறீலங்கா, தமிழீழ மக்களை ஆள்வதற்கான சகல தகுதிகளையும் இழந்து ஆக்கிரமிப்பாளராக காட்சி அளிப்பதாக, இலண்டனில் உள்ள அரசியல் விஞ்ஞான ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

### சாவகச்சேரி மக்கள் பேரணி மீது.....

சாவகச்சேரியில் பொருளாதாரத் தடைக்கெதிராகவும், சிறீலங்கா அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராகவும் புத்தாண்டு தினத்தன்று மக்கள் நடத்திய ஊர்வலத்தின் மீது சிறீலங்கா விமானங்கள் வீசிய குண்டுகளால், ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டு ஐம்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

### கத்தோலிக்க குரு மடம் தாக்கு

மார்கழி மாதத்தில் நடந்த குண்டு வீச்சில் கொழும்புத்துறையில் உள்ள கத்தோலிக்க குருமாணவர் பயிற்சி கல்லூரி இலக்காக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதல் நடந்த வேளையில் அக்குருமடத்தில் ஆறு குருக்களும், பத்து கன்னியாஸ்திரிகளும் 48 குருமட மாணவர்களும் இருந்துள்ளனர். இத்தாக்குதலில் 4 குண்டுகள் வீசப்பட்டதாகவும் ஒன்று குரு மடத்திற்கு அருகிலுள்ள வீட்டில் விழுந்து வெடித்து இளந்தாய் ஒருவரும் குழந்தையும் உயிரிழந்ததாகவும், அடுத்த இரண்டு குண்டுகளாலும் குருமடத்தின் ஒரு பகுதியும் அருகில் இருந்த கன்னியாஸ்திரி மடத்தில் ஒரு பகுதியும் சேதமடைந்தது. நான்காவது குண்டு கடலில் வீழ்ந்தது. குருக்களும், கன்னியாஸ்திரிகளும், குருமட மாணவர்களும் திறந்த வெளியில் குப்புறப் படுத்து இத்தாக்குதலில் உயிர் தப்பியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மீண்டும் சாவகச்சேரியில்...

சாவகச்சேரி தாவடிப் பகுதியில் இம்மாதம் ஐந்தாம் திகதி மீண்டும் நடாத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் பதினைந்து பேர் காயமடைந்துள்ளனர். கடந்த இரண்டு வாரங்களில் சாவகச்சேரி தாவடிப் பகுதியில் 13 பேர் பலியாகி 65 பேருக்கு மேல் காயமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### உண்மைக்குப் புறம்பு

புத்தாண்டு தினத்தன்று மக்களின் கண்டன ஊர்வலத்தின் மீது குண்டு வீசிய சிறீலங்கா அரசாங்கம், அன்றைய தினம்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# மூவர் மட்டுமே இந்திய உள்சதி விசாரணையில்!

✡ 120 பேரென பொய் பிரச்சாரம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அமைப்பைச் சிதைப்பதற்கென இந்தியா வகுத்த உள்சதி தொடர்பாக கோ. மகேந்திரராசாவும், அவரின் மெய்க்காவலராக இருந்த சுரேசும், இந்தியாவின் ஊடகமாக விளங்கிய 'இஞ்சினியரும்' தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தை தனக்குச் சாதகமாக பயன்படுத்த முயலும் சிறீலங்கா அரசாங்கமும் அதன் ஆதரவுத் தொடர்பு சாதனங்களும் 120 பேருக்கு தண்டனை நிறைவேற்றத் திகதி குறிக்கப்பட்ட நிலையில் இருப்பதாக உண்மைக்குப் புறம்பான விசமப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன. ஆயினும் தமிழீழத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள், மூவர் மட்டுமே தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கின்றன. ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

## அரசற்ற நாட்டினம்
## Nation Without State

'இனத்தன்மையும் தேசியவாதமும்' (ETHNICITY AND NATIONALISM) என்னும் ஆய்வை மேற்கொண்ட நோர்வே ஒஸ்லோ பல்கலைக்கழக, சமூக மானிடவியல் சிரேஸ்ட பேராசிரியர் தோமஸ் கைலான் ஏரிக்சென் (THOMAS HYLLAN ERIKSEN) சென்ற வருட நடுப்பகுதியில் வெளியிட்ட தனது நூலில் தமிழீழ மக்கள் பற்றி மிகமுக்கியத்துவம் வாய்ந்த கருத்தொன்றை நிறுவியுள்ளார்.

தமிழீழ மக்கள் அரசற்ற நாட்டினத்தவர் என மிகத் தெளிவாகக் கூறும் அவர், தமிழீழ மக்களை நாட்டினம் (NATION) எனும் தகுதி பெற உரிமையுள்ள இனம் (PROTO NATION), என விஞ்ஞானபூர்வமாக நிறுவுகின்றார். அது மட்டுமல்ல, தமிழீழ மக்களுக்குத் தனியான அரசியல் தலைமையுண்டு எனவும், அந்தத் தலைமை, சொந்த நாட்டினமாகத் தமிழீழத்தவர் திகழ்கிறார்கள்; அவர்களை பிறர் ஆள முடியாது என உரிமை கோருகின்றது எனவும் இந்நூலின் 14 ஆம் பக்கத்தில் குறிப்பிடுகின்றார்.

இது சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் "இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதமே உண்டு" எனும் பௌத்த சிங்கள வெறிக் கோட்பாட்டிற்கு கிடைத்துள்ள அறிவார்ந்த ரீதியான மரண அடி எனலாம். சர்வதேச உலகின் சமூக -அரசியல் -பொருளியல் ஆய்வாளர்கள் பலர், மிகத் தெட்டத் தெளிவாக தமிழீழ மக்கள் ஒரு அரசற்ற நாட்டினம், அவர்களை பிறரால் அடக்கி ஆள முடியாது எனக் கூறவும், எழுதவும் தொடங்கிவிட்டனர். சுருக்கமாகச் சொன்னால் அறிவார்ந்த ரீதியாக தமிழீழம் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கான நுழைவாயிலில் நிற்கிறது. இந்த சர்வதேச அங்கீகாரமானது, சிறீலங்கா அரசாங்கத்திற்கும் அதன் ஜனாதிபதிக்கும் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இதனால் சிறீலங்கா ஜனாதிபதி, தான் புலிகளுடன் பேசப் போவதாக ஒரு மாயத் தோற்றத்தை, வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கு மீண்டும் கொடுக்கத் தொடங்கியுள்ளார். ஆனால் அவர் எப்படி பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றார் எனப் பார்த்தால், உண்மையில் பேச்சுவார்த்தை மேல் அவருக்கு அக்கறை உண்டா என்பது புலனாகும்.

1. "புலிகள் என்ன விடயம் குறித்து பேச்சு நடத்த விரும்புகிறார்கள் என்பது எமக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும். இன ரீதியிலான சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டுவிட்டது. வடக்கு கிழக்கில் அப்பாவி பொது மக்களை பாதுகாக்க எமது படையினர் இருக்கின்றனர். வடக்கு கிழக்குப் பிரச்சினையை சிலர் இனப்பிரச்சினை என்றே கூறுகிறார்கள். இனப்பிரச்சினையல்ல என்றே நான் கூறுகிறேன்.

2. நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் பங்கம் ஏற்படுவதை (அதாவது ஒற்றையாட்சியில் மாற்றங்கள் வருவதை) நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். (இன்றுள்ள அதே அரசியலமைப்பின் கீழ்) மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்களை மேலும் பரவலாக்குவது குறித்துப் பரிசிலனை செய்யத் தயாராக இருக்கின்றேன்"

இவ்வாறு, சிறீலங்கா ஜனாதிபதி தனது பௌத்த சிங்கள பேரினவாத அரசியலமைப்பை, தமிழீழத்தவர் மேல் திணிக்கக்கூடிய வகையில் நிபந்தனை விதிக்கிறார். நிர்வாகப் பரவலாக்கத்தை தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டிற்கு தீர்வாக காட்டப் பார்க்கிறார். தமிழீழ மக்களின் தேசநிர்மாணப் போக்கை திசை திருப்பப் பார்க்கிறார். இதற்காகவே நிர்வாகப் பரவலாக்கத்திற்கு உதவும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடாத்திவிட்டு அதை, தான் கூறும் அரசியல் தீர்வுக்கு அளிக்கப்பட்ட ஆதரவு வாக்குகள் எனக் கயிறு திரிக்கப் போகிறார். அத்துடன் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கிற்கு வெளியே அரச ஆதரவாளர்களாக உள்ளனர். எனவே இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதமே உண்டு. பயங்கரவாதத்தை களைய வடக்கு நோக்கி படை எடுக்கிறேன் என, தான் செய்ய முனையும் இன அழிப்புக்கும் ஆக்கிரமிப்புக்கும் நியாயம்காண்பிக்கத் துடிக்கிறார்.

இக்கட்டத்தில், ஒன்றை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டுள்ளோம். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை தான் விடுதலைப் புலிகள் அன்றும் இன்றும் என்றும் வலியுறுத்துவார்களே தவிர, நிபந்தனைகள் உடன் போடப்படும் எந்த சரணாகதி தூண்டிலிலும் சிக்க மாட்டார்கள் என்பதேயது. மேலும் வெறித்தனமான பேச்சுவார்த்தைகளாலும் நேர்மையற்ற தேர்தல்களாலும் கொடுந்தன்மையான இராணுவ அடக்கு முறைகளாலும் பொருளாதார ஒடுக்குமுறைகளாலும் 'தமிழீழம்' எனும் அரசு நோக்கிய அரசையோ, அல்லது தமிழீழ மக்களின் தேசியப் பாதுகாப்புக்கு பொறுப்பாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளையோ ஒருபோதும் அழிக்க முடியாது. "எனது மக்கள் தன்மானத்துடன் வாழக்கூடிய அரசியல் தீர்வே உண்மையான சமாதானத்தைக் கொண்டுவரும்" என்னும் தலைவர் பிரபாகரனின் கூற்றின் உண்மையை உலகு நன்கு இனங்காண்கிறது. அதுதான் அறிவார்ந்த ரீதியாக தமிழீழத்தை, உலக அறிஞர் ஏற்று வருவதன் அடிப்படைக் காரணி என்பதை, சிறீலங்கா ஜனாதிபதி உணர்ந்து கொள்ள வேண்டும். ■

# வெலிஓயாவில் குடியேற்றங்கள் நீடிக்கும்வரை போர் தொடரும்

### ■ பி. பி. சி. யின் கணிப்பீடு

"இஸ்ரேல், தான் ஆக்கிரமித்த பகுதிகளில் இஸ்ரேலியப் பொதுமக்களைக் குடியமர்த்தியது போல் வெலிஓயாவில், சிங்களவரை சிறீலங்கா அரசு குடியேற்றுகிறது. மக்கள் சனத்தொகை விகிதாசாரத்தை மாற்ற இக்குடியேற்றம் மேற்கொள்ளப்படுகிறது. வெலிஓயா குடியேற்றத்திட்டம் நீடிக்கும்வரை அப்பகுதியில் நடக்கும் போரும் நீடிக்கவே செய்யும்". இவ்வாறு இலங்கையின் வடக்கு கிழக்கைப் பிரிக்க அரசு போடும் திட்டம் என்ற தலைப்பில் பி. பி. சி. யின் முன்னாள் கொழும்பு செய்தியாளர் கிறிஸ் மொரிஸ் தனது ஆய்வுரையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் விபரிக்கையில்; இலங்கையில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் செய்தித் தலைப்பாக வரும்போது, அச்செய்தி ஒன்று யாழ்ப்பாணம் மீது நடந்த தாக்குதல் செய்தியாக இருக்கும். அப்படியில்லாவிட்டால் கொழும்பில் நடந்த தாக்குதல் செய்தியாக இருக்கும். ஆனால் வடக்கு கிழக்கு எல்லைக் காட்டுப் பகுதியில் நடக்கும் போர் பற்றிய செய்தியாக அவை இருக்கமாட்டாது.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் அந்தக் கேந்திர இடத்தை சிங்களத்தில் 'வெலிஓயா' என்றும் தமிழில் மணலாறு என்றும் அழைக்கின்றனர்.

வெலிஓயாப் பகுதி ஒடுக்கமானது. இதில் சிங்களவரைக் குடியேற்றினால் தமிழரின் வடக்கு கிழக்கு இணைந்த தாயகக் கோட்பாட்டை அரசியல், இராணுவ ரீதியில் முறியடித்து விடலாம் என அரசு சதித்திட்டம் தீட்டியுள்ளது. இதையே அரசு தனது தந்திர உத்தியாகச் செயற்படுத்துகின்றது. இனப் போருக்கு அடிநிலை காரணமாக அமைந்துவிட்ட கசப்பான விவகாரங்களில் அரசே முன்னின்று, இவ்வாறு சிங்களவரைக் குடியேற்றுவது வெறுப்பேற்றும் விடயம். வெலிஓயாவில் விரிவாக்கப்பட்ட விவசாயத் திட்டம் என்ற பெயரில் அங்கு குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு துப்பாக்கி ஏந்த, அரசு நபருக்கு நாளொன்றுக்கு ஐம்பது ரூபா வழங்குகிறது. வெலிஓயாவை உண்மையில் ஒரு இராணுவ முகாம் என்றே கூறலாம். அங்கு நீர்ப்பாசன அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட 150 மில்லியன் ரூபா இராணுவ வரவு செலவுத் தொகைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ■

# 16, 000 இந்தியப் படையினர் இலங்கையில் பலியாகினர்

### ■ அமைச்சரவை ரகசியமாம்

"வடக்கு கிழக்கில் இந்திய இராணுவத்தினர் தங்கியிருந்த, குறுகிய காலத்தில் சுமார் பதினாறாயிரம் இந்தியத் துருப்புக்கள் விடுதலைப்புலிகளின் தாக்குதலால் கொல்லப்பட்டுள்ளனர்". இவ்வாறு மத்திய மாகாண ஆளுநர் பி. சி இம்புலான தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நீண்டகாலமாகப் பாதுகாக்கப்பட்டுவந்த இரகசியம் இது என்றும் முதன்முறையாக இந்த இரகசியத்தை தான் வெளியிடுவதாகவும் கூறியுள்ளார்.

தற்பொழுது விடுதலைப்புலிகள் சிறீலங்கா இராணுவத்தினரை வகைதொகையின்றிக் கொன்று குவிக்கின்றனர். இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கையில் தொடர்ந்தும் தங்கியிருந்தால் எமது படையினர் இவ்வாறு பெருமளவில் கொல்லப்படுவது தவிர்க்கப்பட்டிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ■

# சிசிலின் துரதிர்ஷ்டம்

இனப்பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையல்ல. அதனை விரைவிலேயே தீர்த்து வைத்துவிட முடியும் என சிறீலங்கா ஜனாதிபதி பல மாதங்களுக்கு முன் பேசத் தொடங்கியபோது, இவரது கணிப்பீட்டில் தப்பு இருக்கின்றது என்று தெரியத் தொடங்கியதுதான். ஆயினும் இது சிங்கள அரசியல்வாதிகளின் வழமையான அரசியல் 'ஸ்ரண்ட்' என்ற சந்தேகமும் சிறியளவில் இருக்கத்தான் செய்தது. ஆனால், சிறீலங்கா ஜனாதிபதி தற்பொழுது குழம்பிப்போய் இருப்பதைப் பார்க்கும் போது அவரது கணக்கு தப்புக் கணக்கே என்பது தெளிவாகத் தெரியவருகின்றது.

சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா தொடர்ந்து ஏற்பட்ட இராணுவத் தோல்விகளினால் மூன்று வருடங்களில் இராணுவக் கட்டமைப்பில் இரண்டு தடவைகள் மாற்றம் செய்திருந்தார். ஆனால், தற்போதைய ஜனாதிபதி டி. பி விஜயதுங்க ஏழு மாதத்திற்குள் உட்பட்ட தனது ஆட்சிக்காலத்தில் இரு தடவை இராணுவக் கட்டமைப்பில் மாற்றத்தைச் செய்திருப்பதிலிருந்தே அவரது குழப்பத்தையும், அவரது நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுப் போனதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

சிறீலங்காவின் தற்போதைய இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ண ஒரு வகையில் துரதிஸ்டசாலிதான். ஏனெனில், அவரது கையில் அதிகாரங்கள் இருந்த போதெல்லாம் இராணுவம் மிகப் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்தது. ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சிக்காலத்தின் போது அவரிடம் சிறிது காலமே (1992 மார்ச் தொடக்கம் ஒக்டோபர் வரை) முழுமையான அதிகாரம் இருந்தது. அக்காலத்திலேயே, அராலிக் கண்ணிவெடித் தாக்குதலில் லெப். ஜெனரல் கொப்பேகடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். அதையடுத்து கட்டைக்காட்டில் ஐந்து கோடி ரூபாவிற்கு மேலான ஆயுதத்தையும் இழக்க வேண்டி வந்தது. இவையிரண்டும் சிசில் வைத்தியரட்ணவின் தோல்வியாகவே விமர் சிக்கவும் பட்டன.

பின்னர் கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு அதிகாரம் மாற்றப்பட்டது. ஆனால் மண்கிண்டிமலைத் தாக்குதலுடன் ஜெனரல் கமில்டன் வனசிங்கா தப்பித்துக் கொண்டார். மிக விரைவில் வெற்றிபெற வேண்டும் என்ற ரீதியில் செயற்பட்ட டி. பி விஜயதுங்க, மீண்டும் அதிகாரங்களை இராணுவத் தளபதியிடம் ஒப்படைத்தார்.

இந்நிலையில்தான், பூநகரி- நாகதேவன்துறை படைத்தளத்தின் வீழ்ச்சிக்கு சிசில் வைத்தியரட்ண பொறுப்பேற்க வேண்டி வந்தது. இவ் வரலாற்றுத் தோல்வியை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. என்றாலும், பொறுப்பிலிருப்பவர் பொறுப்பேற்க வேண்டியது கட்டாயமானதே.

அதாவது சிசில்வைத்தியரட்ண பொறுப்பாக இருந்தால் என்ன? கமில்டன் வனசிங்க பொறுப்பாக இருந்தால் என்ன? பூநகரி முகாம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டே இருக்கும். பூநகரி முகாம் அதன் பலவீனத்தால் விழவில்லை. பாதுகாப்பு ஏற்பாடுகள் நிறையப் பெற்றிருந்த முதலாம்தர முகாமாகவே அது இருந்தது. அங்கு பீரங்கிப் படைப் பிரிவும் நிறுத்திவைக்கப்பட்டேயிருந்தது. இந்நிலையில் முகாம் விழுந்தமை, விடுதலைப் புலிகளின் தாக்குதலின் உக்கிரத்தினாலும் யுக்தியினாலுமே ஒழிய, முகாமிலிருந்த பொறுப்பதிகாரிகளின் கவலையீனத்தினாலேயோ, இராணுவத் தளபதியின் பொறுப்பின்மையாலேயோ அல்ல.

இருப்பினும், இராணுவத் தோல்விகள்- பின்னடைவுகள் ஏற்படும் போது அதற்குப் பொறுப்பான தளபதிகள், அமைச்சர்கள், அரசாங்கங்கள் என்பன பதவி விலகுவது என்பது ஜனநாயக மரபு. இதற்கு உலகில் பல உதாரணங்களாக பல சம்பவங்களும் நடந்ததுண்டு. இந்தியாவில் கூட இதற்கான உதாரணங்கள் உள்ளன. ஆனாலும், சிறீலங்காவில் பூநகரித் தோல்விக்கு எவரும் பொறுப்பேற்றுப் பதவி விலகாமை பெரும் ஆச்சரியம் அளிக்கக்கூடியதல்ல ஆனால் பொறுப்பேற்க வேண்டியவர்கள், ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்துவதுதான் வேடிக்கையானது.

இதற்கிடையில், பதவி விலக வேண்டியவர்கள் பதவி விலகாமலும், பொறுப்பேற்க வேண்டிய அரசாங்கம் பொறுப்பேற்காமலும் புதியவர் ஒருவரின் தலையில் சுமைகள் மாற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் தப்பித்துக் கொண்டோம் எனக் கருதுகிறார்களா? அல்லது வெற்றி கிட்டும் என எண்ணுகிறார்களோ? தெரியவில்லை.

ஆனால், புதியவர் சேவைக் காலத்திலேயே தமிழீழப் போராட்டம் தோன்றி வளர்ந்தது என்பதும், இன்றைய நிலையை அடைந்தது என்பதையும், அடக்கும் முயற்சியில் புதியவரும் தோற்றுப் போனவர் என்பதையும், நியமித்தவர்கள் மறந்து போனதுதான் வேடிக்கையானது. ஆகையினால் புதியவரான மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவின் தோல்விக்குப் பிறகு யாரைப் பொறுப்பாகப் போடலாம் என்பதை தற்பொழுதே யோசனை செய்வது அவசியம். ■

நன்றி: ஈழநாதம்

# இனத்தின் விடிவிற்கு போராடுவது நம் அனைவரின் கடமை

■ ஆயர் D. J. அம்பலவாணர்.

"தமிழ் மக்களாகிய நாம் ஒரு தேசிய இனம், எமக்கு என்று ஒரு நிலம் உண்டு. எனவே எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, விடிவிற்காக போராட வேண்டியது நம் அனைவரின் கடமை. கிறிஸ்தவர்களும் இவ் விடுதலையைப் பெற போராட வேண்டும், உழைக்க வேண்டும்", என்று தென்னிந்தியத் திருச்சபை இளைப்பாறிய ஆயர் D. J. அம்பலவாணர் அவர்கள் யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் ஆற்றிய சிறப்புரையில் கூறினார்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் போது தம் இன்னுயிரைத் தியாகம் செய்த தியாகிகளின் நினைவு நாளாக நவம்பர் 27ம் திகதி 'மாவீரர்தினம்' தமிழீழம் எங்கும் நினைவு கூரப்பட்டது. அன்றைய தினம் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இம் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வும், சிறப்புரையும், கலந்துரையாடலும் இடம் பெற்றன. இந் நிகழ்வுக்கு யாழ் நகரில் உள்ள குருக்கள் பலரும், ஏராளமான துறவியர்களும், மற்றும் கிறிஸ்தவ சபைகளின் குருக்களும் வருகை தந்திருந்தனர்.

இந் நிகழ்வின்போது சிறப்புரையாற்றிய முன்னாள் தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் அதி. வந். டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் "இன்றைய விடுதலைப் போராட்டத்தில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு" பற்றி எடுத்துரைத்தார். காலை 9.00மணிக்கு ஆரம்பித்த இம் மாவீரர் நினைவு நிகழ்வில் தமிழ் மக்களின் உரிமைக்காக, விடுதலைக்காக தம் உயிரை அர்ப்பணித்த அனைத்துப் போராளிகளும் நினைவு கூரப்பட்டனர். மரணித்த மாவீரர்களின் நினைவாக ஈகச் சுடரை ஆயர் அம்பலவாணர் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து குருத்துவக் கல்லூரி மாணவர்களினால் மறைந்த மாவீரர்களுக்கு கவிதா அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் ஆயர் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

நான் போராடுகிறேன், ஆகவே நான் உயிர் வாழ்கிறேன். (I STRUGGLE. THEREFORE I AM) என்று பெனடிக்ற் குறோசே என்னும் மெய்யியலாளர் கூறுகிறார். ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் போராடிக் கொண்டுதான் இருக்கிறான். தமிழ் மக்களாகிய நாமும் இன்று விடுதலை இழந்தவர்களாக அதைப் பெறப் போராடிக் கொண்டிருக்கிறோம். எம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் இந்தப் போராட்டத்தில் தங்கியுள்ளது.

கிறிஸ்தவர்கள் போராட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றாமல் நடுவில் நின்றுகொண்டு போராடும் இரண்டு பகுதியாருக்கும் இடையில் பாலத்தை, ஒப்புரவை ஏற்படுத்த வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். நடுவில் நின்றுகொண்டு பாலம் கட்ட முடியாது. இறைவன் துன்புறும் மக்கள் பக்கம் நிற்பதால், கிறிஸ்தவர்களாகிய நாமும் எம் மக்கள் பக்கமே நிற்க வேண்டும் என்று ஆயர் அவர்கள் கூறினார்.

இறுதியில் கருத்துத் தெரிவித்த குருத்துவக் கல்லூரி முதல்வர் அருள்திரு S. J. இமானுவேல் அடிகளார், "இறைவன் விரும்பும் முழு மனித விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுகிறிஸ்துவின் சீடத்துவத்தை தன்னில் புதுப்பித்து, தார்மீக வழியில் தனது விசேட பங்களிப்பை இப் போராட்டத்திற்கு அளிக்க வேண்டும்" என்று கூறினார். ■

## கலைஞர் கருணாநிதியின் தேவையற்ற பிரச்சாரம்

24-09-1993 இல் வெளியான 'களத்தில்' பத்திரிகையில், "தமிழ் நாட்டு அரசியலில் மீண்டும் தமிழ்த் தேசியவாதம்" என்ற தலைப்பில் வெளியான கட்டுரை, தமிழ்த் தேசிய வாதம் தமிழகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பான ஒரு ஆய்வே. நிலைமை இப்படியிருக்க, அக்கட்டுரையைக் குறிப்பிட்டு 'களத்தில்' பத்திரிகையையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தேவையற்ற முறையில், தி. மு. க. உட்பூசல் பிரச்சினையில் சம்பந்தப்படுத்தி கலைஞர் கருணாநிதி பேசியும், எழுதியும் வருவது கண்டனத்துக்குரியது. இது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், 'களத்தில்' பத்திரிகை, மற்றும் 'உலகத் தமிழர்' போன்ற பத்திரிகைகளுக்கும் களங்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாகும் ●

## வடக்கில் கடற்படை மேலாதிக்கம் மீண்டும் ஏற்படுத்த முயற்சி

வடபகுதி கடலில் மீண்டும் சிறீலங்காக் கடற்படையின் மேலாதிக்கத்தை ஏற்படுத்தவும், இராணுவக் கவசப்படையினை அபிவிருத்தி செய்யவும் தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் வடபகுதியில் நடந்த போர்களில் கவசப்படை இழந்த டாங்கிகள், கவசவாகனங்களுக்கு ஈடாக புதிய கவசப் போர் வாகனங்களை புதிதாக கொள்வனவு செய்யவேண்டியிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், அடுத்த வருடத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக அரசு மேலும் நிதியை ஒதுக்கீடு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியது. ■

## சோளப் பயிர்செய்கை ஊக்குவிக்க நடவடிக்கை

1993-94 கால போகத்தில் சோளப்பயிர்ச்செய்கையை யாழ் மாவட்டத்தில் ஊக்குவிக்கும் முகமாக, யாழ் மாவட்ட தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஒரு பரப்புக்கு மேற்பட்ட நிலத்தில் சோளப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பயிரின் முக்கிய வளர்ச்சிக் காலத்தில் வரட்சி நிலவுமாயின், நீர்ப்பாசனம் செய்ய ஏதுவாக எரிபொருள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு உற்பத்திக் குழுப் பிரிவிலும் முன் மாதிரிப் பயிர்ச்செய்கைத் துண்டங்களில் சோளம் பயிரிடுவதற்கும் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுவதற்கும் சுமார் 210 கி. கிராம் சோளம் விதை இலவசமாக வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு வதிவிட வேளாண்மைப் போட்டியில் பங்குபற்றுபவர்களுக்கு சோளம் விதை இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. யாழ் மாவட்டத்தில் சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவரிடமிருந்தும் அவர்களால் விளைவிக்கப்படுகின்ற சோளம் முழுவதையும் அன்றைய சந்தையின் விலையின்படி கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. ■

## 250 கிலோ குண்டுகளையே கிளிநொச்சியில் புக்காரா வீசியது

கிளிநொச்சியில் விமானத்திலிருந்து 250 கிலோ கிராம் நிறையுடைய குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது. சிறீலங்காவின் விமானப்படையைச் சேர்ந்த புக்காரா விமானமொன்றும், சியாமசெட்டி விமானம் ஒன்றும் அண்மையில் கிளிநொச்சியில் கிராமங்களைச் சுற்றி குண்டு வீசித் தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதலின் போது வீழ்ந்து வெடித்த குண்டு ஒன்று 250 கிலோ கிராம் நிறையுடையதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குண்டின் பாகத்தில் குறிக்கப்பட்டிருந்த குறிப்புகளை அவதானித்த போது இது தெரியவந்துள்ளது. ■

## வைத்தியசாலை மீது குண்டு வீச்சு

■ நோயாளர் நலன்புரிச் சங்கம் கண்டனம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலயத்தினுள் சிறீலங்கா விமானப்படையின் சுப்பர்சொனிக் விமானங்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதான வாயிலுக்கு மிக அருகில் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய குண்டுகளை வீசி பெரும் அனர்த்தத்தை விளைவித்த செயலினை யாழ். அரச பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இது தொடர்பாக இச் சங்கத்தினர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

எமது மண்ணின் பல்வேறு முனைகளிலிருந்தும் பலதரப்பட்ட நோய்களுக்கும் குண்டு வீச்சு மற்றும் எறிகணை வீச்சு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி சத்திர சிகிச்சைக்காகவும், வெவ்வேறு மருத்துவ மனைகளிலிருந்து மேலதிக சிகிச்சைக்காகவும் யாழ். போதனா மருத்துவமனையை நாடியே வரவேண்டியுள்ளது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

தீபாவளி தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சானது யாழ். போதனா மருத்துவ மனையின் சிகிச்சைக் களங்களை மிகவும் மோசமாகப் பாதித்துள்ளது.

சிகிச்சை பெறவந்த நோயாளர்களையும், பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மருத்துவப் பணியாளர்களையும் மற்றும் பொதுமக்களையும் பீதியுறச் செய்திருப்பதுடன் பல்வேறு மட்டங்களில் உளவியல் ரீதியான பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் முள்ளியவளை அரச மருத்துவமனை மீதும், கிளிநொச்சி அரச மருத்துவமனை மீதும் சுப்பர்சொனிக் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தியமையையும் குழந்தை பிரசவித்த தாய் இறந்தமை, பெருந்தொகையான நோயாளிகள் காயமடைந்த சம்பவங்கள் இடம் பெற்றமையையும் இச்சங்கம் கண்டித்துள்ளது.

மேலும் நொந்துபோயிருக்கும் நோயாளர்களது உள்ளங்களை வெந்துபோகச் செய்யும் இத்தகைய காட்டுமிராண்டித்தனமான அநாகரிகமான போக்கு உடன் நிறுத்தப்பட்டு நோயாளர்களின் நலன் பேணப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அமைப்புக்களை இச் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. ■

## விடுப்பில் செல்லும் விரிவுரையாளர்கள் மீண்டும் கடமைக்கு திரும்புவதில்லை

- பேராசிரியர் பாலச்சந்திரன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சிலர், ஏழாண்டுக்கு ஒரு முறை வரும் ஒரு வருட விடுப்பில் வெளிநாடுகளுக்குச் சென்றால் நாடு திரும்புவதில்லை. அங்கேயே தங்கி விடுகிறார்கள். இன்னும் சிலர் கொழும்பு சென்றால் மீளவும் கடமைக்கு வருவதில்லை. இந்த வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இங்கு விரிவுரையாளர்களுக்கும் மற்றும் பேராசிரியர்களுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. இதே நிலைதான், விஞ்ஞான பீடத்திலும் கலைப்பீடத்திலும் உள்ளது. விரிவுரையாளர்கள் பற்றாக்குறைவாகவே இருக்கிறார்கள். கலைப்பீடத்திலிருந்து வெளியே போன ஏழு ஆசிரியர்கள் இன்றுவரை கடமைக்குச் சமூகம் தரவில்லை.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியல்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு நடத்திய கிராம அலுவலர் பயிற்சிநெறி நிறைவு நாள் விழாவில், தலைமை உரை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். விழா பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது.

அவர் மேலும் பேசும் போது, தமிழ்நாட்டில் புயல் அபாயம் பற்றித் தெரிந்ததும் தமிழ்நாட்டு அரசு தீவிரத்துடன் செயற்படுகிறது. வடபகுதியில் புயல் வீசும் என்று வானிலை அபாய அறிவிப்பு வெளிவந்தது. ஆனால் சிறீலங்கா அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொள்கிறது. அதனால் அடிமட்ட அளவில் கிராம அலுவலர்களே வெள்ளப் பெருக்கு, புயல் அபாயம் சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க வேண்டியுள்ளது எனக் கூறினார்.

புறநிலைப் படிப்புகள் அலகு இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் பேசும் போது, யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகில் இரண்டு விரிவுரைத் தொடர்களிலும், ஆறு கற்கை நெறிகளிலும் இதுவரை 3,500 பேர் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளார்கள் என்றார். ■

### வருந்துகின்றோம்

கடந்த இதழில், பூநகரி முகாம் தகர்ப்பில், முதலாம் நாளில் வீரச்சாவடைந்த லெப். கேணல் நவனீதன் (தில்லையம்பலம் திருலோகநாதன்) கனகராயன் குளம், வவுனியா என்பதற்குப் பதிலாக மேஜர் நவனீதன் என தவறுதலாக பிரசுரமாகியிருந்தமைக்காக வருந்துகின்றோம்.

## சிறீலங்கா களங்கம் கற்பிக்கிறது. 'பாற்றரி' கடத்தலில் தொடர்பில்லை

- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவையை வடக்குக்கு நிறுத்துவதற்காக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலர் கிறனன் பெல்டர், 'பாற்றரி' கடத்தலில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் அவரை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கான வெளியேற்றல் கடிதத்தை, ஜெனிவாவில் தாக்கல் செய்யப் போவதாகவும் பத்திரிகைகளில் செய்தி பிரசுரிக்க வைத்தது.

இதனை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மறுத்துள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பாதுகாப்பில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் எடுத்து வரப்பட்ட வேளை இறுதியாக வந்த கார் இலங்கையர் ஒருவரால் ஓட்டிவரப்பட்டதெனவும், அக்காரிலேயே நானூறு பற்றரிகள் இருந்ததென, சிறீலங்கா இராணுவத்தின் வவுனியா ரம்யா கவுஸ் சோதனைச் சாவடியினர் அறிவித்ததாகவும் அதற்கும் சர்வதேச சங்கத்தினருக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும் கூறும் செஞ்சிலுவைச் சங்க அறிக்கையில், வேண்டுமென்றே செஞ்சிலுவைச் சங்கத்திற்கு களங்கம் ஏற்படக் கூடிய முறையில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனக் கூறியுள்ளது. ■




அத்தியாயம் - 3

**இது ஒரு புதிய போர்ப்பரணி !**
**பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை - அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).**

**அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.**

சந்திரோதயம் புலரத் தொடங்கியது. நட்சத்திரங்கள் கண்சிமிட்டின. இவை அனைத்தின் ஊடே எம் பிரயாணம் தொடர்ந்தது.

வீதி மிகவும் கேவலமாக இருந்தது. திருத்தப்பட்ட வாகனம் மீண்டும் பழுதடையலாம் என்பதனால் ஏனைய ஐந்து வாகனங்களையும் முன் அனுப்பிவிட்டு, பின்னே ஆறுதலாக வந்தோம். நல்ல இடங்கள் என இதயன் கூறிக்கொண்டான்.

எனது சிந்தனையை வசந்தனே மொய்த்திருந்தான். சலாம் ஒன்றும் பேசாமல் வீதியைப் பார்த்து கிடங்குகளைத் தவிர்த்து வெட்டிக் கொண்டிருந்தான். முறிப்புக் குளம் கடந்து பெரிய பாலங்களைக் கடந்து பூதன் வயலுக் கூடாகத் தண்ணீரூற்றை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தோம்.

"மச்சான் இதுதான் கற்பகப் பிள்ளையார் கோவில். சின்னனில இங்க இருக்கேக்க அடிக்கடி வாறனான்கள். உம், இஞ்ச ஒரு கிழவன் இருந்தது. வெள்ளிக்கிழமைகளில கூட்டுப் பிராத்தனை நடக்கிறது".

சங்கக்கடை, மில் எல்லாவற்றையும் கடந்த வாகனம் ஒரு பெரிய வாய்க்கால் மேல் ஏறியது. "உதிலதான் முந்தி இருந்தனாங்கள்" என்று சுட்டிக் காட்டினேன். எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு இவ்விடத்தைப் பார்க்க சந்தோசமாய் இருக்கு. உந்த வேம்பிலதான் குரங்குகள் படையாய்த் தங்கிறதுகள். சின்னனில எனக்குச் சரியான பயம். வீட்டுக்கு முன் போர்ட்டிக்கோவில் அப்பாவும் இன்னும் நாலைந்து பெரியவர்களும் ஒன்றாய்ச் சேர்ந்து கதைப்பினம்.

இவ்விதம் பல நினைவுகளுக்கும் கதைகளுக்குமிடையே பொழுது ஓடிக்கொண்டிருந்தது. எங்கள் வாகனங்களும் முன் சென்றுகொண்டிருந்தன. முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியைக் கடந்து அப்பால் தொடர்ந்தோம். மாவீரர் தினத்தில குடுக்கிற அடியோட கட்டாயம் பயப்பிடுவான். எங்கட இடத்தில எங்கேயும் இருக்கேலாத நிலை கட்டாயம் வரும். மணலாறு மக்களை நினைத்துக் கொண்டேன். கரிபட்ட முறிப்புக் கடக்க, "சரியா நித்திரை தூக்கி அடிக்குது" என இதயன் அலுத்துக் கொண்டான். எனக்கும் தூக்கியடித்தது. சலாம் மட்டும் சிரித்தபடி, "நான் நித்திரை தூங்கினால் என்ன நடக்கும் தெரியுமே" என்றான்!

அருகே ஓடிய பெரிய கால்வாயைக் காட்டினான். அடப்பாவி, நித்திரை தூங்கிடாதே என்று எச்சரித்தோம்.

**"உதென்ன மச்சான் றோட்டைக் கிண்டி புளக் போட்டிருக்கிறான்கள்?"**

**"இதுதான்ரா ஒட்டுசுட்டான் பொலிஸ்ரேசன். முந்தி ஆமியும் இருந்தது".**

"பிறகு எப்ப அடிச்சது?"

"90 சண்டை தொடங்கியவுடன் எங்கடயள் கொமாண்டோ ரொட் பண்ணி பிடிச்சவங்கள். பிறகு கட்டடங்களை பிரட்டினது".

**"முந்தியுமொருக்கா அடிச்சதோ?"**

**"ஓ, அது 85 லை இருக்கோணும். அதுவும் முறையான அடி! எக்கச்சக்கமான ரைபிள்கள் எடுத்தது. சபா அண்ணை, லோறன்ஸ் அண்ணை ஆட்கள்தான் நின்று அடிச்சவை".**

முகாமில் ஆக்கிரமிப்புச் சின்னங்கள் இன்னும் எஞ்சித் தொங்கிக் கிடந்தன. அதே தொடரான மதில்கள் இடையிடையே உடைந்தும் சிதைந்தும் கிடந்தன.

சில ஒரு தொடராய் வீழ்ந்து கிடந்தன. அவற்றின் நடுத்தூண்கள் மட்டும் வானைப் பார்த்தபடி நின்றன. 'இராணுவ தடைமுகாம்' எனும் தகரம் சிதைந்து போய் ஓரமாகக் கிடந்தது.

"சிலோ பண்ணு மச்சான், கொஞ்சம் பார்ப்பம்".

நித்திரை ஒருதுளிகூட முகத்தில் இல்லை. முகாம் எனக்கு ஓரளவு தெரியும்.

1986 இல் இராணுவம் எனது சகோதரனைக் கைது செய்து இதே முகாமில்தான் வைத்திருந்தார்கள். அப்போது நான் சிறுவனாகையால் அம்மாவுடன் வந்து அழுவேன். வேறு என்ன செய்ய? இதுதான் மச்சான் பெரிய வாசல். அவன்ற கவேட்றக் அதுகள் போறதுக்கு மட்டும் திறப்பாங்கள். உதுக்கு முன்னால சக்கை விட்டாலுமெண்டு பெரிய கிடங்கு வெட்டி வைச்சிருந்தான்கள்.

அந்தா அதில தெரியிற பாலை இருக்கேல்ல? அதிலதான் முதல் சென்றி. அப்ப மண்மூட்டையை விட மரங்கள், செங்கல்லுகள்தான் கூட அடுக்கியிருப்பான்கள். சில நேரம் மரங்களில கூட இருப்பான்கள். முத்தையன்கட்டு றோட் ஏறுற இடத்தில மற்றகரை சென்றி நிற்பான். இடையில ஒரே றோட்டை பள்ளம் பிட்டி ஆக்கி இருப்பான். றோட்டை மறிச்சு வளைஞ்சுதான் போகவேணும். குறுக்க றம் அடுக்கியிருப்பான். அங்கபார் பெரிய தண்ணீர்த் தாங்கி பிரண்டு கிடக்கல்லே? உது பெரிசா இருக்கேக்க அதிலைதான் மண்மூட்டை அடிச்சு ஓ. பி. சென்றி இருக்கிறவன். உதுலை இருந்தா எல்லா இடமும் வடிவாத் தெரியும். தலையைக் காட்டினா வேட்டை நாய் மாதிரி பாய்ஞ்சு வருவான்கள். உங்க பார் கட்டிடங்களை எவ்வளவென்று!

எதில் எங்க இருப்பானென்று தெரியாது. சுத்தி முள்ளுக்கம்பி அடிச்ச பிறகு முள்ளுக்கம்பியை சுத்தி றோலாய்ப் போட்டிருப்பான்கள் அதற்குப் பிறகு பொறிக் கிடங்கு. உதப் பார்க்கத்தான் ஞாபகம் வருகுது. ஒரு பொடியனைப் படுத்தினபாடு.

எங்க அண்ணனைப் பிடிச்சுக் கொண்டு போய் நாலாம் நாள் விடிய ஒரு ஆறு மணியிருக்கும். முதலாவது பஸ்சில வந்திட்டம். விடிய சரியான பனி மரமே நடுங்கும். வந்து சென்றியக் கேட்டுக்கொண்டு சும்மா நிற்க, நான் பார்த்தன். **முள்ளுக் கம்பி இருக்கல்லே அதை நிலத்துக்கு மேல அரையடி உயரத்தில அடித்துவிட்டு, முள்ளுக்கு மேல ஒரு பொடியன குப்புறக் கிடத்தி கட்டி வைத்திருந்தான்கள். பனியில் ஆடாமல் அசையாமல் கிடந்தான்.**

**கொஞ்சத்தால மச்சான், ஏழெட்டுப் பேர் வந்தான்கள். நடுவில பெரியவன் ஒருவன் எருமை மாதிரி வந்தான். வந்தவன் ஏறி உழக்கினான்.** "ஐயோ" என்று பொடியன் கத்தினான். மச்சான் யானை கூட இப்படி சத்தமாய் கத்தாது, அப்படி இருந்ததடா. முதுகில ஏறி நின்று பிடரி மயிரைப்பிடித்து மேல இழுக்க குதிரைச் சவாரி விட்டான். அவன் கத்தின சத்தம் கேட்கேலாது. மயிரை விட்டிட்டு நெத்தியில பிடிச்சு ஒரேயடியா இழுத்துவிட்டான். "அம்மா" என்ற சத்தம் அரைகுறையாய் நிற்க கழுத்து முறிஞ்ச கோழி சேவல் மாதிரி இழுத்துக் கொண்டான். பிறகு ஆடவேயில்லை. கம்பிக்கு கீழால ரத்தம் சொட்டுச் சொட்டாய் ஊத்திச்சு. அம்மா என்னையும் இழுத்துக்கொண்டு வெளியால ஓடினா.

திரும்பிப் பார்த்தேன் இரண்டு பேர் அவனை கழட்டிக் கொண்டு போனாங்கள். அவனுக்கு கம்பி குத்தி ரத்தம் வடிந்தது. கழுத்து நாடியோட முறிந்து கிடந்தது. அப்பதான்ரா பார்த்தன் வட்ட முள்ளுக்கம்பி இருக்கல்லே? அந்த வட்டத்துக்குள்ள ஒரு பதினைஞ்சு பேரை அடைச்சு வைச்சிருந்தான்கள். பெரிய பொல்லுகளால உருட்டி உருட்டி அடிச்சான்கள் "வாமோனை நாளைக்கு வருவம்" - அம்மாவுக்கு விம்மல் பெரிய அழுகையாய் வெடிக்க என்னை இழுத்துக் கொண்டு ஓடினாள்.

சென்ரியில நின்றவன் விசிலடிச்சு சிரிச்சான். என்னால என்னன்று மறக்கிறது?

நான் உம் என்று முள்ளுக்கம்பியருகே போய்ப் பார்த்தேன். கறளோ என்னவோ தெரியவில்லை. சிவப்புச் சிவப்புத் திட்டாய்த் தெரிந்தது. கோபமாய் காலால் உதைத்துவிட்டு இதயனுடன் திரும்பி நடந்தேன். கட்டடங்கள் தலைகுப்புறக் கிடந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் பலகை, நிலவில் எம்மைப் பார்த்துச் சிரித்தது. சந்தியில் மாவீரர்களின் படங்கள் சிரம் தாழ்த்திக் கொண்டோம்.

வீதியை விட்டு மெல்லிய ஒழுங்கையூடாகத் திரும்பினோம். நல்ல காடாகப் பார்த்து நிற்பாட்டு. இனி விடியப் போகுது. பிறகு வீண் பிரச்சினை. சலாமிற்குக் கூற, அவன் அடர்ந்த காட்டில் ஊடுபாதை தேடினான்.

"உதுக்க விடு"

மெதுவாய் றிவேஸ் செய்து, கச்சிதமாக ஒன்றும் தெரியாதபடி உள்ளே கொண்டு சென்று நிற்பாட்டினான். மூவரது காதுகளையும் மழைத்தொப்பி மூடியிருந்தாலும் குளிரால் உடல் நடுங்கிக் கொண்டேயிருந்தது. பனியால் வரிப்புலி உடை தோள்மூட்டுப் புறமாக நனைந்து குளிரை அதிகமாக்கியது. நேற்றுப் பின்னேரம் 6.00 மணிக்குச் சாப்பிட்டது. இப்ப நேரம் 3.20. இன்னும் ஒன்றும் சாப்பிடவுமில்லை; சூடாக குடிக்கவுமில்லை. இதன் தாக்கம் மூவரையும் வெகுவாய்ப் பாதித்தது.

"டேவிட் அண்ணராக்கள் எங்கேயோ தெரியாது. விடிந்தவுடன் 7.00 மணிக்கு தொடர்பெடுக்க வேணும்". சலாம் கூற "உம்" என்ற நான் படுக்க இடம் தேடினேன்.

"சரியான பனியடா, மரத்திலிருந்துகூட சொட்டுச்சொட்டாய் ஊத்துது. உதுவழிய படுத்து விடிய புத்தி பிசகும்" என்றான் இதயன்.

நித்திரை தூக்கலில் சாக்குகளை இழுத்தபடி நான் முன்போனேன். பசி வயிற்றைக் கிள்ளியது. தூரத்தே யானைகள் பிளிறும் ஓசை கேட்டது.

"எத்தனை சாக்கடா கிடக்குது?" கவலையுடன் கேட்டான்.

"இரண்டு தான்ரா கிடக்குது. நீங்கள் படுங்கோ" என்றேன்.

"விசரா, விரிச்சுப்போட்டு மூன்றுபேரும் படுப்பம்".

"ஆ... ஆ... ஐ... ஐயோ!" காலையையும் கையையும் உதறினான் இதயன். என்னடா என்று ரோச்சை அடித்தோம். உடம்பு எல்லாம் முசுறுக் கூடு ஒன்று விழுந்து சிதைந்து, உடல் முழுவதுமாய்ப் பரவி கடித்துக் கொண்டு தற்கொலை செய்தன. வெளியால வா, சேட்டைக் கழற்றிப்போட்டுத் தட்டு. மூவரும் சேர்ந்து தட்டிவிட்டோம். இடையிடையே "ஆ... ஆ..."- என்றான். பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

இவனுடைய நண்பர்களெல்லாம் இனிய கனவுடன் எங்கோ உல்லாசமாய் உறங்குவார்கள். அவர்களுக்கு இது 3 ஆம் சாமமாய் இருக்கும்.

அப்படியானால் இவன் காலத்திடம் தோற்றவனா? வாழ்க்கை இவனை வஞ்சித்ததா? இல்லையில்லை, வரலாறு இவனுக்கு வாழ்க்கையைக் காட்டிவிட்டது. **இனிவரும் சந்ததி ஒய்வாய் சுவாசிக்க இவர்கள் இதற்குள் இருப்பது வரலாற்றின் தேவை. காடு இவர்களுக்குக் காப்பரணாய் இருப்பது, இன்றைய அவசியம்; இதுவே இவர்களுக்கு இன்பம்.**

"என்னடா யோசிக்கிறாய். ஒழுங்கா கரையில படுப்பம், பரவாயில்லை".

ஓரமாய் விரித்து இருவரும் சரிய இதயன் தவித்தான். எப்படிப் படுப்பது? முதுகுத் தழும்புகள் முள்ளாய்க் குத்துமே? தூக்கம் அணைக்குமா? நெடுநேரமாய் முனகி முனகிக் கிடந்தான். இப்போது எனது காவற்கடமைப் பணி தொடங்கிற்று. தற்காலிகமாய் தூக்கத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு, துப்பாக்கியை எடுத்துக் கொண்டேன். பொலித்தீனூடாய் குளிர் சில்லிட்டது, மனம் போல.

நிலவு இலேசாக மங்கத் தொடங்கியது. முகில்கள் எங்கோ அவசரமாய் ஓடின. வனம் உறங்கிக் கிடந்தது இடையிடையே மட்டும் சிறுசிறு ஒலிச் சலசலப்புக்கள். திடீரென்று மயில் ஒன்று அகவியது. கூடாத வேளையில் ஏன் இப்படி? ஆ, எங்கோ கேட்ட குரல்



மாங்குளம் முகாம் மீதான தாக்குதல் திட்டத்தை, அப்போது வன்னிப்பிராந்திய தளபதியாகவிருந்த பால்ராஜ் அவர்கள் வீரர்களுக்கு விளக்குகின்றார்.

தொடர்ச்சி 12ம் பக்கம் ...

# பூநகரி தோல்விக்கு பொறுப்பு ஏற்பது யார்? ஐ.தே.க. அரசாங்கம் நழுவப் பார்க்கின்றது

பூநகரி - நாகதேவன்துறை படைத்தள வீழ்ச்சிக்குப் பொறுப்பு ஏற்பது யார்? இன்று சிறீலங்காவில் பிரதான கேள்வியும் சர்ச்சைக்குரிய விடயமாகவும் இதுவே உள்ளது.



சிறீலங்கா இராணுவமும், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும், இதற்கு முன்னரும் பல இராணுவத் தோல்விகளைச் சந்தித்தவைதான். ஆனால் அப்பொழுது பரஸ்பரம் ஒருவரை ஒருவர் காப்பாற்றிக் கொண்டனர் என்றே கூற வேண்டும். பூநகரி -நாகதேவன்துறை படைத்தள தகர்ப்பின் முன்னரும், அதாவது 'ஒப்பரேசன் யாழ்தேவி' நடவடிக்கையின் போதும் இராணுவம் ஒரு வரலாற்றுத் தோல்வியைச் சந்தித்தது. ஆயினும் அரசாங்கமும் இராணுவமும் இணைந்து அதனை மூடி மறைக்க முயன்றன. அதனை மீறி விமர்சனம் செய்ய முற்பட்டோரை மிரட்டிப் பணிய வைக்க முயன்றன என்றுகூடக் கூறலாம்.

ஆனால், பூநகரியில் ஏற்பட்ட தோல்வியும் இழப்பும் இருதரப்பும் மூடி மறைக்கக் கூடியதாகவோ அன்றி மறைத்துவிடக் கூடியதாகவோ இல்லை. அந்தளவிற்கு இழப்பு பெரியதாகவும், மூடி மறைத்து முடியாத அளவினதாகவும் உள்ளது. அத்தோடு இவ் இழப்பானது சிங்களவர் மத்தியில் அரசாங்கம் மீதும், இராணுவத்தின் மீதும் பெரும் அவ நம்பிக்கையை ஏற்படுத்தியதாகவும் இருந்தது. இந்நிலையில் பூநகரியில் ஏற்பட்ட தோல்விக்கு யார் பொறுப்பு ஏற்கின்றார்களோ அவர்கள் அரசியலிலும், மற்றும் பொறுப்புக்கள், பதவிகள் என்பவற்றிலும் பெரும் பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். இதன் காரணமாகவே பூநகரியில் ஏற்பட்ட தோல்வியில் இராணுவத்துடன் முன்னர் போல் தோள் கொடுக்க அரசாங்கம் தீவிரமாக முனைந்து நிற்கவில்லை என்று கூறலாம்.

இந்நிலையில், தோல்விக்கான பொறுப்பை யாராவது ஏற்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டும் அனைவரும் தோல்விக்கான தமது பங்கை மறைத்து விடவே விரும்புகின்றனர். ஆனால் பொதுவாகக் குற்றச்சாட்டுக்கள் சிறீலங்காவின் இராணுவத் தலைமை, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், யுத்தப் புலனாய்வுத்துறை என்பவற்றின் மீது தனியாகவும் கூட்டாகவும் முன்வைக்கப்பட்டுள்ளன. வழமை போலவே எதிர்க்கட்சியினர் பூநகரியில் ஏற்பட்ட தோல்விக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் நிலையில்லாத கொள்கையும், பொறுப்பின்மையுமே முக்கிய காரணம் என சாடியுள்ளனர். பூநகரி தோல்வி குறித்துப் பாராளுமன்றத்தில் பேசிய எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா "பாதுகாப்பிற்கென ஒரு அமைச்சர் இல்லாமையே இன்றைய நிலைக்குக் காரணமாகும்" எனக் குற்றம் சாட்டினார்.

இதேவேளை, அரசாங்கம் மீது குற்றம் சாட்டும் விவேகம் இல்லாதுவிடினும் இராணுவத்தினர் மீதும் புலனாய்வுத் துறையினரின் மீதும் எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டாமல் இல்லை. இது ஒருவகையில் இதுவரை இல்லாத நிலைப்பாடுதான். "வடக்கு -கிழக்கு யுத்த நிலை குறித்து உளவுப்பிரிவு சரியாக இயங்கவில்லை. யுத்தம் குறித்த தகவல்கள் மதிப்பீடுகள் சரியாக அரசிடம் இல்லை" என உளவுப் பிரிவினரின் செயற்பாட்டைப் பற்றிக் குறை கூறிய எதிர்க் கட்சி உறுப்பினர் கேணல் அநுருத்த ரத்வத்த, "பூநகரி முகாம் பகுதி தனக்கு நன்கு தெரியும் அப்பகுதி இராணுவ முகாம் அமைப்பதற்குத் தெரிவு செய்யக்கூடிய பகுதி அல்ல" என இராணுவத் தலைமையின் இராணுவ அறிவு சம்பந்தமாகவும் சந்தேகத்தை எழுப்பினார்.

இதேவேளை இராணுவத்தினரின் தேவைகள் அரசால் நிவர்த்தி செய்யப்படவில்லை. போராடுவதற்கான வசதிகள் இராணுவத்தினருக்குச் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் எதிர்க் கட்சிகள் குறைகூறத் தவறவில்லை. "விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிட படையினருக்குப் போதிய வசதிகள் இல்லை. நுளம்பை விரட்டக்கூட அவர்களுக்கு நுளம்புத்திரி வழங்கப்படுவதில்லை". என பாராளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி எம். பி. நெவில் பெர்னாண்டோ வியாக்கியானம் செய்தார்.

அரசாங்கம் மீதான எதிர்க் கட்சிகளின் இக் குற்றச்சாட்டுக்கள் வழமையானவை என்றாலும், கடந்த காலத்தைப் போன்று அரசாங்கத்தினால் இக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்தோ, அன்றி எடுத்தெறிந்தோ பேசக் கூடிய நிலை இம்முறை இருக்கவில்லை. பதில் அளித்து ஆகவேண்டும். அல்லாது போனால் பழியை வேறு யாராவது தலையில் கட்டிவிட்டு தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற நிலையே அரசாங்கத்திற்கு உள்ளது.

இருப்பினும் ஆரம்பத்தில் இராணுவத்தை பாதுகாக்கும் முயற்[illegible]லேயே ஐ. தே. கட்சி அரச[illegible]ங்கம் ஈடுபட்டது. எடுத்துக்காட்டாக பூநகரி முகாம் வீழ்ச்சி கண்டு சில தினங்களின் பின் ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழு கூட்டத்தில் பேசிய பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா 'இது ஒரு முக்கியமான கட்டம் நாம் அனைவரும் இராணுவத்தை விமர்சிக்கக் கூடாது. நாம் ஒன்றுபட்டு இராணுவத்தை ஊக்குவிக்க வேண்டும். யாவரும் பதற்றமடையக் கூடாது. அரசாங்கத்தை திட்டுவதை நிறுத்தி விட்டு இராணுவத்தை ஊக்குவிக்க வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் பூநகரி முகாம் வீழ்ச்சியின் அதிர்வலைகள் பெரிதாகக் கேட்கத் தொடங்கியதும் பிரதமர் தனது நிலைப்பாட்டைச் சற்று மாற்றிக் கொண்டார்.

முன்னார் இராணுவத்திற்கு சார்பாகப் பேசிய பிரதமர் ரணில், அதன்பின் இரு தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் பூநகரி தாக்குதல் பற்றி அறிக்கை சமர்ப்பித்துப் பேசிய போது உளவுத்துறையை ஓரளவு காப்பாற்ற முற்பட்டார். ஆனாலும் இராணுவத் தரப்பிற்கு அவர் முட்டுக்கொடுக்க வெளிப்படையாக முயற்சிக்கவில்லை. இவ் அறிக்கையில், "தாக்குதல் நடைபெறுமென பூநகரி இராணுவ முகாமிற்குப் போதிய தகவல்கள் கிடைத்திருந்தன. இருப்பினும் அதன் பின்னரே முகாம் மீது தாக்குதல் நடந்திருக்கின்றது" என்பதும் "பூநகரி முகாம் தாக்கப்பட்டு 72 மணி நேரத்திற்குப் பின்னரே மீட்பு அணி அங்கு சென்றுள்ளது. இவ்வளவு கால நேரம் எடுத்ததற்கான காரணம் பற்றியும் விசாரிக்கப்படும்". என்பதும் போன்ற பிரதமரின் அறிவிப்பானது, இராணுவத்தினரிடமே இதற்கான அதாவது தோல்விக்கான பொறுப்பை விட்டுவிட அரசாங்கம் முனைந்திருப்பதையே காட்டுகின்றது என அபிப்பிராயப்பட இடமுண்டு.



இதேவேளை, சில அரசுதரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களே வழமைக்கு மாறாக இராணுத் தலைமையை காட்டமாகச் சாடியதும் உண்டு. "யுத்தத்தை நடத்துவதற்கு இராணுவத் தளபதி ஒருவரை நாம் நியமித்துள்ளோம். அவருக்கு அதற்கான அதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இராணுவத் தளபதியால் உரிய முறையில் பணியை நிறைவேற்ற முடியாது விட்டால் புதிய தளபதி ஒருவரை நியமித்து யுத்தத்தை நாம் தொடர்ந்து நடத்துவோம்" என்ற இராணுவத் தலைமை மீதான அரசாங்க கட்சி உறுப்பினர் 'மதுருபால எதிரிவீர'வின் சாடலானது இதற்கொரு எடுத்துக் காட்டாகும்.

இந்த வகையில் இராணுவமே தோல்விக்கான பதிலை சொல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதனை இராணுவத் தலைமையும் உணர்ந்துவிட்டது போன்றே உள்ளது. ஏனைய இராணுவத் தோல்விகளின் போது அவற்றைத் தோல்வி என ஏற்றுக் கொள்ளாது எடுத்தெறிந்து பேசி வந்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா சற்று அடக்கமாகப் பேசுவது இதையே காட்டுகின்றது. அதாவது "பூநகரிப் படைத்தளத்தில் என்ன நடந்தது என்பதை முழுமையான விசாரணையின் பின்பே கூற முடியும்" என்ற இராணுவத் தளபதியின் கூற்றானது அவர் பலவீனமான நிலையில் உள்ளார் என்பதை உணர்த்துவதாகவே உள்ளது.

இவ்வாறாக இராணுவத் தளபதி இம்முறை அதட்டவோ, மிரட்டவோ முடியாததிற்குக் காரணம் மறைக்க முடியாத தோல்வியின் அளவே ஆகும். ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை இராணுவத்திற்குத் தோல்வியைத் தேடிக் கொடுத்தது. ஆனாலும், களத்தில் புலிகளிடம் தோல்வி கண்டவர்கள் இராணுவத்தினர் ஆகும். அதாவது பூநகரியில் ஏற்பட்ட தோல்வியானது அரசின் இராணுவ ரீதியான கொள்கைக்கும், போராட்டக் களத்தில் இராணுவத்தினருக்கும் கிடைத்த தோல்வியும் ஆகும். ஆனால் அரசாங்கம் தோல்வியை மறைக்க முயல்வது போல், தனது தோல்வியை இராணுவத்தால் மறைத்துப் பேச முடியாது உள்ளது.

**ஜெயராஜ்**

ஆனால், இது உண்மையில் தனித்தனியாக சிறீலங்கா இராணுவத்திற்கே அன்றி உளவுத் துறையினருக்கோ அன்றி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கோ கிடைத்த தோல்வி எனக் கூறு முடியாது. ஒட்டு மொத்தமாக இவர்கள் அனைவருக்கும் கிடைத்த தோல்வியாகும். சுருக்கமாகக் கூறின் அரசாங்கம், இராணுவம், உளவுத்துறை என சகலதையும் உள்ளடக்கிய சிறீலங்கா அரசிற்குக் கிடைத்த தோல்வியே ஆகும்.

ஏனெனில் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வுதான் என்ற முடிவில், அரசாங்க கட்சியிடமோ, அன்றி எதிர்க்கட்சியிடமோ, இராணுவத் தரப்பிலோ, அன்றிப் புலனாய்வுப் பகுதியிலோ பெருங்கருத்து வேறுபாடு இருப்பதாக இல்லை.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஐ. தே. கட்சி ஆரம்பம் முதலே இனப்பிச்சினைக்கு இராணுவத்தீர்வு என்ற ரீதியிலேயே செயற்பட்டு வந்தது. ஆனால் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேயதுங்காவிற்கு முன்னரிருந்த ஜனாதிபதிகளான, ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். - பிரேமதாசா போன்றோர் இடைக்கிடை அரசியல் தீர்வு பற்றி பேசினர். வெளி உலகிற்குக் காட்டிக்கொள்ளவென 'சர்வகட்சி மாநாடு' எனவும், 'தெரிவுக்குழு' எனவும் சில நடவடிக்கைகளையும் எடுத்தனர்.

இருப்பினும் இராணுவம் பெரும் நிதி ஒதுக்கீட்டைப் பெற்று விரைவாக வளர்ந்து கொண்டு வந்தது. ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் இராணுவ நிதி ஒடுக்கீடு 800 கோடி ரூபாவிலிருந்து 2500 கோடி ரூபா வரையில் சென்றது. சுமார் 45,000 ஆக இருந்த இராணுவத்தின் எண்ணிக்கை 90,000 ஆக உயர்ந்தது. அதாவது இராணுவம் ஒரு முனைப்புப் பெற்ற சக்தியாக தங்கு தடையின்றி வளர்ந்து வந்தது. இறுதியில் அரசியலில் ஆதிக்கம் செய்யும் அளவில் அதன் வளர்ச்சி இருந்தது.

ஆனால், முன்னாள் ஜனாதிபதிகள் அரசியல் தீர்வு பற்றிப் பேசிக் கொண்டமையானது, இனப்பிரச்சினை விடயத்தில் தெளிவான கொள்கைகளை கொண்டிருக்கவில்லை எனக் குறை கூறப்பட்டது. அதாவது, இனப்பிரச்சினைக்கு அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை எனவும் தளம்பல் போக்கு காணப்படுவதாகவும் விமர்சிக்கப்பட்டது.



சிசில் வைத்தியரத்தினா

இருப்பினும், டி. பி. விஜேதுங்க சிறீலங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் இவ்வாறான குறை காணலுக்கான நிலை முற்றாக நீக்கப்பட்டதெனலாம். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே தீர்வு என அவர் தெளிவாக அறிவித்தார். அதற்கேற்ப இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடும் கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, இராணுவத்தினரின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ளவும், நவீன தளபாடங்களைப் பெற்றுக் கொள்ளவும் அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் டி. பி. விஜேதுங்க காலத்தில் இராணுவம் மேலும் புத்துயிர்ப்புப் பெற்றதோடு, இராணுவத்திற்கு நேர் வழி காட்டப்பட்டதெனவும் கூறலாம். இதனைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளுக்கு எதிரான பெரும் தாக்குதல் திட்டங்களை வகுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும், இராணுவத் தலைமையும் முனைப்பாகச் செயற்படத் தொடங்கியது. இதன் அடிப்படையில் 'ஒப்பரேசன் யாழ்தேவி' மூலம் விடுதலைப் புலிகளை ஒரு முற்றுகைக்கு உள்ளாக்க இராணுவம் முயற்சித்தது. விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதெனக் கூறிக்கொண்டு விமானத் தாக்குதல்களை வட பகுதியில் முடுக்கியும் விட்டது.

சிறீலங்கா புலனாய்வுத்துறையும் யுத்தத்திற்கான தகவல்களை வழங்குவதிலும் முகாம்களின் பாதுகாப்பு நடவடிக்கையிலும் முழுமையாக செயற்பட்டது. இதில் புலனாய்வுத்துறை கூறியது எது உண்மை, எது பொய் என்பதை வேறுபடுத்த முடியாது விட்டாலும் புலிகளின் நடவடிக்கைகள் பற்றி தொடர்ச்சியாக

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

# எங்கும் ...எல்லாவற்றிலும் ...எல்லோரிடமும்...

# "கிட்டு"

"தனிமரம் தான் தோப்பாவதில்லை எனச் சொல்வார்
தனிமனிதன் பெரும்படையாய் நின்றதனைக் கண்டார்"

தளபதி கிட்டுவிற்கு தமிழீழத்திலிருந்து எழுந்த பாடல்கள் ஒன்றில் வரும் இவ்வரிகளைக் கேட்டதும் என் கண்கள் பனித்தன. ஆம்! மிகப் பொருத்தமான விமர்சனம். "தனி மனிதன் பெரும்படையாய் நின்றான்" தமிழீழ விடுதலை வரலாற்றில்! அவன்தான் சதாசிவம் கிருஸ்ணகுமார் என்ற பெயருடன் தமிழீழ மண்ணில் மலர்ந்து "கிட்டண்ணா", "கிட்டு" என்ற வரலாற்றுப் பெயருடன் தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் எல்லாம் என்றும் வாழும் பிறப்பினைத் தன் சாதனைகளால் சாதித்த மாமனிதன்.

## ஆன்மாவை உலுப்பிய பூகம்பம்

"இலட்சியத்தோடு என்னை வளர்த்தான். என் உள்ளத்தில் ஒளிச்சுடரை ஏற்றினான். இலட்சிய உணர்வை என் இரத்தத்தில் செறிய வைத்தான். அச்சமென்ற இருளை என்றோ அகற்றினான். துணிவே என் இயல்பாயிற்று. வலிமை பாய்ச்சி வீரத்தில் என்னை ஆழ்த்தினான். யான் பயமறியாத பலம் பெற்றேன்: விறல் என்ற வீரத்திற்கு உரியவனானேன். நாட்டின் காவலனானேன்,மக்களின் இமை போலானேன். வீர மறவனானேன். போர்த்தழும்புகள் எனக்கு இன்பம் தந்தன. மண்ணிலே மறவன் என்ற பெயர் சூடச் செய்தவன் என் தலைவனே. என்னை ஆக்கியோன் அவனே. உயிர் ஊட்டியோன் அவனே. என்னை நம்பிய தலைவனுக்கே என் உயிர் உரியது. அவனது இலட்சியமே என் இன்னுயிர். என் இறுதி மூச்சும் அதற்கே. மாசுபடாத வீரமரணமாய் என் வாழ்வு முடியும். என் வெற்றியைக் கேட்டு மகிழ்ந்த என் தலைவனின் நெஞ்சு என் மரணத்தைக் கேட்டு கண்ணீர் கசியும். அந்த உன்னத முடிவையே யான் வேண்டுகிறேன்" என நாக. பத்மநாதன்,

"புரந்தார் கண் நீர்மல்கச்
சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து"

என்ற திருக்குறளுக்கு விளக்கம் கொடுத்துள்ளார். இந்த விளக்கத்தை படிக்கும் ஒவ்வொருவருக்கும் இவ் இலக்கணத்தின் இலக்கியமாய்க் 'கிட்டு' நிற்பது புரியும்.

"பிரபாகரன் என்ற சொல் இன்று ஒரு தனிமனிதனின் பெயர் அல்ல. அப்பெயருக்கு பல பொருள் உண்டு. பல அர்த்தங்கள் உண்டு. நாம் அதே மனிதரோடு சமகாலத்தில் வாழ்வதால் இவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் விடலாம். பிரபாகரன் என்றால் "SYMBOL OF FREEDOM" என்றும் சிலர் கூறுகிறார்கள். இன்னும் எளிமை, மனித நேயம், அன்பு, ஆளுமை, தலைமை, முக்கியமாக மக்களை நேசித்தல், எப்போதும் ஏழைகளையும், எளியவர்களையும் நேசிப்பது; அவர்களுக்காகவே சிந்திப்பது இவைதான் "பிரபாகரன்" என்றால் அர்த்தமாகிறது. இவை ஒரு தத்துவம். எமக்கு வழிகாட்டும் சத்திய போதனை. இவற்றைத்தான் எமது இயக்கமும், விடுதலைப் போராட்டமும் இலட்சியமாகக் கொண்டுள்ளது. நானும் பதினெட்டு வயதில் பள்ளிக்கூடப் படிப்பை இடையிலே கைவிட்டு பின் இன்றுவரை, இவ்வழி நடத்துதலிலே, இப்போதனைகளையும், தத்துவங்களையும் படித்துத்தான் வளர்ந்தேன். இதை வைத்துத்தான் சிந்திக்கவும் பழகினோம் என்பது கேணல் கிட்டுவின் உள்ளக் கருத்தின் எழுத்துருவம். இதனால்தான் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன், "கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு. வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது. 'கிட்டு' நீ சாகவில்லை. ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்" என்கிறார். கிட்டுவின் மறைவை ஆன்மாவை உலுப்பிவிடும் ஒரு உணர்வுப் பூகம்பமாக தலைவர் பிரபாகரன் பார்க்கிறார். "மனத்தின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஒரு உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விவரிக்க முடியாது. எனது அன்புத் தம்பி 'கிட்டு'வின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது. நான் 'கிட்டு'வை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்துக்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில் ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில், வேரூன்றி வளர்ந்த நேயம் அது. அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்தில் இருந்தே கண்டு கொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடம் இருந்தன. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான். அனைத்து மக்களினது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது" என்பது தலைவர் பிரபாகரன் கிட்டுவைக் குறித்துக் கூறிய இதய மொழிகள்.

## உள்ளதைச் சொல்வேன் சொன்னதைச் செய்வேன்

"நாம் எமது மக்களையும், மண்ணையும் (மண் என்பதும் மக்களையே குறிக்கும்) நேசிப்பதால்தான் போராடுகிறோம். நாம் எமது சனத்தை நேசிக்க வேண்டும். அவர்கள்மீது அன்பு செலுத்தவேண்டும். இதுதான் எமது அடிப்படை இலட்சியம். சனங்களில் பல்வேறு வகைப்பட்டவர்களும் இருப்பார்கள். இவர்கள் எல்லோருக்குமாகவும்தான் நாம் போராடுகின்றோம். இரத்தம் சிந்துகின்றோம். அனைவரையும் ஒரேமாதிரியாக நேசிக்கும் பக்குவம் வளர்க்கப்படல் வேண்டும். ஒவ்வொரு போராளிக்கும் இது ஊட்டப்படவேண்டும்" என்பது கிட்டு வெளிநாட்டிலிருந்து ஊருக்கு எழுதிய கடிதத்தின் சில வரிகள்; சீரிய சிந்தனைத் துளிகள். இதே வரிகளைத்தான் 'களத்தில்' ஆசிரியர் என்ற முறையில் நான் அவருடன் உரையாடியபோது என்னிடம் பலதடவைகள் கூறினார். வெளிநாடுகளில் பல தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் தமிழர்களால் நடத்தப்படுகின்றன. இவற்றில் வர்த்தக நோக்கு உட்பட, இந்திய இலங்கை அரசுகளின் சதிக்கு துணைபோகும், விலை போகும் நோக்குகள் உண்டு. இவற்றைக் கண்டு வெளிநாடுகளில் வாழும் இயக்க ஆதரவு நெஞ்சங்கள் ஆயிரக்கணக்கில் குமுறுவதுண்டு. இப்பத்திரிகைகளின் போக்குகளைக் கண்டிக்கும்படி கடிதங்கள், தந்திகள் பல வருவதும் உண்டு. அவ்வேளைகளில் கிட்டு சொல்வார், "இவர்கள் எல்லோருக்குமாகவும் தான் நாம் போராடுகின்றோம். இரத்தம் சிந்துகின்றோம். இல்லையேல் காடுகள், எல்லைகள், கிராமங்கள், நகரங்கள் என நாம் தேடிச்சென்று மக்களைப் பாதுகாக்கும் போராட்டங்களை நடாத்தி தியாக காவியங்களை உருவாக்கத் தேவையில்லை. விடுதலைப் புலிகளுக்குத்தான் இப்போராட்டம் என்றால் ஒரு சில முகாம்களை நாம் அமைத்து எவ்வித இழப்புக்களும் இன்றி எமது போராளிகளை பாதுகாக்க முடியும். எல்லா மக்களுக்காகவும் தமிழீழத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்காகவும் அவன் எம்மை அன்பு செய்தால் என்ன, அன்பு செய்யாவிட்டால் என்ன -அது எமக்குப் பெரிதல்ல -ஒவ்வொரு தமிழீழ மனிதனுக்காகவும், நாம் எமது உயிர்களை, உடமைகளை இழந்து போராடுகின்றோம். ஆகவே எமது பாதை நேரானது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தமிழீழ மக்களின் தேசிய நதி. அது சரியான பாதையில் பிர வாகம் எடுத்துப் பாய்கிறது. அனைவரும் அதற்குள் தாமாகவே கலந்து கொள்வார்கள். கலந்து கொண்டே ஆக வேண்டும். இல்லையேல் அவர்கள் தாமாகவே தனிமை அடைவர். மக்களால் நிராகரிக்கப்படுவர். எனவே மற்றவர்களைப் பற்றி, 'களத்தில்' கண்டனங்கள் செய்யத் தேவையில்லை. நாம் சரியான முறையில் 'களத்தில்' பத்திரிகையைக் கொண்டு செல்வோம். மக்களும் தேசமும் ஒவ்வொருவரையும் திருத்திக் கொள்ளும் அல்லது அடையாளம் கண்டு கொள்ளும்" என்றார்.

அவர் சொன்ன பாதையில் 'களத்தில்' செல்கிறது. அன்று 'களத்தில்' பத்திரிகையின் பதிப்பு ஒரு சில ஆயிரங்களாக இருந்தது. இன்று பல்லாயிரமாக மாறியிருப்பது மட்டுமல்ல, ஐரோப்பாவில் அதிகம் அச்சாகும் தமிழ்ப் பத்திரிகை என்ற சாதனையையும் படைத்துக் கொண்டிருக்கிறது. இது கிட்டண்ணாவின் சொல்லின் ஆழத்தை, தீர்க்க தரிசனத்தை உறுதியை வெளிப்படுத்தும் சான்றாகத் திகழ்கிறது. அன்று அவர் கூறியவாறே, எங்கள் பகைவர்கள் எங்கோ மறைந்தார்கள் என்ற கதையாக ஐரோப்பாவில் நடமாடிய பல புல்லுருவிப் பத்திரிகைகள் இன்று இல்லை. நாம் நிராகரிக்கவில்லை. மக்கள் நிராகரித்தனர். இதுதான் கிட்டண்ணாவின் சாதனைகளின் ஊற்று. அவர் மக்களை நம்பினார் வேறு எதையுமல்ல. தன் தலைவனின் கொள்கையையும் மக்களின் நெஞ்சங்களையும் நம்பினார்.



கிட்டண்ணா இங்கு இருக்கும் பொழுது தாயகத்தில் வெளிவரும் ஒவ்வொரு உயிர்ப் படைப்புக்களும், உலகெல்லாம் உள்ள தமிழர்களையும் சென்றடைய வேண்டும் எனத் துடித்தார். தாயகத்தின் ஒவ்வொரு உண்மைச் செய்திகளும் தமிழீழ நிலை சொல்லும் செய்திகளாக உலக வலம் வரவேண்டும் எனத் தவித்தார். 'களத்தில்' இயன்ற அளவுக்கு அவர் இதய ஆசையைச் சுமக்கிறது. "பெண்விடுதலை", "சாதியம்", "தொண்டர் நிறுவனங்கள்" பற்றிப் பல தடவைகள் என்னுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார். "வெளிநாடுகளில் காணப்படுவதுபோல் பெண்ணை விற்பனைப் பொருளாக்கும், காட்சிப் பொருளாக்கும் 'பெண்மை வாதம்' (Feminism) எமது மண்ணுக்குத் தேவையில்லை. பெண் அவளது முழு ஆற்றலையும் பிரயோகிக்கக் கூடிய நிலையினை எமது மக்கள் அடைய வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் எமது பெண்கள் காலம் காலமாக அனுபவிக்கும் அடக்கு முறைகள் ஒடுக்கு முறைகளில் இருந்து விடுவித்து, அவர்களை சுதந்திரக் குடிமக்களாக -தமிழ்ப் பெண்களாக வாழவைக்கக் கூடிய பெண்மை வாதம் உருவாக்கப்படல் வேண்டும்" என்பார்.

சாதியக் கருத்துக்களின் வெறுமையை, சதித் தன்மையை சிறுகுழந்தை முதல் பெரியோர் வரை உள்ளத்தால் உணரக்கூடிய முறையில் கல்வி முறைகள், நூல்கள் வெளிவரல் வேண்டும் எனக்கூறுவார். இன்று சாதியம் தமிழீழத்தில் செயலிழந்து போய் இருப்பதை அவர் பாராட்டிக் கூறும் அதேவேளை இந்தப் புரையோடிப்போன சமூக நோய் நாளை மீண்டும் பிறப்பெடுக்காது தடுப்பதற்கு வேண்டிய கல்வி முறையின் தேவை பற்றி அடிக்கடி கூறுவார். இன்று ஒவ்வொரு தமிழ் மக்களும் வாழ்வின் தேவைக்காக ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆயினும் தமிழீழம் நாளை எந்நேரமும் பிறக்கும். அந்நேரம் நாம் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் வாழ்வழிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்ட எமது மக்களையும், நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டும். தொண்டர் நிறுவனங்களை அமைப்பதில் காந்தி அபார வெற்றி கண்டவர். அவர் எவ்வாறு தொண்டர்களை உருவாக்குவதில், அமைப்பதில், செயற்படுத்துவதில் வெற்றி கண்டார் என்பதை நாம் ஆராய வேண்டும். எமது மக்களிடையும் தொண்டர் நிறுவனங்கள் தோற்றுவிக்கப்படக் கூடிய நடைமுறைகளை நாம் வேகமாக்க வேண்டும் என்பார். எந்நேரமும் அவர் இதயத்தில் இருந்து மக்களைப் பற்றிய சிந்தனையும், மக்களது துன்ப துயர்ங்களைப் போக்கும் வழிவகைகளை தேடும் தவிப்பும், 'முழுமையான விடுதலையை' உருவாக்க வேண்டும் என்ற அவாவும் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது.

களத்தில் போராளிகள் மடியும் போதெல்லாம் அவர் மனது வேதனையால் பிழியப்படும். அங்கு நின்று முன்னணியில் செல்ல வேண்டிய நான், இங்கு

தொடர்ச்சி 7ம் பக்கம் ....

# எங்கும் ...எல்லாவற்றிலும்...எல்லோரிடமும்... "கிட்டு"

நிற்க வேண்டிய நிலையாக உள்ளதே என அங்கலாய்த்துத் தவிப்பார். ஆயினும் ஒரு சில நிமிடங்களில் உறுதிப்படும் இதயம் அது. எனக்குத் தலைவன் இட்ட கட்டளையை ஏற்று வெளிநாடுகளில் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யத் தானே வேண்டும் என்பார். ஆயினும், தாயகத்தைத் தேடி ஓடிக் கொண்டிருந்தது அவர் மனம். உடல் மட்டும் இங்கிருந்து கடமைகளைச் செய்து கொண்டிருந்தது. 1992 ஆம் ஆண்டு மாவீரர் இதழை 'களத்தில்'க்கு தயாரிக்கும் போது ஒரு நெஞ்சைப் பிழியும் கேள்வியைக் கேட்டார். "அண்ணை.... எந்த எந்த மாவீரர்களின் படங்களைப் போடப் போகிறீர்கள். தலைவருக்கும் எங்களுக்கும் இந்த விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த அத்தனை பேரும் முக்கியம். அத்தனை பேரும் எங்கள் உயிர். அத்தனை பேரையும் போட 'களத்தில்' பத்திரிகை தாள் போதுமா?". நான் மௌனமானேன். அவரின் ஆதங்கம், அன்பு, தமிழீழப் போராளிகளின் பால் உள்ள நேசம் என் ஒவ்வொரு மயிர்க் காலையும் சிலிர்க்க வைத்தது. நீண்ட மௌனத்தின் பின் அவர் சொன்னார், "மாவீரர் நாள் உருவான வரலாற்றை மட்டும் போடுவோம்" என்று. அதன் அடிப்படையில், சங்கரதும் மாலதியினதும் திருவுருவப் படங்களுடனும் மாவீரர் மலரைத் தயாரித்தோம். ஆனால் அதே தலைவனுக்கு 1993 இல் மாவீரர் வணக்கம் செலுத்த வேண்டிய நிலை வந்தபோது அன்று முழுவதும் எல்லோரும் என் இதயத்தை விட்டுப் போய் 'கிட்டு' எனும் மாமனிதன் மட்டும் மாவீரனாக என் கண் முன்பாக நின்றான். அந்த மாமனிதனின் இதயத்தில் அனைத்து மாவீரர்களும் உயிர்த் துடிப்புடன் நிற்பதைக் கண்டேன். தமிழீழம் நாளை பிறக்கும்; இம்மாவீரர் கனவு நனவாகும் என்று உரைத்தது கிட்டுவின் திருவுருவம். "எல்லாவற்றையும் எடுத்தார்கள். இந்த உயிரை எடுத்தாலும் இந்தப் புரட்சி நிற்காது" எனும் பிரபல நீக்குரோக் கவிஞர் நிக்கியோ வானியின் சக்திக் கோட்பாட்டின் சின்னமாக நின்றது அவ்வுருவம்.

27-1-1987 இல் 'ஈழமுரசு' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் கிட்டு அவர்கள், "எமது தலைவர் பிரபாகரன் முதல் இயக்கத்தின் கடைசிப் போராளிகள் வரை எம் வாழ்வு நிரந்தரம் என்று எண்ணிக் கொண்டு போர்க் களத்தில் குதிக்கவில்லை. எம் வாழ்வு நிச்சயமற்றது. எமது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த பத்து ஆண்டு கால வரலாற்றைப் படைத்தது. நாம் தமிழீழ நாட்டை மீட்பதற்கு ஆயுதம் ஏந்தியுள்ளோம். மானமுள்ள மக்கள் மாற்றானிடம் ஒருபோதும் சரணாகதி அடையமாட்டார்கள்" எனக் கூறினார். தனது சொல்லின் செயல் சான்றாக இந்துக் கடலில் விடுதலைத் தீயானான். இளந்திரையன் கூறுவது போல்,

**"இதழுக்கு வருதல் முன்னே**
**இடையிலே நின்று போன**
**உதயத்தின் சிரிப்பே! எங்கள்**
**உணர்வுக்குள் கலந்தாய் -மக்கள்**
**இதயத்தைத் திறந்து பார்த்தால்**
**அதிலெல்லாம் நீயிருப்பாய்!**
**இதயத்தில் நீயிருந்தே**
**எங்களை ஆளுவாயே!"**


### கலை பண்பாடு

"ஒரு தேச விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் . தாங்கிய போராளிகளுக்கும், மக்களுக்கும் இடையிலான தொடர்பு எண்ணெய்க்கும் எரியும் திரிக்கும் இடையிலான தொடர்பைப் போன்றது. மக்கள் ஆதரவு பெருமளவில் இருக்கும் போது தான், ஒரு போராளி தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த முடியும். ஆயுதப் போராட்டத்தில் போராளிகளுக்கும் - பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பு நீர் நிரப்பி வழியும் தண்ணீர்த் தொட்டிக்கும் மீன்களுக்கும் இடையிலான தொடர்பைப் போல் இருக்க வேண்டும்" என வோல்டர் லக்கூர் 'தீவிரவாதமும் மக்கள் தொடர்பும்' என்ற நூலில் குறிப்பிடுகிறார். இதனைக் 'கிட்டு' நன்கு உணர்ந்திருந்தார். மக்களுக்கான கலைகள், மக்களுக்கான இசை, மக்களுக்கான தொடர்பு சாதனங்கள் இவை அவருடைய இதயத்தின் தேடுதல்களாக இருந்தன. மக்களுடையது எதையுமே அவர் ஒதுக்கவில்லை. மக்களுடையவற்றை மக்களுடையன ஆக்கத் துடித்தார். "தினமும் தியானம் செய்து கொண்டுதான் இருக்கிறேன். ஒரு புது ஆராய்ச்சி. ஆன்மீகத் துறையில் மாயங்களுக்கு அப்பால், சமயங்களைத் துறந்து மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டலுக்கு வழி தேட வேண்டும். சமயங்களின் மாயப்பிடியில் இருந்து மக்களை விடுவித்து சரியான மனோ சக்தியை சனங்களிடையே வளர்க்க வேண்டும்" என ஆன்மீகத்தில் கூட விடுதலையைத் தேடிய உள்ளம் அவருடையது. தேவர் அண்ணா எழுதியது போல, "நவீன ஆயுதங்களைப் பற்றி, போர் முறைகளைப் பற்றி, போராட்டத்திலேயே நவீன யுக்திகளைக் கையாளுவது பற்றி, எதிரிகளை வீழ்த்துவது பற்றி மாத்திரம் அவர் சிந்திக்கவில்லை. தமிழீழ மண்ணைப் பற்றி, அந்த மண்ணிலே வாழ்கின்ற மக்களைப் பற்றி போராட்டத்தின் உச்சக் கட்ட வேளைகளில் கூட பொதுமக்களை அதன் தாக்கம் பாதிக்காத வகையில் செயலாற்ற வேண்டும் என்பது பற்றி எதிரிப் படைகளின் நடவடிக்கையால் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகி அல்லல் படுகின்ற தம் உயிரிலும் இனிய தமிழீழ மக்கள் பற்றி, தமிழீழ மண்ணின் வளங்களைப் பற்றி -அந்த வளங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிற தாயக மீட்புப்போரிலே பொதுமக்களின் பங்களிப்பு பற்றி -ஒத்துழைப்புகள் பற்றி -கிராமம் கிராமமாக மக்களோடு உறவாடி இயக்கத்தை வளர்க்க வேண்டும் என்பது பற்றி -தமிழர்களின் கலை பண்பாடு -பாரம்பரிய கலை வடிவங்கள் -வரலாறு, மானுடவியல், மொழிவளர்ச்சி, மொழித் தூய்மை, விஞ்ஞானத் தேவைகள் என மொத்தமாக தமிழீழ மக்களுக்குத் தேவையான பற்றியும் சிந்தித்தார்."

### திட்டங்களின் மூல கர்த்தா

இதனால்தான் அவரால் மண்ணில் இருக்கையில் அல்லலுறும் மக்களுக்கு புது வாழ்வு அளிக்க புனர்வாழ்வுக் கழகத்தைத் தோற்றுவிக்க முடிந்தது. தேவையுள்ள மக்களுக்கு அவசர நிறைவுகளை அளிக்கக் கூடிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தை பிறப்பிக்க முடிந்தது. பெண்களின் விடுதலையை முன்னெடுக்கக் கூடிய 'சுதந்திரப் பறவைகள்' தோற்றம் பெற்றனர். கொஞ்சும் மழலைகளின் பிஞ்சு நெஞ்சங்களைக் கூட மறவாத அவர், அவைகள் யுத்த சூழ்நிலையிலும் சற்றேனும் ஆறுதல் பெற மழலைகள் பூங்காக்கள், சரணாலயம் என்பன அமைத்தார். தமிழீழத்தில் 'நிதர்சனம்' ஒளிபரப்பு உட்பட வில்லுப்பாட்டு, தெருக் கூத்து வரை பல ஆக்க சாதனங்களில் பங்களிப்புச் செய்தார்.

தமிழகத்தில் 'தமிழீழம்' என்ற மாத இதழ் நடாத்தி தமிழீழ மக்கள் நிலையை தமிழக மக்களுக்குப் புரிய வைத்தார். வீட்டுக் காவலில் இருந்தபோது 'தேவி' வாரப்பத்திரிகையில் விடுதலைப் போராட்டம் தொடர்பான கட்டுரைத் தொடர் வடித்தார். மீண்டும் 1989ல் சிறீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தவெனக் கொழும்பு வந்து பின்னர், சர்வதேசச் செயலாளராக இலண்டன் வந்ததும், ஐரோப்பாவில் அவரின் தொடர்புசாதன ஆக்க இலக்கிய பணிகள் வேகம் பெற்றன. இலண்டனில் இருந்து 'களத்தில்' மாதமிருமுறை, பிரான்சிலிருந்து 'எரிமலை' சஞ்சிகை மாதமொரு முறை, நோர்வேயில் இருந்து 'சுதந்திர தாகம்' வருடம் மும்முறை பொலிவுடன் வரச் செய்தார். தரிசனம் ஒளியிழை நாடாவை வெளியிட வைத்து ஊரின் தரிசனத்தை உலகுக்கு காண்பித்தார். ஆங்கிலத்தில் மட்டுமல்ல நோர்வே, பிரஞ்சு, டென்மார்க் நாட்டு மொழிகளிலும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளிவரச் செய்தார். 'Tamil Nation' பத்திரிகை ஆசிரியரை இந்திய அரசு கைது செய்ததும், இலண்டனில் இருந்து அப்பத்திரிகை தொடர்ந்து வெளிவர அரும்பணியாற்றினார். சுவிசிலிருந்து 'ஈழநாதம்' உள்ளூர் வானொலி சேவையையும், கனடாவில் இருந்து 'உலகத் தமிழர்' பத்திரிகையையும் மொன்றியல், டொரன்ரோ நகர தமிழ் ஒலிபரப்புச் சேவைகளையும் புதுமெரு கூட்டினார். அதேவேளை மக்களின் புது வாழ்வுக்கென தமிழீழத்தில் உள்ள புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், செஞ்சோலை, புற்று நோய் ஆராய்ச்சி நிதியம், செயற்கை உறுப்புக்கள் பொருத்தும் நிலையம் போன்ற பல்வேறு அமைப்புக்களினதும் சர்வதேச கிளைகளை செழுமையுடன் இயங்க வைத்தார்.



### படைப்புலகில்

"ஒவ்வொரு உண்மைக் கலைஞனது சிந்தனை வீச்சும் கூர்மையடைந்து செல்வது நியதி. இதனால் அவனது உள்ளத்து உணர்வுகள் எரிமலைக் குழம்பாகத் தோற்றம் பெறுமே தவிர பனிக்கட்டியாக வார்க்கப்பட மாட்டாது" என்ற கூற்றுக்கமைய கிட்டண்ணாவுக்கு எடுத்த காரியம் முடியவில்லை என்றால், கோபம் பொத்துக் கொண்டு வரும். ஒரு சில நிமிடங்கள் உருத்திரா மூர்த்தியாக நிற்பார். ஆனால் அதே கிட்டண்ணா கோபம் போனதும் பாசத்திலும், அன்பிலும் குழைவார். அந்த நேச வருடலில் கோபம் சுட்ட சூடு எங்கோ மறைந்து விடும்.

இந்த பண்பு தானோ என்னவோ அவருடைய பாசையில், 'பாரத மாதாவின் புண்ணியத்தால் பல நாடுகளுக்கு விரட்டப்பட்ட' வேளையில் ஏற்பட்ட தனிமைகளில் எல்லாம் தன் உணர்வுகளைச் சித்திரங்களாக, தமிழீழ மண்ணின் மக்களின் நிலை விளக்கும் ஓவியங்களாக வடித்தார்.

### அவரா இவர்

1983 மார்ச் 4ம் திகதி உமையாள்புரத் தாக்குதலால், தன்னிகரற்ற தமிழீழ விடுதலைப் புலி வீரனாக தோற்றம் பெற்று 1983 ஏப்ரல் 7 இல் தாக்குதல் குழுவின் இரண்டாவது பொறுப்பாளராக தலைவரால் குறுகிய காலத்தில் அணி உயர்வு பெற்று 24-2-84 குருநகர் இராணுவ விடுதித் தாக்குதலால் குடாநாட்டின் வெற்றிகளுக்கு வித்திட்டு, 1984 இல் பண்டிதரின் வீரச்சாவை அடுத்து யாழ் மாவட்டத் தளபதியாகிய கிட்டு, சிங்கள இராணுவத்திற்கு பெரும் சவாலாக விளங்கி, தமிழீழ மண்ணில் சிங்கள பௌத்த பேரினவாத இராணுவம் கால் வைக்காதவாறு தடுத்தார்.

1986 நவம்பர் 10 இல் சிங்கள இராணுவக் கேணல் வீரசேகரா, யாழ் கோட்டையின் பொறுப்பதிகாரி கப்டன் கொத்தலாவல ஆகியோரை அழைத்துப் பேசி வெற்றிகரமான முறையில் சிறைப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் தளபதி ஒருவரை மீட்டெடுத்த சம்பவம் கிட்டு அவர்களின் இராஜதந்திரத்தின் சிகரம். அதேபோல் இந்திய - இலங்கை இராணுவத் தலைமைகளுடனும், அரசுக்களுடனும், நிதானத்துடன் -இராஜதந்திரத்துடன் பேச்சுக்களை நடாத்திய ராஜதந்திரியாகவும் கிட்டு விளங்குகிறார்.

அத்தகைய இராணுவ மனோபாவம் உடைய ஒருவர், பின்னர் புகைப்படக் கலைஞனாகவும், ஓவியக் கலைஞனாகவும் பரிணமிக்கும் பொழுது அவரா இவர் என மக்கள் வியந்து நிற்கின்றனர்.

### உறுதியின் உறைவிடம்

கிட்டண்ணாவின் இதயம் எவ்விதம் உறுதியின் உறைவிடமாக இருந்தது என்பதை 'பொட்டு' அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். "அடையாளம் தெரியாத எதிரி அந்த வீரனுக்கு குறி வைத்த ஒரு மங்கலான மாலைப் பொழுது. வழமையாக எரிந்து கொண்டிருக்கும் மின்குமிழ் எரியவில்லை. அவரது கார் நிறுத்தப்பட்டு கதவைத் திறந்து இறங்க முற்படும் வேளையில் அந்த நிழலான உருவத்தின் அசைவு உள் உணர்வுகளை எச்சரிக்கிறது. நிதானிப்பதற்கிடையில் வந்து விழுந்தது 'கிரனைட்' தான் என்று அவசரமாக வெளியேற முற்பட்ட வேளையில் அது வெடித்துவிட்டது. ஆசையாய் வைத்திருந்த சின்னக் காரின் 'ஸ்ரெயறிங்' கிற்குள் சிக்குப்பட்ட காலை இழுத்து எடுப்பதற்கிடையில் வெடித்துவிட்டது. இதுவரை நிகழ்ந்தவைகள் சாதாரணமானவை எந்த ஒருவருக்கும் ஏற்படக் கூடியவை தான். ஆனால் அதன் பின்னர் அவர் நடந்து கொண்டவிதம் கிட்டண்ணைக்கு உரிய தனித்துவம் வாய்ந்தது. முழங்காலுடன் துண்டாகிப் போய் துடித்துக் கொண்டிருந்தது அவரது கால். அந்த நேரத்திலும் கிரனைட் வந்த திசை நோக்கி அவரது ரிவோல்வர் மூன்று சூடுகளை சுட்டு ஓய்ந்தது. அவரது நினைவு மங்குகிறது. முழுமையாய் இருந்த ஜீன்ஸ் பக்கத்தைக் கிழித்து துண்டாகிப் போன காலுக்குத் தானே கட்டுப் போட்டுக் கொண்டிருக்கையில் நினைவு மேலும் மங்குகிறது. உள் உணர்வு அவரை எச்சரித்தது. கிரனைட் எறிந்தவன் அருகில் வருவான். அவனைச் சுட வேண்டும் என்ற உணர்வு அவரை முழுமையாக மயங்கிப் போய்விடாமல் வைத்திருக்கிறது. கிரனைட் எறிந்தவன் வருவான் எனத் திரும்பத் திரும்ப நினைத்து தன்னை முழுமையாக மயங்கிப் போய்விடாமல் வைத்திருந்தார். மூன்று சூடுகளைச் சுட்டுவிட்டேன் ரிவோல்வரில் இன்னும் மூன்று ரவைகள் தான் மிச்சமாய் உள்ளது என்பது நினைவில் உறைக்கும்போது அவர் மயங்கிக் கொண்டிருந்தார். வைத்திய சாலை மிக அருகில் இருந்தமையால்தான் அவர் உயிர் தப்பினார். சத்திர சிகிச்சை அறைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளையில் அவரது இதயத் துடிப்பு முற்றாக நின்று விட்டிருந்தது. அவர் உயிர் தப்பியது மருத்துவ உலகின் புதினம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

அவர் காயப்பட்டு இரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடந்த இடத்தில் தனது ரிவோல்வரை இறுகப் பற்றியபடி கிடந்தார் என்பதும், தனது ரிவோல்வரில் சுட்டுவிட்ட ரவைகளுக்குப் பதிலாக புதிய ரவைகளை மாற்றிப் போட்டிருந்தார் என்பதும், ஆனால் நினைவு தப்பிய நிலையில் அவர் வெற்றுக் கோதுகளுக்கு பதிலாக மீதியாய் இருந்த நல்ல ரவைகளை எடுத்துவிட்டு அந்த இடத்திற்கு புதிய ரவைகளைப் போட்டிருந்தார் என்பதும் அநேகம் பேருக்கு தெரியாது. இது தான் அவரது இதயம் உறுதியின் உறைவிடமாகத் திகழ்ந்ததன் சான்று."

இதே உள்ளத்து உறுதியுடன் தான் அவர் வாழ்ந்தார். இந்தியர், சர்வதேச கடல் எல்லையில் வழிமறித்த போதும் தனது இன்னுயிர்களான லெப். கேணல் குட்டிசிறி, மேஜர் வேலன், கப்டன் குணசீலன், கப்டன் றொசான், கப்டன் நாயகன், லெப். நல்லவன், கப்டன் ஜீவா, லெப். அமுதன், லெப். தூயவன் ஆகியோருடன் தற்கொடையாக தன்னுயிர் தந்து வங்கக் கடலில் பூகம்பமாக அவர்களது ஆன்மாக்கள் பிளந்தன.

மத்திய குழு உறுப்பினர் திரு.- லோரன்ஸ் திலகர் கூறுவது போல, "சர்வதேச உறவுகளில் அதன் நியதிகளுக்குத் தகுதியான முறையில் இயக்கம் ஈடு கொடுப்பது அவசியமானது. சர்வதேச அங்கீகாரத்திற்கு தேவையானதுமாகும். இந்த உண்மையைப் பட்டறிந்தவர் அவர். விடுதலைப் புலிகள் அமைப்பை அத்தகு மாற்றங்களுக்கு உட்படுத்தும் ஆலோசனைகளையும் தலைமைப் பீடத்தின் பரிசீலனைக்கு எடுத்துச் சென்றார். மேலும் சமாதானத்தையும், சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தும் திட்டங்களும் அவரிடம் இருந்தன. இவை நிறைவேறுவதைக் காலதாமதப் படுத்திவிட்டதாக எதிரிகள் நினைக்கலாம். மக்களின் ஒன்று திரண்ட சக்தியாக வெளிப்பட்டு அவர் தனது மரணத்தின் பின்னரும் இதைச் சாதிப்பார் என்பது நிச்சயம்". ■

■ ஆசிரியர்

# "விலங்குச் செயல் கேட்ட... வ
# கலங்கித் துடித்திருந்த ... க

"சிரித்து வரவேற்ற செந்தழித்த முகமெங்கே?
சிந்தித்து உரையாற்றிச் சிறப்புற்ற நாவெங்கே?
அணைத்துக் கரம் போட்டு..... ஆதரித்த மனமெங்கே?
அன்னை தமிழ் வாழ..... அவதரித்த மகனெங்கே?"

ஒப்பாரியாக உள்ளத்திருந்தெழுந்த ....
இப்பாடல் எழுதி ஓராண்டு நிறைகிறது!
இப்பாரிற் தமிழன் இனமாக வாழவெனத்
தப்பாமற் பிறந்த தலைப் புலியைப் பாவியரின்
கைப்பாவையரசு..... கடல்நடுவே வைத்தெரித்த
அப்பாவ நிகழ்ச்சிக்கு.... ஆண்டொன்று ஆகிறது!
எப்போதும் அணையா ..... ஒளியாய் எமதுயிரில்.....
நிற்பார்கள் புலிகள் எனும் நியதியும் தெரிகிறது!

உலக அரங்கினிலே.... உரிமைக் குரலெழுப்பி.....
வலம் வந்த மறவனை, மானப்படை நடத்திக்...
களங்கண்ட வேங்கையைக் கடலில் இடைமறித்து...
விலங்கிட்டுச் செல்ல... விளைந்த இந்தியத்தின்
விலங்குச் செயல் கேட்ட விறைப்பின்னும் தீரவில்லை!
கலங்கித் துடித்திருந்த காட்சிகளும் மறையவில்லை!

அலையில் நெருப்பாய்... அவரெரிந்த காட்சியின்னும்
நிலையாகி நின்று... எம் நெஞ்சில் எரிகிறது!
அழியாத சத்தியத்தை இறுகப் பிடித்தபடி....
மலையாக நின்ற.... மாண்பும் தெரிகிறது!

அரக்கர் படை சூழ்ந்து ... அந்நிய வலயத்தில்...
உரக்கக் கத்தி ... உயிர் குடிக்க நெருங்குகையில்...
இரக்க மறுத்து ... உயர்வான இலக்குக்காய்...
இறக்கத் துணிந்த எழுச்சி தெரிகிறது!



இயக்க வரலாற்றின் இணைப்பாளர் தாமென்ற
மயக்கத்திற் தமது மார்க்கத்தை மாற்றாது...
இயக்க மரபிற்கு விளக்கம் இதுவென்று...
உணர்த்தி மறைந்த ... உயர்வும் தெரிகிறது!

கிட்டு எனும் அந்தக் கீற்றினையும் அவனோடு...
குட்டி சிறீயையும்... குணசீலன்... மலரவன்...
மற்றும் றொசான்... ஜீவா... நாயகன்... நல்லவன்
பத்தாக அமுதனுடன் தூயவன் என்போரை
விட்ட செய்திதான் விரைந்து வந்தடைந்தது!
பட்ட நெஞ்செலாம் பற்றியெரிந்ததே!

'கெட்ட கனவிது'... என்று எம் கண்களைக்
கசக்கிக் கொண்டு எம்... காதினைப் பொத்தினோம்!
பட்ட காலிலே படுமெனும் வாக்கியம்...
பாழும் தமிழர்க்காய்ப் பிறந்ததோ எனும்படி...
கத்தினோம்; நின்று கதறினோம்; தமிழனின்
துக்க நாளிது என்று மயங்கினோம்!

வஞ்சகம் ...சதி... வார்த்தையிற் சூழ்ச்சிகள்...
இன்று... நேற்றல்ல ... இந்தியராட்சியில்!
வந்து ... புகுந்தெம்மை வாட்டி வதைத்தவை...
ஒன்று பத்தல்ல... உரைத்து முடித்திட!
வெந்து போனதெம் தாய்நிலம் .... வேட்டுவர்
வந்து போனதால்... வாழ்க்கை கசந்ததே!

ஊழல்... லஞ்சத்தில்... உண்டு பருத்தவர்
ஆளுகின்றதோர் நாடது இந்தியா!
கோழை மஞ்சத்திற் குடித்துக் கிடக்கையில்...
கொள்கை... சட்டங்கள்... இயற்றிடும் நாடன்றோ!
ஆன தன்மையால்.... அந்த வேங்கைகள்
ஈனமுற்ற அவ் விந்தியர் சூழ்ந்ததும்...
மான நெஞ்சுடன் ... மாண்டு நாம் போவதே....
மேலென்றெண்ணித் தம் மேனியைத் தீய்த்தனர்! !

மோதும் அலைகளின் மூச்சினை நம்பினர்!
மீண்டும் உயிர்த்திடும் முடிவினை நம்பினர்!
நாதமாய் நின்ற நாட்டினை நம்பினர்!
நாளை வாழ்ந்திடும் மக்களை நம்பினர்!
வேதமாய் நின்ற தலைவனை நம்பினர்!
விடுதலை பெறும் தமிழ்ப்படை நம்பினர்!
சேதஞ் செய்தெமைச் சிறுமைப் படுத்திடும்
சிலந்தி ஆட்சியை நம்ப மறுத்தனர்!

சத்தியம் எனும் சக்தியை நம்பினர்!
சான்றெனக் கடல்... காற்றையும் நம்பினர்!
செத்தவர் உடல் தின்று பருத்திடும்
செம்பருந்தையும்... கழுகையும் நம்பினர்!
பத்து நூறென மனிதரை விழுங்கிடும்
பாழ் திமிங்கிலம் ... சுறாவையும் நம்பினர்!
இத்தரைதனில்... இந்தியம் என்கின்ற
இழிபிறவியை நம்பிட மறுத்தனர்!



கைவிலங்குடன் கடற் கரையடைவது...
கடமை வீரர்க்கு அழகில்லை யென்பத
மெய் விளக்கென அலையிலே மிதந்தி
போய் விழுந்தவர்... பொய்யராய்ப் பே
றையங் கொண்டதால்... அன்றுடல் நீ
அருந் தமிழ் மகள் ஆட்சியிலேறவே!

**கேணல் கிட்டு அவர்க**
**அவருடன் வங்கக் கடலி**
**சக போராளிகளின**
**ஓராண்டு நிறைவு, நினைவு அ**

**புலவர்**

இந்திய நிலத்தான் இழைத்த கொடு
சிந்திய இரத்தம் ... உலகெலாம் உ
அந்த இழப்பின்... ஆழம் எங்கள்...
சொந்த நிலத்திலே சுவடு பதித்தது!
வெந்த புண்ணிலே வீழ்ந்த ஈட்டிபோல்
இந்தச் செய்தியெம் மினத்தின் தலை
சென்றடைந்தது! தேசத்தின் மக்களோ
கன்றிழந்தவோர் பசுவெனக் கதறினர்!

உலகத் தமிழரின் உணர்வு தாங்கிய...
உத்தமன் எங்கள் கிட்டுவை இழந்தோ
இளைய தமிழரின் ... இதய தாகத்தை
எடுத்துக் காட்டிய பளிங்கினை இழந்
பழக நல்லதோர் நண்பனை இழந்தோ
பச்சை மழலையின் நெஞ்சினை இழந்
அழகு போற்றிடும் தமிழனை இழந்தே
அணி நடத்திய தலைவனை இழந்தோ

# …றைப்பின்னும் தீரவில்லை!
# …ட்சிகளும் மறையவில்லை!"



நாட்டு மக்களின் நல்ல தூதனாய்...
மேற்கு நாட்டிற்கு வந்த தலைமகன்...
கூட்டினான் எமை; குருதியோட்டத்தில்
ஏற்றினான் ஒரு தலைவனின் மேன்மையே!
'ஏட்டு' மாந்தரும் ஏற்றிருந்திட...
எத்தனை பல புத்திகள் கூறினான்!
தீட்டினான் பல திட்டங்கள்; தேசியப்
பாட்டுப் பாடிடும் பம்பரமாகினான்!
வீட்டுப் பிள்ளையாய் விளங்கி நல்லன்பினைக்
காட்டியுறவுகள்கட்டி யெழுப்பினான்!
நாட்டுக் கொள்கைகள்... நாளும் விளக்கியே
நல்ல தமிழரின் 'நாட்டம்' உயர்த்தினான்!
வேற்று நாட்டிலே ... வாழ்ந்திடும் போதிலும்...
விதை பொருட்களின் விபரங்கள் கூட்டியே...
நாட்டு மக்களின் நலிவு போக்கிட...
நல்ல சேவைகள் ... நாளுமியற்றினான்!
காட்டுவான் வழி கடைசி வரையெனக்...
கண்விழித்து நாம் பின் தொடர்கையில்...
வேட்டுவர் படை ... இவனையும் வீழ்த்திய...
விடயம் நெஞ்சினில் விடமென வீழ்ந்ததே!

தலைவர் மீதிவன் ... கொண்ட மதிப்பதன்...
தரத்தைப் பக்தி யென்றாலது உண்மையாம்!
கலையின் மீதிவன் கொண்ட காதலாற்...
கலைஞர் பாலிவன் கவனஞ் செலுத்தினான்!
அலையும் நம்மினம் ஆண்டிடும் நாள்வர
ஆவலாய் இவன் அரும்பணியாற்றினான்!

சேர்ந்து உண்பதும்.. சுவைத்து மகிழ்வதும்
கூர்ந்து நோக்கியே... குறிப்புக்கள் சொல்வதும்
ஆர்ந்த அன்பினால்... ஆத்திரப்பட்டுப் பின்...
அரவணைத்தெமக் காறுதல் சொல்வதும்
தேர்ந்தவர் தமைத் தேடியலைவதும்
தேடிக் கண்டதும் தேவையைச் சொல்வதும்
சோர்ந்து போவது தவறெனச் சொல்லியே
சூடு ஏற்றலும் இவனது சுபாவமாம்!

நல்ல தீர்வினை நாளும் நோக்கியே...
நாட்டு மக்களை நெஞ்சிலேற்றினான்!
உள்ள நேரத்தில்... ஓவியத்தினால்....
உணர்வு ராகங்கள்... வரைந்து தேற்றினான்!
வல்ல தேசங்கள் வந்து கூடிடும்
வழிகள் நாடியே... ஆய்வும் ஆற்றினான்!
தொல்லை கூடிய போதிலும் அவன்...
துரிதமாகவே... தொன்மை போற்றினான்
எல்லை சென்றதும் என் பணி தொடருமென்
றெண்ணியே தமிழீழத்துக் கேவினான்!

தாய் நிலத்திலே தன்னடி வைத்திடும்
தங்க நாளினுக் காகத் தவஞ் செய்தான்!

போய்க் களத்திலே... போர் புரிந்திடும்...
பெருந் தலைவனின் புன்னகை பார்த்திடும்
வாய்ப்பினைத் தன துள்ளத் திருத்தியே...
பாய் விரித்தொரு... படகினில் ஏறினான்!
பேய்க் குலத்திலே வந்த இப்பாவிகள்...
பேரிடிக்கிரையானது பொறுப்பமோ?

எத்தனை பல நாடுகள் சூழ்ந்தெமை...
ஏய்த்தழித்திட முற்படநேரினும்...
சுற்றி நின்றெமைச் சூத்திரதாரிகள்...
சுட்டழித்திடத் திட்டங்கள் தீட்டினும்...
சத்தியம் எமைக் காத்திடும்; தலைவனின்
தரிசனம்... நின்று, தான்வழி காட்டிடும்!
இத்தினம் ... நாம் எடுத்திடும் உறுதியை...
ஏற்றிடும் இந்தப் பூமிதான்... நிச்சயம்!

செத்துப் போவது உடல்களேயாயினும்...
சிறகடித்திடும் சுதந்திர உணர்வினை
வைத்துப் போன எம் மறவரையழித்திட
மார்க்கம் யாருக்கும் கைவரப் போகுமோ?
முத்துப் போலொரு பூமியை... அந்நிய
முதலை வாயினிற் தந்திட... நமக் கொன்றும்
பித்துப் பிடித்திடப் போவதேயில்லையாம்!
பிறக்கப்போவது மணித் தமிழீழமே!

**இன்றைய தினத்தில் நாமெடுக்கும் உறுதி!**

தறிக்கத் தறிக்கத் தளிர்த்தெழுவோம்! இது உறுதி!
விழுத்த ... விழுத்த ... விரைந்தெழுவோம்! இது உறுதி!
எரிக்க ... எரிக்க... உயிர்பெறுவோம்! இது உறுதி!
நெருக்க ... நெருக்க ... நிமிர்ந்தெழுவோம்! இது உறுதி!
உருக்க ... உருக்க ... உலையிட்ட பொன்னாவோம்!
மறுக்க ... மறுக்க ... மடையுடைக்கும் ஆறாவோம்!
மறைக்க ... மறைக்க ... ஒளிகொடுக்கும் கதிராவோம்!
ஒறுக்க ... ஒறுக்க ... நிலம் பிளக்கும் கடலாவோம்!




...
...
...ரென்
...ர்...

...னதும்
...சங்கமித்த
...ம்
...லிக் கவிதை !

...ற்...

# சுதந்திரத்தைத்தேடி..



அன்றைய நாள் மிகவும் சோகமாக விடிந்ததுபோலத் தோன்றியது. மனதில் ஏதேதோ நெருடல்கள். நெஞ்சம் கனத்தது. ஏனென்றே தெரியவில்லை, எதையோ இழந்துவிட்டதுபோல் தவிப்பு உண்டானது.

சக போராளிகள் இருவர் வந்தனர். இவர்கள் முகங்களிலும் சோகம். காரணத்தை அறிய மனம் துடித்தது.

"உங்கட றெயினிங் மாஸ்ரர் சிறீமதியல்லோ வீரச்சாவு"

"ஆ.......? சிறீமதியக்காவோ? எங்க"
"மணலாத்தில......."

நான் அழவும் முடியாமல், கதைக்கவும் முடியாமல், வாயடைத்துப் போனேன்.

சிறீமதி.

உறுதியும், துணிச்சலும், தனக்கு கொடுக்கப்பட்ட வேலையைப் புரிந்து கொண்டு செயற்படக்கூடிய திடகாத்திரமான உள்ளமும் படைத்தவள் அவள்.

அல்லிப்பளையில், ஒருநாள் மண்வெட்டி வாங்குவதற்காக வீடொன்றுக்குச் சென்றோம். எம்முடன் சிறீமதியும் வந்தாள். அங்கே எம்மை வரவேற்றவர் ஒரு வயோதிபத் தாய் -சுகவீனமுடையவர். இருந்தாலும், தன்னால் இயன்றளவுக்கு எம்மை உபசரித்து, தேநீர் தயாரித்துத் தந்தார். நாங்கள் தேநீரை ஆவலோடு பார்த்தவண்ணம் இருக்க, சிறீமதியோ ஓடிச் சென்று, அம்மாவிடம் இருந்து தேநீரை வாங்கி எல்லோருக்கும் பரிமாறத் தொடங்கினாள். தாயோடு பிள்ளையாக, மக்களோடு மக்களாக ஒன்றுபடுகின்ற அந்தப் பண்பு அவளோடு கூடவே பிறந்தது.

இன்னொரு நாள்,

நாம் பதுங்குகுழி வெட்டிக் கொண்டிருந்தோம். எமக்கு உதவியாக மக்களும் சேர்ந்து வெட்டிக்கொண்டிருந்தார்கள். மதியமாகி வெகு நேரத்திற்குப் பின்னரும் உணவு வரவில்லை. எமக்கு உதவியாகப் பதுங்குகுழி வெட்டிக் கொண்டிருந்த மக்கள் பசியுடன் இருக்கின்றார்களே என்ற எண்ணம் மனதை உறுத்த, உணவு வரும் வழியைப் பார்த்துப் பார்த்துக் கண் பூத்துப் போன சிறீமதி, பக்கத்தில் ஒரு சைக்கிளை வாங்கிக் கொண்டு நாம் தங்கியிருந்த இடத்திற்குப் போனாள். அங்கே நின்ற ஏனைய போராளிகள் ஏதோ வேலையாக இருந்ததால் அவர்கள் உணவை எடுத்து வருவதற்குத் தாமதமாகி விட்டது.

வேகமாக வந்திறங்கிய சிறீமதியைக் கண்டதும், அவள் கோபமாக இருப்பது எல்லோருக்கும் விளங்கிவிட்டது. எல்லோரும் பதட்டத்துடன் இருந்தார்கள்.

"ஏன் இவ்வளவு நேரமும் சாப்பாடு கொண்டு வரேல்லை? வேலை செய்யிற சனங்கள் பாவமல்லோ?" என்று பொரிந்து தள்ளிவிட்டு, உணவை எடுத்துக் கொண்டு, போன வேகத்திலேயே திரும்பி வந்துவிட்டாள்.

இவளுக்கு இரண்டு ஆண் சகோதரர்களும், இரு சகோதரிகளும் இருக்கிறார்கள். அவளது சகோதரன் ஒருவர் எமது முழுநேர உறுப்பினராகக் கடமையாற்றுகிறார்.

இவள் தனது பாடசாலை நாட்களில் சக மாணவர்களினதும் ஆசிரியர்களினதும், மதிப்பைப் பெற்றிருந்தாள். படிப்பிலும், விளையாட்டிலும் கலை நிகழ்ச்சிகளிலும் முன்னணியில் திகழ்ந்தாள். தான் படித்த ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தின் பாடசாலை மாணவர் ஒன்றியத் தலைவியாகவும், அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவர் அமைப்பு உறுப்பினர்களுக்குப் பொறுப்பாகவும் நியமிக்கப்பட்டாள். இவள் சமகால நிகழ்வுகளையும், அரச படைகளால் மக்கள்படுகின்ற அவலங்களையும் கலைப் படைப்புக்களினூடாக மக்களுக்குத் தெளிவுபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தாள். அத்தோடு பெண்களை விடுதலைப் புலிகள் மகளிர் படையணிக்காக அணிதிரட்டுவதிலும் ஈடுபட்டாள்.

இப்படியிருக்கும் போது, ஒரு நாள் தன் தாயிடம்,

"அம்மா, இன்னும் எவ்வளவு காலத்துக்கு இயக்கத்துக்கு ஆட்களை எடுக்கிற வேலையையே செய்து கொண்டிருக்கிறது? இயக்கத்திலே சேரப்போறன்"

என்று கேட்டாள். அந்த வீரத்தாயும் மறுப்பேதும் சொல்லாமல், மகளைக் கூட்டிச்சென்று எம்மவரோடு இணைத்துவிட்டாள்.

எவராலும் அடக்கமுடியாத மதங்கொண்ட யானையைப் பிடித்துக் கட்டிய 'அரியாத்தை' பிறந்த முல்லைத்தீவு மண்ணிலேதான் சிறீமதியின் தாயும் பிறந்தவள் அல்லவா? அரியாத்தையின் வீரமும் உறுதியும் அவளிடமும் இருக்கத்தானே செய்யும்?

பயிற்சியை முடித்த சிறீமதி அரசியல் வேலைக்கென நியமிக்கப்பட்டு, மணலாற்றில் தனது வேலையைத் தொடங்கினாள்.. அப்போதுதான், தான் ஆயிரக்கணக்கான போராளிகளை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் அவளிடம் உண்டானது. அவளது எண்ணத்துக்கு ஏற்ப, அவளின் திறமையால் பயிற்சியாசிரியராக நியமிக்கப்பட்டாள்.

பதின்மூன்றாம் பயிற்சி முகாமுக்குத் துணையாசிரியராக இருந்த சிறீமதி, சிறீலங்கா இராணுவத்துக்கெதிரான எமது முதலாவது மரபுவழிப் போரான ஆகாயக் கடல் வெளித்தாக்குதலுக்கு உதவிக் குழுவாகச் சென்றாள். தனது பணியில் கண்ணும் கருத்துமாக இருந்தாள். இவள் மீது பொறாமை கொண்ட தடியொன்று இவளின் காலைப் பதம் பார்த்துவிட்டது. அந்தப் புண் நாளடைவில் பெரிதாகிவிட்டது. நடப்பதற்குக்கூடச் சிரமப்பட்டாள். இழுத்து இழுத்துத்தான் நடக்க முடிந்தது. ஆனாலும் தளரவில்லை. போர் ஒரு முடிவுக்கு வரும்வரை தனது பணியைத் தொடர்ந்து செய்தாள்.

அங்கிருந்து திரும்பியதும் மீண்டும், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பெண்களைப் புதிய போராளிகளாக மாற்றியமைத்தாள்.

ஒருமுறை,

எமக்குப் பயிற்சி நடந்துகொண்டிருந்தது. களைப்பு மிகுதியால் காவற் கடமையில் இருப்பவர்கள் தவிர, மற்றவர்கள் நித்திரைக்குச் சென்றுவிடுவார்கள்.. இரவில் சாப்பிடுவது பெரும்பாலும் குறைவு. உடல் அலுப்பால் உறங்கிவிடுவார்கள். எஞ்சுகின்ற உணவு கொட்டப்படும்.

இதைக்கண்ட பயிற்சி முகாம் பொறுப்பாளர் சிறீமதியைக் கூப்பிட்டார்.

"சிறீமதி, ஒருக்காப் போய் உன்ர பிள்ளையள் இருக்கற அறையளுக்குப் பின்னாலை பார், எவ்வளவு சாப்பாடு கொட்டிக்கிடக்குது எண்டு. நாளைக்கு முழுக்க அவையளுக்குச் சாப்பாடு குடுக்கக் கூடாது. அப்பத்தான் தெரியும் சாப்பாட்டின்ரை அருமை"

என்று சொல்லிவிட்டார்.

மறுநாள் காலை

பயிற்சியை முடித்துக்கொண்டு எல்லோரும் வரிசையில் இருக்கிறோம். எங்களிடம் வந்த சிறீமதி கண்டிப்பான தொனியில்,

"ஏன் பிள்ளையள் இவ்வளவு சாப்பாட்டையும் கொட்டியிருக்கிறியள்? இரவிலை ஏன் ஒருதரும் சாப்பிடுறதில்லை? இப்படி இரவில சாப்பிடாம விட்டா விடிய என்னெண்டு றெயினிங் எடுக்கிறது?"

என்று, தொடர்ந்து ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிட்டு,

"இண்டைக்கு முழுக்க நீங்க ஒருதரும் சாப்பிடக்கூடாது. அப்பத்தான் உங்களுக்குச் சாப்பாட்டின்ர அருமை தெரியும்"

என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். அன்று முழுவதும் எவருமே சாப்பிடவில்லை. இவளும் சாப்பிடவில்லைத்தான். நாங்கள் எவ்வளவோ கெஞ்சியும் இவள் சாப்பிடவில்லை. வழமைபோல் நாளாந்தப் பயிற்சியை முடித்த பின் இரவு சாப்பிடாமல் படுத்த ஒவ்வொருவரையும் எழுப்பி, சாப்பிட வைத்து நாங்கள் சாப்பிட்ட பின்தான் அவள் சாப்பிட்டாள். அந்த நேரத்தில் அவளது உணர்வு, எங்களின் உணர்வுகள் எப்படி இருந்தனவென்று வார்த்தைகளால் சொல்வது கடினம். அன்னையின் அரவணைப்பில் உள்ளது போல், அதற்கும் மேலே மேலே... உணர்ந்தோம்.

பிள்ளைகளைத் தண்டிக்க விரும்பாத சிறீமதி அடிக்கடி கூறுவது இதுதான்.

"பிள்ளையள், சும்மா சும்மா குழப்படி செய்து அநியாயமாப் பனிஸ்மென்ற் வாங்காதேங்கோ".

பயிற்சியை முடித்த பின்னர் எமது குழுக்களில் ஒரு பகுதி தொண்டைமானாறுக்குச் சென்றது. அதற்குத் தலைமை தாங்கியவள் சிறீமதிதான். அங்கிருந்து வளலாய் இராணுவ முகாமுக்குக் காவற் கடமையைச் செய்வதற்காகச் சென்றுவருவோம்.

எந்த நேரமும் இராணுவம் முன்னேறலாம், சண்டை தொடங்கலாம் என்பதால் எதிரியை எதிர்பார்த்தே நின்றோம். அப்போது எங்களுக்குப் போர் அனுபவம் எதுவுமில்லை.

"பிள்ளையள், பயப்பிடக்கூடாது, நல்லா அடிபடோணும். அதுக்காக மோட்டுத்தனமாய்ப் போய் மாட்டுப்படக்கூடாது. கவனமா, நிதானமா அடிபடோணும், என்ன?"

என்ற இவளுடைய வார்த்தைகள் எம்மை உறுதியாக்கும். போருக்குத் தயார்படுத்தும்.

இவளுடன் நாம் இல்லாவிட்டாலும், எம்மை எங்காவது காணும் பொழுதுகூட எம்மில் கவனம் தான்.

"என்ன பிள்ளையள் இந்த உடுப்பின்ர நிறம்? ஒழுங்காத் துப்பரவா இருக்கிறதுக்கென்ன, ஆ?" என்று செல்லமாகக் கண்டிப்பாள்.

அப்போது,
எமது இதயபூமியை ஆக்கிரமிக்கும் நோக்குடன் சிறீலங்கா இராணுவத்தினர் மீண்டும் காட்டுக்குள் முன்னேற முயன்றனர்.

எதிரியுடன் மோத எமது படையணிகள் தயாராகிக் கொண்டிருந்தன. சிறீமதிக்கோ புதிய போராளிகளுக்குப் பயிற்சி கொடுக்குமாறு உத்தரவிடப்பட்டது. விடுவாளோ அவள்? மகளிர் படையணியின் தளபதியிடம் போய்ச் சண்டை பிடித்தாள்.



**கப்டன் சிறீமதி**
சிவகலா துரைராசசிங்கம்
ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு
பிறப்பு :- 1970-12-09
வீரச்சாவு:- 1992-03-23

"என்னைச் சண்டைக்குப் போகவிடுங்கோ. போயிட்டு வந்து றெயினிங் குடுக்கிறன்"

இறுதியில் சிறீமதியின் பிடிவாதந்தான் வென்றது. சண்டைக்குச் சென்றாள். போர்முனைக்குப் போகும் போது, மீண்டும் ஒரு புறநானூறு எழுந்தது. மகளிர் படையணியினர் பயணம் செய்த வாகனம், போகும் வழியில் சிறீமதியின் வீட்டு வாசலின் முன்னால் பழுதடைந்து நின்றுவிட்டது. வாகனத்தைத் திருத்துவதற்கு இவளது குடும்பத்தினர் உதவி செய்தனர்.

தமிழீழத்தின் வீரத் தாய்மாருள் ஒருத்தியும் சிறீமதியின் அன்னையுமான அந்த மாதர்குல மாணிக்கம்,

"நல்லாச் சண்டை பிடிச்சு, அவங்களை அடிச்சுத்திரத்திப் போட்டு வெற்றியோட வாங்கோ"

என்று தன் மகள்களை ஆசிர்வதித்து, விடை கொடுத்தாள். தன் பெண் குழந்தைகளை ஒரு தாய் போருக்கு அனுப்பும் புதிய புறநானூறு ஒன்று அங்கே எழுதப்பட்டது. இதுதான் இந்த மண்ணுக்கேயுரிய இயல்பு. வாகனம் மீண்டும் தன் பயணத்தைத் தொடர்ந்தது.

சிறீமதி திடீரென்று தன் மனதில் ஏதோ நினைத்தவளாய்... கண் கலங்க... தனக்கருகில் இருந்த தோழியிடம் கூறுகிறாள்.

"நான் இயக்கத்துக்கு வந்ததற்கு ஒரு நாள் கூடக் கவலைப்படேல்ல. இப்ப அம்மா, அப்பா, சகோதரங்களையும் கண்டிட்டன். ஆனா உயிரையும் விடப் பெரிசெண்டு தான் நினைக்கிற இந்த மண்ணையும், மக்களையும் காக்கவெண்டு வெளிக்கிட்டவரைத்தான் காணேல்ல. அதுதான் எனக்கு இப்ப கவலையா இருக்கு".

அவளின் கண்களில் கண்ணீர் வழிந்தது.
போர் முனையைப் படையணிகள் அடைந்துவிட்டன. சிறீமதி ஒரு குழுவுக்கு தலைமை தாங்கினாள். எதிரியிடமிருந்து எண்ணற்ற ரவைகளும் குண்டுகளும் எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தன.

"செல் குத்துறான். எல்லாரும் கவரில நிண்டு அடிபடுங்கோ"

"கவனமா ஒருதரையும் விடாம தூக்கிக்கொண்டு போங்கோ"

சிறீமதியின் குரல் முன்னணியில் நின்று வழி நடத்திக் கொண்டிருந்தது. எதிரியிடம் இருந்து வந்த எறிகணை ஒன்று தன்னிடம் இருந்து இவள் எல்லோரையும் தப்ப வைக்கிறாளே என்ற கோபத்தினாலோ என்னவோ, இவளது தலையைச் சீவிச் சென்றது.

ரீ81 துப்பாக்கியையும், வோக்கியையும் தனது இரு கைகளாலும் அணைத்துப் பிடித்தபடி, விழுந்த சிறீமதியின் வாயிலிருந்து...

"பிள்ளையள்"

என்ற ஒரு சொல் மாத்திரமே வந்தது என்று, அவளோடு களத்தில் நின்ற தோழிகள் விம்மலுடன் கூறினார்கள்.

முல்லைமண் பெற்றெடுத்த புதல்வியின் குருதியால், எமது இதயபூமி தன் வளத்துக்கு மேலும் உரம் சேர்த்துக் கொண்டது.

அவள் காவல் செய்த தொண்டைமானாற்றுக் கடலோ தனது அலைகளை உயர்த்தி,

"சிறீமதி எங்கே? எங்கே?"
என்று தேடுகிறது.

இவளின் அக்கா மகன் தீபன்,
"அன்ரி அன்ரி"

என்று, வீட்டுக்கு வரும் பெண் போராளிகளில் சிறீமதியைத் தேடுகிறான். அவள் வளர்த்தெடுத்த புதிய தலைமுறைகளோ அவளின் இலட்சியக் கனவுகளையும், ஆசைகளையும் சுமந்து போராடிக் கொண்டிருக்கின்றனர். ■

- உலகமங்கை -

## ஒரே குடும்பத்தில் ஐவர் விமானக்குண்டு வீச்சுக்கு இரை!

தென் தமிழீழ அளம்பில் பகுதியில் சிறீலங்கா மிகையொலி விமானங்கள் நடத்திய வான்வழிக் குண்டுவீச்சில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டு மிகையொலி விமானங்களால் வீசப்பட்ட ஆறு குண்டுகள் இப்பிரதேசத்தில் விழுந்து வெடித்த வேளையில், இம் மரணங்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன், பல வீடுகளும் வர்த்தக நிலையங்களும் இடிந்து தகர்ந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

சிறு கதை

# திதி

சாவித்திரி அத்துவிதானந்தன்

இரவு பத்துமணிக்கு மேல் கேட்கத் தொடங்கிய குண்டுச் சத்தங்களும் வெடிச்சத்தங்களும் விடிந்த பிறகும் ஓய்ந்தபாடில்லை. வழமையான காலை நேரத்துப் பரபரப்பு எதுவுமின்றிப் பத்தமேனிப் பிரதேசம் அன்று ஓய்ந்து போய்க்கிடக்கிறது. வெடிச்சத்தங்கள் கேட்டவுடன் இரவோடிரவாக சனங்கள் வெளியேறி அயல் ஊர்களுக்குப் போய்விட்டிருந்தார்கள். இப்படி இடம்பெயர்வது இப்போதெல்லாம் வழமையாகிப் போன விசயம். மீண்டும் இரண்டொரு நாட்களில் அத்தனை பேரும் சொந்த இடத்துக்குத் திரும்பிப் போய்விடுவார்கள்.

முகாம்களில் முடங்கிக் கிடக்கும் சிங்கள இராணுவம் அவ்வப்போது நரவேட்டையாடப் புறப்படும் நாட்களில், மக்களின் இந்த இடப்பெயர்வும், தொடர்ந்துவரும் நாட்களில் மீண்டும் திரும்புதலும் நிகழும்.

இந்த இடம்பெயர்தலுக்கும், மீண்டும் திரும்புதல் நடவடிக்கைக்கும் செல்லம் என்றுமே விதிவிலக்கு.

அவள் ஒரு தனிக்கட்டை. அதுதான் காரணமோ?

'எல்லோருமே இடம்பெயர்ந்து போய் விட்டால் இன அழிப்புக்குப் புறப்படும் இராணுவத்தை மீண்டும் முகாமினுள் முடக்குவதற்காக -இரவு பகலாய்க் காத்து நிற்கும் 'பிள்ளை'-களுக்கு -சண்டைபிடித்துக் களைத்துப் போன நிலையில் -குறைந்தபட்சம் தேநீரையாவது கொடுப்பதற்கு அங்கே யார் இருப்பார்கள்?' -என்று செல்லம் நினைப்பதும் இதற்கு ஒரு காரணம்.

சண்டை ஓய்ந்த பிறகு - சூடான தேனீரை எதிர்பார்த்துப் 'பிள்ளைகள்' இந்த அம்மாவிடம் வருவது வழமையான விசயமாகிவிட்டது. அவர்கள் சண்டையைப் பற்றி அம்மாவுக்குச் சொல்லுவார்கள். அம்மா ஆவலுடன் கேட்பாள். அவளிடம் சாப்பிட்டவர்கள், பழகியவர்கள் சண்டையில் காயம்பட்டதையும், சாவடைந்ததையும் அவர்கள் சொல்லும் போது உடைந்து போவாள்; விம்முவாள். தன்னுடைய பிள்ளைகளுக்கு இப்படி வேதனையா? அவ்வளவு பாசம் கொந்தளிக்கும். எதிரிகளைச் சபிப்பாள், திட்டுவாள். கோபத்தின் சுவாலை மூண்டெரியும்.
இன்னமும் சத்தங்கள் ஓய்ந்தபாடில்லை.

இன்று செல்லத்தின் கணவருடைய திதி.

87 - ஆண்டு பிரம்படியில் இந்திய ராணுவ டாங்கிகளின் கீழ் நசியுண்ட உயிர்களில் செல்லத்தின் கணவருடையதும் ஒன்று.

அன்றிலிருந்து இவள் தனிக்கட்டை. பிள்ளைகள் இல்லை. கணவருடைய ஓய்வூதியத்தில் வாழ்க்கை.

கடந்த ஐந்து வருடங்களாகக் கணவருடைய திதிவரும் தினத்தன்று, அருகிலுள்ள சிவன்கோவிலில்...

அரிசி, தேங்காய், இன்னும்... சமையலுக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் ஐயரிடம் கொடுத்து, சிவனுக்கு அர்ச்சனை செய்து பிரசாதமும் பெற்றுக்கொண்டு வந்துதான், வீட்டில் சமையல் செய்து அவள் சாப்பிடுவது வழக்கமாகியிருந்தது.

போராளிகளை அன்றைய தினத்தில் வரவழைத்து, அவர்களையும் தன்னோடு சேர்ந்து சாப்பிடவைப்பாள்.

கணவனுக்குச் செய்ய வேண்டிய மிகப்பெரிய கடமையை இந்தத் திதியின் அன்றுதான் செய்வதாக நினைத்துச் செல்லம் திருப்தி கொள்வாள்.

நேற்று மாலை உண்டியல் உடைத்துப் பொருட்களை வாங்கிவைத்து...

சிவன் கோவில் ஐயரிடமும் சொல்லி வைத்திருந்தாள் -நாளை கணவனுடைய திதி என்று.

சற்று ஓய்ந்திருந்த வெடிச்சத்தங்கள், இப்போது மீண்டும் இடைவிடாமல் கேட்கத் தொடங்கின.

இரண்டு உலங்கு வானூர்திகள் தாழப்பறந்து வட்டமிட்டுக் கொண்டிருக்க, குண்டுவீச்சு விமானங்கள் மாறிமாறிக் குத்தி எழுந்து குண்டுகளை வீசின.

'இண்டைக்குப் பாத்து இப்பிடி நடக்குதே...' -என்று அடிக்கடி மனதுள் கவலைகொண்டாள்.

"பிதிர்க்கடன் செய்யாமல்விட்டா, பிதிர்கள் சாபம் போடுமாம்" என்று தனது தாய் முன்னர் அடிக்கடி சொல்வது இப்போது ஞாபகம் வருகிறது.
இதென்ன சோதனை?

வாகனங்களின் இரைச்சல் அடிக்கடி கேட்பதும், பின்னர் தேய்வதுமாக இருக்கிறது.



"காயப்பட்ட பொடியளைக் கொண்டு போகினம் போலை...! எத்தினை பிள்ளையள் காயம்பட்டுதோ... எத்தினை பிள்ளையள் உயிர் விட்டுதோ... சிவ சிவா..."

செல்லத்தின் மனம் ஒரு நிலையில் இல்லை. ஒருவேளை இடம்பெயர்ந்த சனங்களோடு சிவன்கோவில் ஐயரும் போயிருப்பாரோ?

போயிருந்தால் இன்று திதி செய்ய முடியாமல் போய்விடும்... 'பிதிர்க்கடன் செய்யாமல்விட்டா பிதிர்கள் சாபம் போடுமாம்...'

நேரம் 10.00 மணி.

'கணீர் கணீர்' எனச் சிவன் கோவில் மணி ஒலிக்கிறது. 'அப்பாடா...'

செல்லத்தின் மனதில் பெரியதொரு நிம்மதி பிறக்கிறது.

ஐயர் எங்கும் போகவில்லை...

அடுத்தது பகல் 12.00 மணிப்பூசை.

அந்த நேரத்துக்குத்தானே வருவதாகச் செல்லம் ஐயரிடம் சொல்லியிருந்தாள்.

பன்னிரண்டு மணிக்கு ஆரம்பித்தால் பூசை புனஸ்காரம் எல்லால் முடியக் குறைந்தது இரண்டு மணி நேரம் ஆகும்...

முழுகிக் குளித்துக் கோவிலுக்குப் போகும் ஆயத்தத்துடன் செல்லம் வந்தபோது நேரம் 11.30 ஆகியிருந்தது...

'இப்ப வெளிக்கிட்டால் பன்னிரண்டு மணிப்பூசைக்குச் சரியாயிருக்கும்...'

உரப்பையினுள் கட்டிவைத்திருந்த பொருட்கள், அர்ச்சனைப் பொருட்கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டுப் புறப்படுகிறாள்.

சண்டை ஓய்ந்துவிட்டதன் அறிகுறியாய் இப்போது சத்தங்கள் முற்றாக ஓய்ந்திருந்தன.

உலங்குவானூர்தி - விமானங்கள் எதுவும் இல்லை.

வெளிப்படலையைத் திறந்த செல்லம் -மேலே ஒரு அடிகூட வைக்காமல் அப்படியே நின்று விடுகிறாள். முகத்தில் ஏதேதோ சிந்தனையின் சாயல்கள்...

'சண்டை ஓஞ்சிட்டுது... இன்னும் கொஞ்ச நேரத்திலை பிள்ளையள் ஆரும் என்னைத்தேடி வருங்கள்...'

'ராத்திரித் துவக்கம் அடிபட்டுக்களைச்சு இப்ப ஒரு தேத்தண்ணி குடிக்க என்னைத் தேடி வரேக்கை நான் இல்லாட்டி அதுகள் என்ன செய்யும்?'

குற்றம் செய்வது போன்றதொரு உணர்வில் அவள் பரிதவித்துப் போகிறாள்.

'பிதிர்க்கடன் செய்யாமல் விட்டா பிதிர்கள் சாபம் போடுமாம்...'

"சிவ சிவா... நான் என்ன செய்ய?" -வாய்விட்டுக்கூறிய செல்லத்தின் மனதில் மாறிமாறிப் போராட்டம் நடக்கிறது.

போவதா? நிற்பதா?

ஒரு சில நிமிடங்கள் தான் -

அவளுள்ளே ஒரு தீர்மானம் பிறக்கிறது. திரும்பி உள்ளே வருகிறாள்.

87 - ஆம் ஆண்டு திலீபனுடைய இறுதி யாத்திரையில் கலந்துவிட்டு வந்த பிறகு, தொடர்ந்து சில நாட்கள் அந்தச் சோகத்திலிருந்து மீள முடியாமல் தனது கணவர் தவித்த தவிப்பையும், போராளிகளின் மீதும், போராட்டத்தின் மீதும் அவர் வைத்திருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்திய அவரது நடவடிக்கைகளையும் செல்லம் இப்போது நினைத்துப் பார்க்கிறாள்...

பன்னிரண்டு போராளிகள் ஒரே சிதையில் எரிந்த போது அந்தத் தீயில் தானும் விழுந்துவிட்டது போலப் புழுவாகத் துடித்த தன் கணவருடைய மனப்பாங்கு... இப்போது அவள் நினைவில் முட்டங் கொண்டன.

எந்த நேரம் என்றில்லாமல், யாரென்றில்லாமல் -ஊருக்குள் திரியும் எந்தப் போராளியைக் கண்டாலும், வீட்டுக்குக் கூட்டிவந்து சாப்பிடச் செய்த பின்பே, அனுப்பி வைக்கும் தன் கணவருடைய பாச உணர்வு... மீண்டும் மீண்டும் வருகின்றது.
பெரும்பாலான நாட்களில், போராளிகள் இவர்களின் வீட்டுக்கு வந்து போன பிறகு, "போராட்டத்துக்கு அனுப்பி வைக்கிறதுக்கு எங்களுக்கொரு பிள்ளை இல்லாமல் போட்டுதடி செல்லம்..." என்று கூறி ஆதங்கப்படும் உணர்வுள்ள அந்த மனிதரின் பரிதவிப்பு மாறாமல் அவளுள் துளிர்க்கிறது.

'தமிழனை அழிப்பதற்காகப் பல்கலைக்கழக வளவினுள் இறக்கப்பட்ட இந்திய இராணுவத்தினர் இருபத்தொன்பது பேரையும், இறக்கப்பட்ட கையோடு வெற்றிகரமாக எதிர்த்தடித்துவிட்டனர் எங்களுடைய போராளிகள்' என்ற செய்தி கேள்விப்பட்டதும், அந்தக் காட்சியை நேரில் காண்பதற்கென அச்சுவேலியிலிருந்து மிதிவண்டியில் திருநெல்வேலிக்குப் போய்த் திரும்பி வராமலே உயிர் பிரிந்த தனது கணவனை... இப்போது நெகிழ்ச்சியோடு நினைவு கூர்கிறாள் செல்லம்.

இப்படிப்பட்ட தன் கணவர், சண்டைபிடித்துக் களைத்தப்போய் வரப் போகின்ற பிள்ளைகளைப் பற்றி எண்ணிப்பாராமல், திதி செய்வதற்காக கோவிலுக்குப் போகும் தன் செயலை, நிச்சயம் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பதை அவள் மனம் உணர்கிறது.

இன்று - தன் கணவர் உயிருடன் இருந்திருந்தால், இந்தச் சமயத்தில் என்ன செய்திருப்பார்...? அல்லது செல்லம் எதைச் செய்ய வேண்டும்? என எதிர்பார்த்திருப்பார் என்பதும் மனதில் கேள்விகளாக முகங்காட்டுகின்றன.

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# விதைக்கப்பட்டது வீரமும்தான்



ஜீவா
(கந்தையா கெங்காதரன்)
பெரியதம்பனை,
செட்டிகுளம்,
வவுனியா.
27. 10. 1964 - 11. 03. 1986

"ரவை முடிந்துவிட்டது. இனி எங்களுக்கிது பயன்படாது. ஆனாலும், றைபிளை அவங்களின்ரை கையில கிடைக்கவிடமாட்டன்".

நிதானமாக 'வோக்கி'யில் சொல்லியவன், அருகில் இருந்த மரத்தோடு எஸ். எல். ஆரை அடித்து நொருக்கினான்.

இப்போது அவர்களிடமிருப்பது 6 குண்டுகள். ஒவ்வொன்றாக வீசத் தொடங்கினார்கள்.

எதிரிகள் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். அவை தங்களது கடைசி நொடிகள்தான் என்பது ஜீவாவுக்கும், ரஞ்சனுக்கும் தெரியும். ஜீவா கழுத்தைத் தடவினான். சயனைட்டைக் காணவில்லை; ரஞ்சனிடமும் இல்லை.

"எங்களிடம் குப்பி இல்லை. ஆனாலும் உயிருடன் பிடிபடமாட்டோம்..." -ஜீவாவின் குரல் உறுதியோடு 'வோக்கி'யில் ஒலித்தது.

நாங்கள் உறைந்து கொண்டிருந்தோம். எதுவுமே செய்ய முடியாத நிலை; எதுவுமே சொல்ல முடியாத நிலை. ஒவ்வொரு தடவையும் -அவர்கள் பதிலுக்காய் காத்திருக்கவுமில்லை.

"என்ன செய்ய...?" என்று அவர்கள் கேட்கவில்லை; "இன்னது செய்கிறோம்..." என்றுதான் சொன்னார்கள்.

5 குண்டுகள் வீசப்பட்டன. எஞ்சியிருப்பது ஒன்றே ஒன்று. அந்தக் கடைசி மணித்துளிகளிலும், ஜீவா தெளிவாகவும் உறுதியாகவும் 'வோக்கி'யில் கதைத்தான்.

"நாங்கள் புலிகள். ஒரு புனிதப் பாதையில், தியாகத்தின் அடிப்படையில் தலைவர் எங்களை வளர்த்தார். எங்கள் வீர மரபுக்கிணங்க எம்மை நாமே அழித்துக்கொள்கிறோம். எம்மிடமிருக்கும் ஒரேயொரு குண்டு அதைச் செய்யப் போகிறது. நாங்கள் கட்டிப் பிடித்துக் கொண்டு, எங்களுக்கிடையில் வைத்து குண்டின் கிளிப்பைக் கழற்றுகிறோம்".

அவ்வளவுதான்; தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.
எங்களால் ஜீரணித்துக்கொள்ள முடியாமலிருந்த அந்தச் சில விநாடிகள் கழிய, அந்தக் குண்டின் அதிர்வு எங்கள் இதயங்களைத் தாக்கியது. ஜீவாவையும், ரஞ்சனையும், இறுதிவரை எங்களை இணைத்திருந்த அந்த 'வோக்கி'யையும் நாங்கள் இழந்துவிட்டோம்.



லெப் கேணல் நீகன்
(இராசையா சிற்றம்பலம்)
வெல்லாவெளி,
மட்டக்களப்பு.
06. 11. 1963 - 16. 07. 1990

மட்டக்களப்பு-

பாலையடிவெட்டையில், முன்னேறிவந்து நிலைகொண்டுள்ள படையினரைத் தாக்க புலிகள் திட்டமிட்டனர்.

கடைசி வேவு பார்த்து, இராணுவத்தின் பலம் -பலவீனத்தை அறிந்துவர, தளபதி நீகன் இன்னுமொரு போராளியையும் கூட்டிக்கொண்டு ஸ்தலத்திற்குச் செல்கிறான்.

இடை வழியில். இன்னொரு இராணுவ அணியை எதிர்பாராதவிதமாக எதிர்கொள்ள நேரிடுகிறது.

மோதல் வெடித்தது - நீகனுக்குக் குண்டடிபடுகிறது.

இவர்கள் இருவர்; எதிரியோ கும்பலாக இருந்தான். இயலுமானவரை பின்னால் வந்தார்கள். இரத்தம் ஓடிக்கொண்டே இருந்தது. ஒரு அளவுக்கு மேல் நீகனால் நகர முடியவில்லை.

கூடப்போன போராளியால், தளபதியை நீண்ட தூரம் தூக்கிக்கொண்டு தப்பி ஓட முடியவில்லை. மிகவும் சிரமப்பட்டான்.

நீகன் சொன்னான்: "இனி என்னால வர ஏலாது. நீயும் நிண்டால் சாக நேரிடலாம். ஆயுதங்களும் பிடிபட்டுவிடும்; என்னைவிட்டிட்டு, எல்லாத்தையும் கொண்டு நீ ஓடு".

'மட்டக்களப்பின் போராட்ட வரலாற்றில் ஒரு தனி அத்தியாயம்; அந்தப் பிராந்தியத்தின் இரண்டாவது தளபதி. தன்னந்தனியனாகச் செத்துக் கொண்டிருக்க, எப்படி இடைநடுவில் அநாதரவாக விட்டுவிட்டுச் செல்லலாம்...?' அந்தப் போராளி உறைந்து போய் நின்றான்.

ஆனால் வேறுவழி எதுவுமே அற்ற நிலை.

தன்னிடமிருந்த எம் 16 கிரனேட் லோஞ்சரையும், இடுப்பில் கட்டியிருந்த பிஸ்டலையும் கழற்றிக் கொடுத்து -கருணா அம்மானிடம் சொல்லவேண்டிய சில இரகசியத் தகவல்களையும் காதோடு சொல்லிவிட்டு, குப்பியைத் தன் வாயில் செருகிக்கொண்டே, "போட்டு வா" என்று வழியனுப்பி வைத்தான் அத்தளபதி. ■

## போர் உலா....

ஒன்று தூரத்தே அழுது கிட்டியது. பின் கடந்து போனது. திடீரென மனதில் ஏக்கம் படர்ந்தது. அது ஆட்காட்டிதான். தன் இணையைத் தேடுது போலும். காட்டுக்குள் திடீர் சலசலப்பு. திடுக்குற்றேன். அது மிக மிக வேகமாய் அண்மித்தது. கூடாத மணம் நீக்கமற்றதாய் பரவியது. சலாம், மச்சான் ஏதோ வருகுதடா! யானை போல. ஒழுங்கையை மறைத்து 75 யார் தூரத்தில் கருங் குன்று ஒன்று மூசியபடி நின்றது. இரண்டு விழிகள் பளபளத்தது. வாலால் இலையான்களை விளாசியது போல சத்தம். எம் பக்கமாய்த் திரும்பிப் பார்த்தது. துதிக்கையை உயர்த்தி ஏதோ செய்தது.

"மச்சான் இனி ஓடேலாது. இதயனை எழுப்பு. ஓடிப்போய் ரைக்ரரை ஸ்ராட் பண்ணி லைற்றை போகஸ் பண்ணு பார்ப்பம்".

ரி 81 ஐ லோட் செய்து சேஞ்சில் லிவரை றெகுலராக்கினேன். ரைக்ரர் ஒளியில் கண் மின்னியது. ஒளிக்கு நேராய் வரத் தொடங்கியது.

"இனி ஆபத்து. நீ இதயனோட பின்னால ஓடு. நான் பார்க்கிறன்".

வரவர நெருங்கிவிட்டது இயற்கைவளம், வீணே மிருகங்களை சாகடித்தால் எமது தேசவளத்தை பெருமளவு பாதிக்கும். எமது போராளிகள் இவ்விடயத்தில் கவனமாய் கையாள வேண்டும். காட்டில் பொறுப்பாளர்கள் கூறுவர். சலாமைத் தொடர்ந்து விரைவாய் ஓடினேன். இனி ஏலாது. டுமீல் யானையின் தலைக்கு மேலாக ரவை ஒன்றைச் செலுத்தினேன். ஒரு கணம் நின்று மீண்டும் இந்தக் கணம் பலமாகப் பிளிறி துரத்தத் தொடங்கியது. இனி தவிர்க்க முடியாது, போடத்தான் வேண்டும். "ஐயோ" என பெரிய மரக் கட்டையில் விழுந்து எழும்பினான் இதயன். அவனைத் தூக்கினான் சலாம்.

வீரைக்கு பின் நிலையெடுத்து 45 யாருக்கு நெருங்கியவுடன், வெறியாய் வரும் அந்தக் கருங் குன்றின் நெற்றியில் டுமீல்... டுமீல்... நேராய் ஓடிவந்து குப்புற வீழ்ந்தது. "தவிர்க்கேலாது". பெருமூச்சுடன் நடக்கத் தொடங்கினோம். குருதி சிறிது சிறிதாய் சொட்டுப் போட்டது கீறல்களிலிருந்து. இப்போ சலாம் காவலில் ஈடுபட்டான். காலை விடிய ஆரம்பித்தது. புள்ளினங்கள் பாட நான் மயங்கி உறங்கிப் போனேன்.
காலை 9. 30 மணியளவில் தட்டி எழுப்பினான். வோக்கியில் அருகிலுள்ள முகாமுடன் தொடர்பு கொள்ள ரைக்ரரில் உணவு வந்து சேர்ந்தது. பாண் பிசுபிசுக்குது. கறி ஒரு மாதிரிக் கிடக்குது. சலாமின் முகத்தில் துளி ஒளிர்வுமில்லை.

"தெரியுந்தானே அண்ணை? இது சரியான தூரம். விடியச் சாப்பாடு 11. 00 மணி அப்படித்தான் வரும், இது இராத்திரியான்" என்றான் வந்த போராளி. பாணைக் கடித்துவிட்டு தண்ணீரை கானிலிருந்து வார்த்தேன். வஞ்சகமில்லாமல் நிறைய மிதந்தது. "தண்ணீர்ப் பிரச்சினையோ?" என்றேன். ஓமண்ணை, ஆழமான கிணறு. எப்பிடியோ குடம்பி பெருகுது. ஆனா நல்லாக் கொதிக்க வைச்சது. வடிச்சும் கொஞ்சம் மிதக்குது".

"சரி பரவையில்லை. டேவிற் அண்ணற்ற தொடர்பு இருக்கோ?"

"ஓ, விடிய 8. 10 போல எடுத்தவர். சாப்பிட்டு வாங்கோ போவம். இதுக்க சனம் வராது. கட்டவுட்டும் நிற்குது விடமாட்டாங்கள்".

நாம் சனசஞ்சாரமற்ற மரக்கூடலுக்குள் 'உருப்படிகளை' மறைத்துவிட்டு, அதற்குரிய காவற் பொறுப்புகளை அந்த முகாம் பொறுப்பாளரிடம் ஒப்புவித்த பின்னர் எல்வ் றக்கில் ஏறி, மாங்குளம் நோக்கிப் பறந்தோம். பெரிய பாலம், மரப்பாலம் எல்லாம் கடந்து நேராக விரைந்தது.

தூரத்தே நிமிர்ந்து நின்ற ஈட்டி போன்றதைக் காட்டி ஈசன் சிரித்தார்.

"உதுதான் அவன்ர ரவர்"

மேலும் மேலும் நெருங்க அந்த 'ரவர்' பல இழுவைகள் சுற்றி இழுக்கப்பட்டு கட்டி உறுதியாய் நிமிர்ந்து நின்றது. மெதுவாய்ப் போன றக் தரித்து, பின் மெதுவாய் ஒரு சிறு ஒழுங்கைக்குள் திரும்பியது.

"நேரா மெயின் றோட்டால போகேலாதோ?"

"போனா பொடியும் எடுக்கேலாது. உந்த வளைவுக்கு அங்கால அவன்ர 'ராகற்'. நாய் போனாலும் சுட்டுத்தள்ளுவான். ஒரு தேட்டியும் 303 2எம். ஜியும் வைத்து அடிக்கிறவன்".

ஒழுங்கை மிக மோசமானது. அது உண்மையில் வயலாக இருந்து பின் எம்மவரால் ஒழுங்கை ஆக்கப்பட்டதென எண்ணிக் கொண்டேன். இன்னும் ஓர் ஒழுங்கை சீராகப் பிரிந்து சென்றது.

"உதால போகேலாதோ?"

"உதத்தான் முந்தி பாவிச்சனாங்கள். ஒரு நாள் பெரிய ஜீப் ஒன்று போக அங்கிருந்து 4 அஞ்சிஞ்சி குத்திவிட்டான். நல்ல ரேஞ்சா விழுந்து 6 பேருக்குக் காயம். பிறகு வாகனத்தில போக வேண்டாமென்று மக்கன்றோ அண்ணையாக்கள் சொன்னவை நடந்து போகலாம்".

ஒரு முகாமின் முன் போய் நின்றது. நேரம் பி. ப. 2. 30 -மதிய உணவை அங்கே எடுத்துக் கொண்டோம். பின் ஜீவன் வந்து படை முகாமைப் பார்க்கவென அழைத்தார். மூவரும் சேர்ந்து கொண்டோம். இதயனின் முகம் இப்போ மகிழ்ச்சியாக இருந்தது. வேதனை மறைந்ததோ அல்லது பொருட்படுத்தவில்லையோ தெரியவில்லை. இரவு விழுந்து கட்டை கிழித்த காயம், இரத்தம் உறைந்து போய் இருந்தது. ஜீன்ஸ் கிழிந்து கிடந்தது. பிரதான வீதி ஓரமாய் நடந்து சென்றோம். எறிகணைகள் விழுந்தும், குண்டு வீச்சினாலும் வீடுகள் சிதைந்து போய்க் கிடந்தன. ஒரு குடிசை வீடு எரிந்து போய்க் கிடந்தது. சட்டிகள் பானைகள் கருகித் துண்டு துண்டாய்ச் சிதறிக் கிடந்தன. உடைகள் எரிந்து அரைகுறையாய்க் கிடந்தன. வேலிக் கம்பியில் சேலை ஒன்று சிக்கிப் பறந்து கொண்டிருந்தது. அது நாராய்க் கிழிந்து வெளிறிப்போய், வீட்டைவிட்டு ஓடிய தாயின் அவசரத்தைக் காட்டியது.

முற்றத்தில் நின்ற மாமரம் அரைப்பகுதி கருகிப் பட்டுப் போயிருந்தது. இன்னொரு புறம் துளிரிருந்தது. அவ்ரோ எரி குண்டு வீசியிருக்க வேண்டும். எரிந்த சாம்பல் மேட்டில் சில புற்கள் துளிர்விட்டன. ஆச்சரியமாக இருந்தது. இதில் எப்படி? இது நல்லா மழை பெய்தபின் காகம் போட்டிருக்கும்.

அடுத்ததாய் பெரிய வீடொன்று உள்ளே கூரை பிரிந்து, இரவென்றும் பகலென்றும் பாராமல் ஒளியாய் இருந்தது. தென்னை ஒன்று வட்டுச் சரிந்து கிடந்தது. ஒரு எதிரியின் முகாம் எமக்கு பலவகையில் பிரச்சினைகளைத் தருகிறது. இராணுவ ரீதியாகப் பார்ப்பின் எமது நகர்வுகளை ஓரளவு கட்டுப்படுத்துகின்றான். போராளிகளின் நேரமும் உடல் உழைப்பும் குறிப்பிட்ட அளவிற்கு செயலாக்கப்படுகிறது. மேலும் தந்திரோபாயமான தொந்தரவுகளை ஏற்படுத்துகிறான். இதன் போது எமக்கு ஆயுதச் செலவும், உயிரிழப்பும் அதிகரிக்கின்றது. இவை மட்டுமா?

அரசியல் ரீதியாகவும் எமக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. மக்களின் வாழிடப் பிரச்சினை போன்றவையும் தன்னாதிக்க வல்லமை உண்டென அவன் மார்தட்டவும் இம் முகாம்களே காரணம். பொருளாதார ரீதியாக மிகத் துன்பமடைய வேண்டியுள்ளது. மக்களது இடப்பெயர்வு. இதனால் பொருள்களையும் பல இடங்களில் குடும்ப உறவினர்களையும் இழந்த அவர்கள், மாற்றிடங்களில் துன்பப்படுகின்றனர். உழைப்புச் சக்தியும் விரயமாக்கப்படுகிறது. இதனால் நாட்டின் பொருளாதார பாங்கு பின்னடிக்கின்றது. ஏராளமான பயிர்ச்செய்கை நிலங்கள் வீணே கிடக்கின்றன. ஆனால் இடம்பெயர்ந்தோர் ஒரு பரப்புக் காணி இன்றித் தவிப்பர். வேறுபட்ட வாழ்க்கை முறையால் அவர்கள் நிபுணத்துவம் அடைய முடியாது. பிரதான போக்குவரத்துப் பாதைகள் தடைப்படுவதனால் பெரும் செலவுகளும் ஏற்படுகின்றன. இது எமது தமிழீழத்திற்கு அத்திவாரம் இடக்கூடியதல்ல. நாம் அனுமதிக்கக்கூடியதும் அல்ல.

கலாசாரரீதியாகவும் பிரச்சினையுண்டு. இங்கு இராணுவம் பெரிய கோயிலுக்குள்ளும் தரித்திருக்கின்றது. (சண்டையில் மிக முக்கியமான தாக்குவலயம், கோயில் காவலரண்)

"இதுதான் மாங்குளம் மகா வித்தியாலயம்"

ஜீவன் அருகே சுட்டிக்காட்டினார். பெரிய பாடசாலை. பெருமளவில் சேதமடையாமல் இருந்தது. **மைதானத்தில் புல் இடுப்பளவிற்கு மண்டி நின்றது. இப்படியே இருந்து ஒரு நாளைக்குக் காடாகும்.**

**ஓ! இனிய தம்பி தங்கைகளே! எங்கே சென்றீர்கள், உங்கள் கல்வித் தாயை விட்டு? எங்களுக்குத் தெரியும், உங்களையும் உங்களது பிஞ்சுப் பாதங்கள் இந்த மைதானத்திலோ வகுப்பறைகளிலோ பதிவதையும் அந்த எதிரி விரும்பமாட்டான்! நீங்கள் புத்தகச் சுமையுடன் வருவது அவனிற்குக் கசக்கும். தமிழரின் முதுகெலும்பான கல்வியை அழிப்பது அவனது பணியன்றோ!**

எனக்குத் தெரியும், நீங்கள் இப்போ எங்காவது ஒரு குடிலுக்குள் அல்லது இடிந்த அரச கட்டடத்துள் மழைக்கு ஒதுங்கியிருப்பீர்கள்! நிச்சயம் மழை உங்களைக் குளிப்பாட்டும். ஏனெனில் குடிசையை எனக்குத் தெரியும் அது வேயப்பட்டது ஓலையால், இப்போ எஞ்சியிருப்பது ஈர்க்குகள் தானென்று. மதியம் சாப்பிட்டீர்கள். வயிறு புகைந்து புகைந்து பெருந்தீயாய் எரியும். அவை சேர்ந்து ஊழித் தீயாகும், இன்னும் சில நாளில்! மீண்டும் இங்கே வாருங்கள். உங்கள் பிஞ்சுப் பாதங்களை சாமியார் குளத்திலோ, கற்குளத்திலோ கழுவுங்கள். நான் உங்களைத் தேடி அலையாய் வருவேன். இந்தப் பள்ளியில் பதியுங்கள் பாதங்களை! உங்கள் பாதங்களை நான் பூமியில் இருந்து வாங்கிக் கொள்வேன். இனிமையாய், படிக்கையில் தென்றலாகி வந்து தழுவுவேன் உங்களை!

(தொடரும்...)

# தென்னாபிரிக்கா: "இன ஒதுக்கல்" முறைக்கு இறுதியாக சமாதி எழுப்பப்பட்டது

கடந்த 300 வருடங்களுக்கு மேலாக தென்னாபிரிக்காவில் நிலவி வந்த சிறுபான்மையினரான வெள்ளையினத்தவரின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த இரண்டு வருட கால பேச்சுவார்த்தைகளின் இறுதியில் தென்னாபிரிக்க ஜனாதிபதி F. W. கிளார்க்கும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (A. N. C.) தலைவரான நெல்சன் மண்டேலாவும் மற்றும் 17 அரசியல் தலைவர்களும், நவம்பர் மாதம் 18 ஆம் திகதி புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கியதுடன், தென்னாபிரிக்காவின் வதைக்கப்பட்ட வரலாற்றில் முதற்தடவையாக பெரும்பான்மை கறுப்பினத்தவருக்கு தமது நாட்டை ஆளுவதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

உலக வரலாற்றைப் பொறுத்தமட்டிலும் 1993 ஆம் ஆண்டு முக்கியமானதொரு ஆண்டாகத் திகழப் போகிறது. நீண்ட காலமாக உலக சமாதானத்தில் முட்களாக உறுத்தி வந்த மத்திய கிழக்கு நெருக்கடிக்கும், தென்னாபிரிக்கப் பிரச்சினைக்கும் இவ்வாண்டில் முடிவு காணப்பட்டுள்ளது.

'இன ஒதுக்கல்' முறைக்கெதிராகப் போராடியதற்காக 27 1/2 வருடங்கள் சிறையில் வாடிய நெல்சன் மண்டெலா, நிறவெறிக்கு சாவுமணி அடிக்கப்பட்டதை "ஒரு யுகம் முடிவுக்கு வந்துள்ளது" என வர்ணித்துள்ளார்.

"வெறுப்பு, பிரிவினை என்பனவற்றை விதைப்பதற்காக நிறம், வகுப்பு, இனம் என்பன திரிவுபடுத்தப்பட்ட முரண்பாடான ஒரு சமூகத்தில் இருந்து நாம் எழுந்துள்ளோம்". "இந்தச் சமூகம் வன்முறையிலேயே கட்டியெழுப்பப்பட்டிருந்தமையால் எமது தேசம் ஒரு போதும் சமாதானத்தில் வாழ முடியாது என உருவாக்கப்பட்டிருந்த மாயையில் இருந்தும் நாம் எழுந்துள்ளோம்" என மண்டேலா மேலும் கூறியுள்ளார். "பல தலைமுறைகளாக வாக்குரிமை இழந்திருந்த தென்னாபிரிக்கர்களின் வடிகட்டப்பட்ட கனவுகள்" என ஜனாதிபதி கிளார்க் தனது நாட்டின் முதலாவது ஜனநாயக ரீதியான அரசியலமைப்பைப் பற்றி விபரித்துள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், "இவ் அரசியல் அமைப்புத் திட்டம் எம்மவரில் எவரையேனும் முற்றாகத் திருப்திப்படுத்தாவிட்டாலும் எம்மை மிகவும் அழுத்தி வந்த பல கவலை தரும் பிரச்சனைகளையும், நம்பிக்கையையும் சந்திப்பதன் மூலம் திருப்தியை அளிக்கிறது" எனத் தெரிவித்துள்ளார்.

இந்த வரலாற்று ஒப்பந்தத்தின்படி எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 27 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் முதற்தடவையாக பல் இனத் தேர்தல் நடைபெற உள்ளது.

நிறவெறிக்கெதிராகத் தனது வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்து போராடி வருகின்ற நெல்சன் மண்டேலாவே அடுத்த ஜனாதிபதியாகப் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப் புதிய அரசியலமைப்பின் கீழ் ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கிய சமஸ்டி அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படும். இம் மாகாண அரசாங்கங்கள் தமது சுய அரசியலமைப்புத் திட்டங்களை உருவாக்க அனுமதிக்கப்பட்டாலும், வரி விதிப்பு போன்ற முக்கிய துறைகள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். மாகாண அரசாங்கங்கள் சுகாதாரம், கல்வி, காவற்துறை மற்றும் உள்ளூர் அலுவல்கள் போன்றவற்றின் மீது அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

புதிய அரசிலமைப்பின் முக்கிய அம்சங்களில் ஒன்று இவ்வளவு காலமும் இருந்து வந்த 'தாயக பூமிகளை' இல்லாதாக்குவதாகும். தென்னாபிரிக்காவின் கறுப்பினத்தவருக்கு வாக்குரிமை மற்றும் ஏனைய உரிமைகளை மறுக்கும் வண்ணம் 'இன ஒதுக்கல்' முறையின் கீழ் உருவாக்கப்பட்டவையே இத்தாயக பூமிகளாகும்.

இவ் ஒப்பந்தம் கறுப்பினத்தவருக்கு அரசாங்கம் அமைக்கும் அதிகாரத்தை அளிக்கின்ற அதே சமயம், வெள்ளைச் சிறுபான்மை இனத்தவருக்கும் சில உத்தரவாதங்களை அளிக்கிறது.

A. N. C. அதிகார பீடத்தில் ஏறினாலும், தென்னாபிரிக்காவின் வெள்ளை இனத்தைச் சேர்ந்த வர்த்தக மற்றும் நிர்வாக சமூகத்தவரின் ஆதரவு நிச்சயம் தேவைப்படும் என்பது வெள்ளிடைமலை.

எனவே புதிய ஒப்பந்தத்தில் நிலச் சொந்தக்காரர்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் சொந்தமான சொத்துக்களை அரசு சன்மானம் வழங்காமல் சுவீகாரம் செய்யாது என உறுதிமொழி கொடுக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் உள்ள அனேகமான சொத்துக்கள் வெள்ளை இனத்தவருக்கே உரியது என்பது பலரும் அறிந்ததே.

நாட்டின் இராணுவம், காவல் துறை மற்றும் நிர்வாகத்துறை என்பன அண்மைய எதிர்காலத்தில் தொடர்ந்தும் வெள்ளை இனத்தவரையே பெரும்பான்மையினராகக் கொண்டிருக்கும் என A. N. C. சம்பிரதாயமற்ற முறையில் உத்தரவாதங்களையும் அளித்துள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மண்டேலா வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை தென்னாபிரிக்காவின் நிரந்தர அரசிலமைப்புத் திட்டத்தை தயாரிக்கும் போது, சிறுபான்மை கட்சியினரைச் சேர்ந்தோரையும் 1999 வரை தனது அமைச்சரவையில் அங்கத்துவம் வகிக்க அவர் ஒத்துக்கொண்டுள்ளார்.

இவ் ஒப்பந்தத்தின்படி, தேசிய வாக்களிப்பில் 5 வீதமான வாக்குகளைப் பெற்ற எந்தவொரு கட்சியும் அமைச்சரவையில் அங்கம் வகிக்க உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரதம நிர்வாகி எனும் ரீதியில் மண்டேலா, தனது இரு உப ஜனாதிபதிகளைக் கலந்தாலோசித்து கருமமாற்ற வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய கடலோடிகள் இந்தியாவில் வாசனைத் திரவியங்களைத் தேடிப் புறப்பட்டபோது ஆபிரிக்காவின் தென் முனையானது அவர்களுக்கு 'நம்பிக்கை முனை'யாகத் தென்பட்டது. இந் 'நன்னம்பிக்கை முனையைக்' கொண்டிருந்த தென்னாபிரிக்க நாட்டு சுதேசிகள் பல நூற்றாண்டு காலமாக நம்பிக்கையிழந்த நிலையில் வாழவேண்டி வந்தது துரதிஸ்டமானதே.

டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியானது 1652 இல் தனது முதல் குடியேற்றவாசிகளை இந் 'நன்னம்பிக்கை முனை'யில் குடியிருத்தியிருந்தாலும் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் சுமார் 15,-000 பேரே இங்கு நிலைத்திருந்தனர். 'ஆப்பிரிக்கானர்ஸ்' எனப்படும் ஒரு டச்சு டயலாக்கைப் பேசிய இவர்கள் போயர்ஸ் அல்லது ஆப்பிகானர்ஸ் என அழைக்கப்பட்டனர்.

நெப்போலியப் போரின் பின் (18-74) பிரித்தானியா தனது 5,000 குடியேற்ற வாசிகளைக் கொணர்ந்து, நாளடைவில் அரசாங்க நிர்வாகத்தை ஆங்கிலேய மயமாக்கியதாலும் அடிமைகளுக்கு சுதந்திரம் வழங்கியதாலும் சுமார் 12,000 ஆப்பிரிக்கானர்ஸ் வடக்கிலும், கிழக்கிலும் இருந்த சுதேச கறுப்பின மக்களின் பரந்த நிலப்பரப்பினுள் ஊடுருவி இரு குடியரசுகளை நிறுவினர்.

பிரித்தானியர்களுக்கும், ஆபிரிக்கானர்களுக்கும் இடையில் ஏற்பட்ட போரின் இறுதியில் 1910 இல் முற்கூறப்பட்ட இரு குடியரசுகளையும் பழைய நன்னம்பிக்கை முனை, நேட்டால் காலணி என நான்கு மாகாணங்களை உள்ளடக்கி 'ஐக்கிய தென்னாபிரிக்கா' உருவானது.

**சாள்ஸ் தேவசகாயம்**

1945 இல் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு அங்கத்துவ நாடாக சேர்ந்து கொண்டாலும் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தில் கையொப்பமிட தென்னாபிரிக்கா மறுத்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். 'தேசியவாதிகள்' அதிகாரத்தில் தமது நிலையைப் பலப்படுத்தவே உள்ளூர் அரசியலில் 'இன ஒதுக்கல்' முறை முதன்மை வகிப்பது தவிர்க்க முடியாததாகியது.

பிரித்தானியாவிற்கெதிரான விரோதத்தின் இறுதி விளைவாக 'ஆபிரிக்கானர்ஸ்' 1961 இல் தென்னாபிரிக்கக் குடியரசைப் பிரகடனப்படுத்தியதுடன் பொதுநலவாய தொடர்புகளையும் துண்டித்தனர்.

பல உலக நாடுகளின் கண்டனத்துக்கும், பொருளாதாரத் தடைகளுக்கும் மத்தியில் தென்னாபிரிக்காவின் சிறுபான்மை இன வெள்ளையர், தொடர்ந்து பெரும்பான்மை கறுப்பு இனத்தவரை ஒதுக்கி வந்தனர். இதன் ஒரு அங்கமாகவே 4 சுதந்திர அரசுகளும், 6 தாயக பூமிகளும் தென்னாபிரிக்க எல்லைகளுக்குள் உருவாக்கப்பட்டன.

1989 இல் பதவிக்கு வந்த F. W. கிளார்க் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதில் முன்னின்று உழைத்தாராயினும், "பெரும்பான்மையினரின் 'ஆதிக்கத்தில்' இருந்து வெள்ளையரைப் பாதுகாப்பேன் என்றும் உறுதிமொழி அளித்திருந்தார். உண்மையில் வெள்ளையருக்கு ஒரு நிரந்தர வீட்டோ அதிகாரத்தை பெற்றுத் தருவதே அவரின் நோக்கமாக இருந்தது.



தென் ஆபிரிக்காவின் சிறுபான்மை வெள்ளை இனத்தவரின் கொடூர ஆட்சியை, பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு கொண்டு வந்துள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவும், தென் ஆபிரிக்க ஜனாதிபதி கிளார்க்கும்

மேலும் சிறையில் இருந்து மண்டேலாவை விடுவித்தால் அவருக்கிருக்கும் செல்வாக்கு சரிந்து விழும் எனவும் அவர் தப்புக் கணக்குப் போட்டிருந்தார். மண்டேலாவின் மனைவி வினி மண்டேலா கொலைக் குற்றம் சாட்டப்பட்டு குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டாலும் அவரது செல்வாக்கு தொடர்ந்து அதிகரித்தே சென்றது. இறுதியில் "அதிகாரத்தைப் பகிர்வது" எனும் கொள்கையுடனிருந்த கிளார்க் வேறு வழியின்றி 'பெரும்பான்மை ஆட்சிக்கு' ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

இதேவேளை தென்னாபிரிக்காவின் புதிய அரசியலமைப்புத் திட்டம் பல 'ஆபிரிக்கானர்ஸ்' தேசியவாதிகளுக்கு அதிருப்தியையும், ஆத்திரத்தையும் அளித்துள்ளது. வெள்ளை இனத்தவருக்கென தனிப்பட்ட 'தாயக பூமிகளை' உருவாக்கலாம் என இவர்கள் எண்ணியிருந்தனர். இன்றிலிருந்து போர்கள் ஆரம்பமாகின்றன என ஒரு தலைவரும், உலகின் அடக்கப்படும் மக்களின் பட்டியலில் 'ஆப்பிரிக்கானர்ஸ்' பெயரையும் இனிமேல் சேர்த்துக்கொள்ளலாம் என்று இன்னுமொருவரும் கருத்துக் கூறியுள்ளனர்.

தனியே வெள்ளை இனத்தவர் மட்டுமல்ல குறிப்பிட்ட கறுப்பினத்தவர் மத்தியிலும் அதிருப்தி நிலவுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக 'சூலு' குழுத் தலைவரான மங்கசூது புத்தலேசியும் இவ் ஒப்பந்தத்துக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். இவரது ஆதரவாளர்கள் மண்டேலாவின் ஆதரவாளர்களுடன் ஆயுத ரீதியான பல மோதல்களில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்கானர்களும், சூலு குழுவினரும் ஒரே அணியில் சேர்ந்து இவ் ஒப்பந்தத்தை எதிர்ப்பதற்கான போராட்டத்தில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் வளர்ந்து வருகின்றன. எதிர்வரும் பொதுத்தேர்தலில் புத்தலேசியும் போட்டியிட்டால் தேசிய ரீதியாக 10 வீதமானோரின் வாக்குகளையும், நேட்டால் மாகாணத்தில் பெரும்பான்மையோரின் ஆதரவையும் இவர் பெறுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தமது அதிகாரங்கள் கைநழுவுகின்றனவே எனும் ஆதங்கத்தில் இருக்கும் சில 'தாயக பூமி' கறுப்பினத் தலைவர்களும் கூட இவ் ஒப்பந்தத்துக்கெதிராக போராட உள்ளதாக அறிவித்துள்ளனர்.

எது எப்படி இருப்பினும் 'இன ஒதுக்கல்' முறை அழிக்கப்பட்டு பெரும்பான்மை ஆட்சிக்கு வழிகோலப்பட்டது, ஜனநாயகத்துக்கு மட்டுமல்ல உலகம் பூராவும் இருக்கும் மனித உரிமைகள் இயக்கங்களுக்கும் கிடைத்த பெரு வெற்றியாகும். எதிர்வரும் வருடத்தில் வன்முறை தலைதூக்கினால் புதிய அரசுக்கு தடங்கல்கள் வரலாம் என கிளார்க்கும், மண்டேலாவும் உணர்ந்துள்ளனர். இவர்கள் இருவரும் தாம் இணங்கிய ஒப்பந்தத்தை நன்னம்பிக்கையுடன் சரியான பாதையில் எடுத்துச் செல்வார்களேயாயின் அதுவே புதிய அரசின் வெற்றிக்குப் பெரிய படிக்கல்லாக விளங்கும். ■

## பூநகரி தோல்...

அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் எச்சரிக்கைகள் விடுத்தவண்ணமே இருந்தது.

இவற்றோடு பிரதான எதிர்க்கட்சிகள்கூட யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்றோ, இராணுவத் தீர்வு என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டையோ குறை கூறவில்லை. போரில் விரைவாக வெற்றி பெற வேண்டும் என வற்புறுத்துவதிலேயே அவையும் குறியாக இருந்தன. இதற்கு எடுத்துக்காட்டாக பூநகரி தோல்வியைப் பற்றிப் பேசிய எந்த எதிர்க் கட்சி உறுப்பினரும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என்பது குறித்துப் பேசியதாக இல்லை. இராணுவத்தினரின் வசதிக் குறைவுகள் பற்றியும், இராணுவ நிதி ஒதுக்கீட்டுப் பற்றாக்குறை பற்றியுமே பேசியுள்ளனர்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்பட்டு, அதில் தோல்விகளைச் சந்திக்கும் போது அதற்குத் தனியாக ஒருவரையோ, அன்றி ஒரு பிரிவையோ குறை காணமுடியாது. ஏனெனில், சிறீலங்கா அரசின் கோட்பாடாகவே இராணுவத் தீர்வு மாறிவிட்ட நிலையில், தோல்விக்கான பொறுப்பைத் தனியாக ஒருவரோ, ஒரு பிரிவோ ஏற்கவோ அன்றிச் சுமக்கவோ முடியாது. போரைத் தொடுத்தவர்கள், போரை ஊக்குவித்தவர்கள், போரை வழி நடத்தியவர்கள் எனச் சகலருமே தோல்விக்கான பொறுப்பை ஏற்க வேண்டும். ■

நன்றி:ஈழநாதம்
(26-11-1993)

# களம் செல்லும் வேளையில் தாய்க்கு மகன் எழுதிய இறுதி மடல்

தமிழீழம்
1993-11-02

**அன்பின் அம்மா,**

என்னை பத்து மாதம் சுமந்து பெத்து வளர்த்த உங்களுக்கு, உங்கட மகன் கடைசியாய் எழுதிற கடிதம் இது. அனேகமாக இந்தக் கடிதத்தை நீங்கள் படிக்கும்போது நான் இறந்து சில நாட்கள் கழிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

அம்மா!
வாழவேண்டிய வயதில் நான் இப்படி இறந்து போனது உங்களுக்கு மட்டுமல்ல எல்லாருக்கும் கவலையாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் இந்த நாட்டு நிலைமையைப் புரிந்து கொண்டு அமைதியாக இருப்பதே நீங்கள் எனக்குச் செய்யும் அஞ்சலி. என்னைப் போல எத்தனையோ பேர் இந்த நாட்டுக்காக வீரச்சாவடைந்தது உங்களுக்குத் தெரியும். அந்த வழியில் நானும் செல்கிறேன்.......

அம்மா!
உங்களுக்கு முதல் மூன்று பிள்ளைகளும் பெண்பிள்ளைகளாய் பிறந்தபோது ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்று கதிர்காமக் கந்தனுக்கு நேத்தி வைத்ததாயும் அதன் பிறகுதான் நான் பிறந்ததாயும் நீங்கள் சொல்லிக் கேட்டேன். கடவுளிட்டை நேத்தி வைத்து பிறந்த பிள்ளை வாழும் வயதில இப்படிச் சாவது உங்களுக்கு எப்படிக் கவலையைக் கொடுக்கும் என்று எனக்குத் தெரிகிறது.

வாழ்க்கையை உணரமுடியாத இளம் வயதில் நான் செய்த குழப்படிகளையும் குறும்புகளையும் தாங்கிக் கொண்டு என்னை ஒரு மனிதனாக உருவாக்க நீங்கள் பட்ட பாட்டையும் நான் அறிவேன்.

நான் படிக்க வேண்டும் பட்டம் பெற வேண்டும், நல்ல உத்தியோகம் பார்க்க வேண்டும், ஊர் உலகம் போற்ற நான் வாழ வேண்டும் என்று நீங்கள் கண்ட கனவும் எனக்குத் தெரியும்.

இத்தனையையும் தெரிந்து கொண்டும் நான் இயக்கத்தில் சேர்ந்து போராடி வீரச்சாவடைந்து விட்டனே என்று நீங்கள் நினைப்பதுவும் எனக்குக் கேட்கிறது.

தாயே!
என் தாய் நீங்களும், உங்கள் தாயும், தாயின் தாயும்,...... இப்படியே எங்கள் பரம்பரை வாழ்ந்த மண்ணம்மா இந்த மண். நாங்கள் பிறந்ததும், நாலு எழுத்துப் படித்ததும், வயல் விதைத்ததும் அருவி வெட்டினதும், கூடி மகிழ்ந்ததும், வீடு கட்டி வாழ்ந்ததும் இந்த மண்ணில்தான். எங்கட வீட்டு முற்றத்தில கிடக்கிற ஒரு பிடி மண்ணை எடுத்து மணந்து பாருங்கோ என்ர பூட்டன், கொப்பாட்டன்ர வியர்வை இப்பவும் மணந்து கொண்டுதான் இருக்குது. உங்கட ஊரில் பெய்யிற மழைத்தண்ணீரை அள்ளிப் பாருங்கள் எங்கட பரம்பரையின்ர முகம் எல்லாம் பளிச்செண்டு தெரியும்.

அம்மா!
இந்த மண் எங்கட மண். இது எங்கட நாடு. இந்த நாட்டை இன்னொருத்தன் வந்து அழிக்க நாங்கள் விடக்கூடாது. பக்கத்து வீட்டு ஆடு எங்கட வீட்டில வந்து பூக்கண்டு கடித்தாலே நாங்கள் சண்டைக்குப் போகிறோம். ஆனால் எங்கட சொந்த நாட்டை சிங்களவன் பிடிக்க வாறான். இந்த நேரத்தில் நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கேலாது.

நாங்கள் கும்பிடுகிற தட்டான்குளப் பிள்ளையார் கோயிலில பிள்ளையார் சிலைதான் இருக்க வேண்டுமே தவிர புத்தர் சிலை இருக்கக் கூடாது. நான் அ, ஆ படித்த வீரசிங்கம் பள்ளிக்கூடத்தில சிங்களம் முதல் மொழியாகப் படிப்பிக்க நாங்கள் விடக்கூடாது. நாங்கள் சந்தோசமாக வாழிற எங்கட மண்ணை இன்னொருத்தன் ஆள விடக்கூடாது.

நான் வீர வசனம் கதைக்கிறேன் என்று நினைக்க வேண்டாம். இந்த மண்ணில என்ன நடக்க வேண்டுமோ அதையே சொல்லுகிறேன்.

அம்மா!
"புறநானூறு" எண்ட புத்தகத்தில நான் படிச்ச ஒரு கதை எனக்கு ஞாபகம் வருகுது. ஒரு தாய் தன் மகனை வேல் கொடுத்து போருக்கு அனுப்புகிறாள். போரில் அந்தப் பாலகன் முதுகில் வேல் பட்டு இறந்து கிடக்கிறான் என்று யாரோ அந்தத் தாய்க்குச் சொல்லுகிறார்கள். உடனே அந்த வீரத்தாய் மகன் முதுகில் வேல் பட்டு இறந்து கிடந்தால் அவனுக்குப் பாலூட்டிய முலையை அறுத்தெறிவேன் என்று அழுதாள். இதை நான் ஏன் ஏழுதுகிறேன் என்றால், காலத்தின் தேவையால் நான் ஆயுதம் தூக்கினேன். எதிரி எங்கட மண்ணில இருக்கக்கூடாது என்பதற்காக என்னைப் பணயம் வைத்து போராடினேன். அந்த வழியில் இன்று இந்த மண்ணுக்காக மடிந்துவிட்டேன்.

தாயே!
ஒன்று மட்டும் உறுதி! நீங்களும் ஒரு வீரத்தாய்தான். நானும் நெஞ்சிலே குண்டு பட்டுத்தான் சாவேனே தவிர எதிரியைக் கண்டு கலங்க மாட்டேன்.

அம்மா!
கிளிநொச்சியில இருக்கிற எங்கட வயலுக்கு எங்களால் இண்டைக்கு சுதந்திரமாகப் போகமுடிகிறதா! சிங்களவன் எங்கட பாதையை தடை செய்யப் பாக்கிறான். எங்கட பாதையைத் தடை செய்யிற சிங்களவனுக்கு ஒரு பாடம் புகட்ட, எங்கட தலைவர் ஒரு மிகப் பெரும் தாக்குதலுக்கு தயார் செய்தார். அந்தத் தாக்குதலில் நானும் பங்குகொண்டு எங்களைத் தடுத்து நிக்கிற எதிரியை அழிக்க போராடி மடிகின்றேன். நான் மடிந்தாலும், எங்கட் தலைவரும் என்சக போராளிகளும் நிச்சயமாக இந்தப் பாதையை மட்டுமல்ல தமிழ் ஈழத்தையே விடுவிப்பினம் என்கிறதில சிறிதளவேனும் சந்தேகம் வேண்டாம்.

அம்மா!
கடைசி நேரத்தில் உங்களையும் சொந்த பந்தங்களையும் ஒருக்காப் பார்க்க வேணும் போல இருக்குது. ஆனால் அது எங்கட போராட்டத்தைப் பொறுத்தவரையில் முடியாத ஒண்டு. ஏனென்றால் எதிரிக்கு மிகப் பெரிய இழப்பையும் அழிவையும் நாங்கள் ஏற்படுத்த வேணுமென்றால் நாங்கள் சில கட்டுப்பாடுகள் மூலம் தியாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது. அதற்காக இதையும் பொறுத்துக் கொள்கிறேன்.

அம்மா!
எனக்காக நீங்கள் பெரும் எடுப்பில அந்தியேட்டி துவசம் எடுக்க வேண்டாம். நான் இறந்த நாளில எங்கட சொந்த பந்தங்களுக்கும் என் சக போராளிகளுக்கும் போசனம் கொடுங்கள். அத்தோட, என்னைப் போல போராடிக்கொண்டிருக்கின்ற போராளிகள் அடிக்கடி எங்கட வீட்டுக்கு வருவார்கள். அவர்கள் எல்லோரையும் என்னைப் போல நினைத்து உபசரியுங்கள்.

அத்தோடு, எங்கட தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் எத்தனையோ ஏழைக் குழந்தைகளைப் பாராமரிக்கின்றார். அதில சுன்னாகத்திலயும் ஒரு சிறுவர் பராமரிப்பு நிலையம் இருக்குது. நான் இறந்த நாளில் ஒவ்வொரு வருடமும் அந்தக் குழந்தைகளுக்கு பலகாரம் செய்து கொண்டுபோய் கொடுங்கள். அவர்களும் என்ர சகோதரங்கள்தான். உங்கள் பிள்ளைகள் தான். இவ்வளவுதான் அம்மா, உங்களுக்கு மட்டும் தான் கடிதம் எழுதுகிறேன். எல்லோரையும் சமாதானப்படுத்தவும். என்னை நினைத்துக் கவலைப்பட வேண்டாம். தொடர்ந்தும் இந்தப் போராட்டத்திற்கு உங்களால் ஆன அதிகூடிய பங்களிப்பைச் செலுத்த வேண்டும். அதுதான் எனக்கு நிம்மதியைத் தரும் அம்மா!

விடைபெறுகிறேன் தாயே, விடை கொடுங்கள்
நன்றி

**வே. கலையரசன்**
அன்பு மகன்

## வடக்கிற்...

றது. அத்துடன் அரசு ஆதரவு தொடர்பு சாதனங்கள் இப்பிரச்சினைக்கு இராணுவம் தீர்வு காணும் என்னும் நம்பிக்கையை சிங்கள மக்கள் வைத்திருப்பதாக செய்திகளை வெளியிட்டு இராணுவத்தினரை உற்சாக மூட்டத் தொடங்கியுள்ளன.

'த சண்டே ஒப்சேவர்' பத்திரிகை "ஜெரிக்கு நல்ல அதிருட்டம் உண்டாகுக" என்ற தலைப்பில், 'அவருடைய வெற்றிகள் மக்களின் வெற்றிகள்' என எழுதி இராணுவ தீர்வுக்கு ஆசி வழங்கியுள்ளது. 'ஐலண்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகை, "தங்கள் பலத்தை சிறீலங்கா கணித்து மேலதிக பலத்திற்கு மேலதிக உதவிக்கு இந்தியாவின் துணையை நாடவேண்டும் எனக் கருத்து வெளியிட்டுள்ளது. இலங்கை -இந்திய ஒப்பந்தப்படி விடுதலைப் புலிகளை வெல்ல தேவைப்படும் பட்சத்தில் இந்தியா உதவி செய்தே ஆகவேண்டும்" எனவும் அப்பத்திரிகை எழுதியுள்ளது.

'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகை, "இராணுவம் முடிவற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நம்பிக்கையையும் பெருமையை'யும் ஏற்படுத்த வேண்டும்" எனக் கூறியுள்ளது.

### பிரச்சாரத்துக்கு தனிப்பிரிவு

இதற்கிடையில், சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள் தங்கள் யுத்த தந்திரங்களை மாற்றியமைக்கக் கூடிய வகையில், அமைப்பு மாற்றங்களை செய்து வருகின்றது. விடுதலைப்புலிகளின் கடலாதிக்கத்தை முறியடிக்கக் கூடிய வகையில் சிறீலங்காக் கடற்படைக்கு அதிசக்தி படைத்த நவீன ஆயுதங்களையும், படகுகளையும் வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் இராணுவக் கவசப் படையினை அபிவிருத்தி செய்வதினாலேயே, விடுதலைப் புலிகளின் டாங்கி எதிர்ப்பு அணியுடன் மோதலாம் எனவும் சிறீலங்கா இராணுவத்தினர் கருதுகின்றனர்.

சிறீலங்கா தனது கடற்படையை மேலும் நவீனப்படுத்தி பலப்படுத்துவதை நியாயப்படுத்தும் வகையில் விடுதலைப்புலிகள் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை அமெரிக்காவில் இருந்து வந்து நிற்கும் தமிழ்ப் பொறியியலாளரின் உதவியுடன் அமைத்து வருவதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

புதிய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா தனது முதல் வேலையாக இராணுவ ஆணையாளர் செயலகத்தின் கீழ் தனியான தொடர்பு சாதனப் பிரிவொன்றைத் தொடங்கி, அதன் பேச்சாளராக கெரில்லாப் படை எதிர்ப்பில் தேர்ச்சிபெற்ற கெமுனு குலதுரயாவையும் நளின் அங்கமனவை இராணுவச் செயலாளராகவும் நியமித்துள்ளமை தொடர்பு சாதனங்களில் இராணுவத்திற்கு ஆதரவான பிரச்சாரங்கள், வேகப்படுத்தவும் -நியாயப்படுத்தவும் என கொழும்பு அவதானிகள் கருதுகின்றனர்.

இவ்வாறாக பாரிய யுத்தமொன்றை நடாத்துவதற்கான இராணுவ, சமூக, அரசியல் சூழ்நிலைகளை சிறீலங்கா அரசாங்கம் திட்டமிட்டு உருவாக்கி வருகின்றது.

### விடுதலைப் புலிகள் தயார்

எத்தகைய இராணுவ ஆக்கிரமிப்பையும் எதிர்கொள்ளும் வகையில் தமிழீழ மக்களையும், தமிழீழ மக்களின் தேசியப்பாதுகாப்புக்கு பொறுப்பான தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஆயத்தம் செய்யும் வேலைகள் தமிழீழம் எங்கும் சுறு சுறுப்பாக நடைபெற்று வருகின்றன. உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள், தமிழீழ மக்கள் மிக இறுக்கமான ஒரு காலகட்டத்தை எதிர்நோக்கும் இவ்வாண்டில் தம்மாலான சகல உதவிகளையும் அளித்து தமிழீழ மக்களின் தர்ம யுத்தம் வெற்றி பெற உதவுவார்கள் என தமிழீழ மக்கள் நேச நெஞ்சுடன் எதிர்பார்க்கின்றனர். ■

## மக்களுக்கெதி...

விடுதலைப் புலிகள் கேணல் கிட்டுவுக்கு ஞாபகார்த்தக் கூட்டம் நடத்தியதாகவும், தலைவர் பிரபாகரனும் அதில் கலந்து கொள்ள இருந்தமையால் தாம் குண்டு வீசித் தாக்கியதாகவும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை கொழும்பில் வெளியிட்டுள்ளது..

### செஞ்சிலுவைச் சங்க வாகன நகர்வுகள் நிறுத்தம்

செஞ்சிலுவைச் சங்கம் உணவுப் பொருட்களை கொண்டுவரும் வாகனங்களுக்கு தலைமை தாங்கி அழைத்து வரும் பணியினை நிறுத்தியுள்ளது. செஞ்சிலுவைச் சங்கத்தினர் இனி மேல் கடல்வழியாக வரும் உணவுகளுக்கு மட்டுமே தலைமை தாங்கி அழைத்து வரும் பணியினை செய்வர் எனத் தெரிகிறது. சர்வதேச தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களைக் கைது செய்வதும், உதவிகளை உரிய நேரத்தில் கிடைக்காது நிறுத்தியும் அரைகுறை உதவிகளை அளித்தும் சிறீலங்கா அரசு செய்யும் மனித நேயமற்ற செயல்களால் தொண்டர் ஸ்தாபனங்கள் இயங்க முடியா நிலைக்கு ஆளாகி வருகின்றன. பாரிய யுத்தமொன்றை மேற்கொள்ளும் வேளையில் மக்கள் அழிக்கப்படுவதை வெளியுலகு தெரிந்து கொள்ளாது தடுப்பதற்கான ஒரு உத்தியாக சிறீலங்கா அரசாங்கம் இத்தகைய சர்வதேச தொண்டர் நிறுவனங்களை செயற்படாது தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### மருந்தின்றி 15 பேர் மரணம்

இதற்கிடை கடும்மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் "செப்திசேமியா" எனும் வாந்திபேதி நோய் வடக்கில் வேகமாகப் பரவி வருவதாகவும், இதற்கு போதிய மருந்துகள் வைத்தியசாலைகளில் இல்லாததினால் 15 பேர் வரை இருவாரங்களுக்குள் இந்நோய்க்கு பலியாகியுள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

### 'புலிகளின் வானொலியை அனுமதிக்க முடியாது'

புதிய ஒலிபரப்பு ஒன்றை ஆரம்பித்து புலிகளின் குரலை அடக்குவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் கட்சன் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

புலிகளின் குரல் வானொலியை நாம் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. அதற்கு இடமளிக்கும் மடத்தனத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புலிகளின் ஆதிக்க எல்லைக்குள் எமது குரல் செல்ல வேண்டும் அதற்கென ஒலிபரப்பு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ■




# மூட்டிய தீயினை அணைக்குமா இந்தியா?

**16-01-1994.**

இது இந்துக் கடலில் இந்திய வல்லாதிக்கம் மூட்டிய தீயில் கேணல் கிட்டு அவர்களும், ஏனைய ஒன்பது போராளிகளும், தமிழீழ விடுதலைக்காய் தம்மை உருக்கிக் கொண்ட ஒரு வருட நிறைவு நாள்.

இந் நினைவு நாளில் இந்தியா தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக எத்தகைய நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கிறது; கொண்டிருக்கும் என்பதனை நினைகூருதலும் பொருத்தமானதே?

தமிழீழ மக்களின் நலன்களும் இந்திய நலன்களும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்ததே எனும் கருத்து பலமாக முன்வைக்கப்பட்டிருந்தும், இந்தியா தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. கேணல் கிட்டு அவர்களும், தமிழீழ மக்களின் நலன்களும் இந்திய நலன்களும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தது என்ற கருத்தை முன்வைத்திருந்தார். இருந்தும் இந்திய வல்லாதிக்க பூதம், தளபதி கிட்டு உட்பட ஒன்பது போராளிகளை விழுங்கியது.

இந்தியா ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறது? உண்மையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்திய நலன்களுக்கு எதிரானதா? தமிழீழம் இந்தியாவுக்கு ஒரு பகை நாடா? இத்தகைய கேள்விகளை இன்றைய நிகழ்வும் நினைவும் பகுதியில் நோக்கலாம் என நினைக்கிறேன்.

இந்திய ஆளும் வர்க்கம், தனது பழைய நிலைப்பாட்டின் அடிப்படையில், அதாவது எண்பதுகளின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக கொண்டிருந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே இன்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை அணுகி வருகின்றது. இலங்கைத் தீவில் சிறீலங்கா, தமிழீழம் என்ற இரு நாடுகள் உருவாகுமானால் அது இந்திய நலன்களுக்கு விரோதமாக அமையும் என்ற தேவையற்ற அச்சம் இந்திய ஆளும் வர்க்கத்திடம் காணப்படுகின்றது. இதற்கு இரு காரணங்களைக் கூற முடியும்.

1. இலங்கைத் தீவு இரண்டு நாடுகளாகப் பிரியுமானால் அதற்கு இந்திய அங்கீகாரம் இருக்குமானால் சிறீலங்கா, இந்தியப் பகை நாடாக இருக்கும் எனும் அச்சம். சிறீலங்கா, இந்திய எதிர்ப்பு நாடாக இருக்கும்போது பாகிஸ்தான் உட்பட்ட இந்திய விரோத நாடுகள் கொழும்புத் துறைமுகம் உட்பட்ட முக்கிய பகுதிகளை இந்திய நலன்களுக்கு எதிராக பயன்படுத்தலாம் என்ற அச்சம் இந்தியாவுக்கு இருந்தது.

2. தமிழீழம் தனிநாடாக உருவாகுமானால், அது தென்னாசியப் பிராந்தியத்தில் குறிப்பாக, இந்தியாவில் பிரிவினையைத் தூண்டும் என்ற அச்சம்.

இவ்விரு காரணங்களும் குறித்த இந்திய அச்சம் குறித்து விரிவாக எழுதுவதனை இப்பத்தியின் அளவு குறித்து தவிர்க்கிறேன். மேலும் இவ்விடயங்கள் முன்னர் பல இடங்களில் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றமையும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

கொழும்புத் தலைமை, இந்திய நலன்களுக்கு மாறாக மேற்குலகின் நலன்களைப் பேணும் தன்மைகளைக் கொண்டிருந்தமையால், அதனைத் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்குப் போராளிகளைப் பயன்படுத்தல்; கொழும்புத் தலைமை தனக்குக் கட்டுப்படும்போது, தான் விரும்பிய ஒரு தீர்வுடன் போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டுவரல் என்பதே தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடாக இருந்தது. இங்கு இந்தியா விரும்பிய தீர்வு என்பது, இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைவிட குறைவான அதிகாரங்களைக் கொண்ட ஒரு அதிகாரப் பரவலாக்கல் அமைப்பாகவே இருந்தது. இந்திய மாநிலங்கள் இலங்கைத் தீவின் தமிழ் அரசுக்குரிய அதிகாரங்களைச் சுட்டிக்காட்டி, அதிக அதிகாரங்களைக் கோராமல் இருக்க வேண்டும் என்பதே இந்தியாவின் இவ்விருப்பத்துக்குகாரணமாய் அமைந்தது. இதுவே இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக வெளிப்பட்டது.

ஆனால், இந்தியாவின் இவ்விருப்பம் நிறைவேறவில்லை. இந்தியா எவ்வளவோ நடவடிக்கைகளை எடுத்தபோதும், அழுத்தங்களைப் போட்டபோதும் அது தனது முயற்சியில் வெற்றியினை அடைய முடியவில்லை. இருந்தும் இந்தியா தனது பழைய நிலைப்பாட்டினை தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவதனால் தமிழீழ விடுதலைப் போரட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்திய நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்படும் வரை, இந்தியாவின் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகள் தொடரவே செய்யும்.

நான் இவ்விடத்தில் எழுப்பும் முக்கியமான விடயம், உண்மையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்திய நலன்களுக்கு எதிரானதா? என்பதே. தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு எதிராக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக விடுதலைப் போராளிகளுக்கு இந்திய ஆளும் வர்க்கத்தின், உளவு நிறுவனத்தின் செயற்பாடுகளை எதிர்க்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதனால், இந்திய ஆளும் வர்க்கத்திற்கும் தமிழீழத்திற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால், உண்மையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்திய நலன்களுக்கு எதிரானதா? எந்த ஒரு போராட்டமும் தனக்கே உரிய அக, புறக் காரணிகளால் முளைத்தெழுகின்றது என்பது உண்மையே. எனினும் ஒரு போராட்டத்தின் தோற்றத்திற்கு முக்கிய காரணமாக அமையக்கூடியவை அகக் காரணிகளே. அகச் சூழ்நிலை காரணமாக முளைத்தெழும் போராட்டம் புறக் காரணிகளின் நிலமைகளுக்கு ஏற்ப வளர்ச்சியினை அடைகின்றது. இந்த வகையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது, சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கொடூரமான ஒடுக்குமுறையே. அதேவேளை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு புறக் காரணிகளும் துணை புரிந்தன.

இந்த வகையில், இந்தியாவில் தனிநாடு கேட்டு நடைபெறும், நடைபெறக்கூடிய போராட்டங்களுக்கு அகக் காரணிகளே முதற் காரணமாக அமையும். பஞ்சாப்பில் காலிஸ்தான் போராட்டத்திற்கும், காஸ்மீர் விடுதலைப் போராட்டத்திற்கும் இது பொருந்தும். எனவே போராட்டம் எழாது தவிர்க்க விரும்பின், போராட்டத்திற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நீக்குதலே பொருத்தமானதாகும். இதைவிடுத்து, போராட்டத்திற்கு சாதமாக உருவாகக் கூடிய புறச்சூழ்நிலையினை இல்லாதொழித்தலுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்தல் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுமானால், அது இந்தியாவில் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்ற ரீதியில், எமது போராட்டத்திற்கு எதிராகச் செயற்படுவதனை இந்தியா கைவிட வேண்டும். இந்திய ஆளும் வர்க்கத்தின் இத் தவறான போக்கு இந்திய மக்களுக்கு நல்ல நண்பர்களாக விளங்கக்கூடிய தமிழீழ மக்களை இந்திய மக்களிடம் இருந்து பிரிக்க வழிகோலுகின்றது. இது தமிழீழ மக்களுக்கு மட்டுமல்ல, இந்திய மக்களுக்கும் எதிரான போக்கே.

தமிழீழம், இப்போது தென்னாசியப் பிராந்தியத்தில் ஒரு பலம் வாய்ந்த தேசமாக இருக்கின்றது. இத் தேசம் தனக்கென்று ஒரு அரசினை இன்னும் அமைத்துக் கொள்ளாவிடினும் கூட, அரசாக அமைவதற்குரிய தகைமைகளை வளர்த்து வருகின்றது. தென்னாசியாவின் வலுச் சமநிலையில் (Balance of Power) ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தக் கூடிய ஒரு சக்தியாக தமிழீழம் வளர்ந்துள்ளது. அதேவேளை, தென்னாசியப் பிராந்தியத்தில் இந்திய மக்களுக்கு உற்ற நண்பனாக இருக்கக் கூடியது தமிழீழத் தேசமே. இதனை இந்திய ஆளும் வர்க்கம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறீலங்கா, தமிழீழம் எனும் இரண்டு தேசங்களையும் தனது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முயன்ற இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை தோல்வியினைத் தழுவி உள்ளது. எனவே சிறிய தேசங்களைப் பொம்மைகளாக வைத்திருக்கும் தனது நோக்கத்தில் இருந்து இந்தியா தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். மாறாக உண்மையான நட்பினை வைத்திருக்கக் கூடிய தேசங்களை அரவணைக்க இந்தியா பழக வேண்டும்.

தமிழீழம், இந்திய மக்களின் நலன்களுக்கு விரோதமாக செயற்படும் தேசமல்ல. இந்திய ஆளும் வர்க்கம் இந்திய நலன்கள் எனக் கருதுவதும், இந்திய மக்களின் நலன்களும் உண்மையில் ஒன்றல்ல. தமிழீழத்தினைப் பொறுத்தவரை அது இந்தியாவின் பாதுகாப்புக்கோ இந்தியாவின் பெருமைக்கோ பங்கம் விளைவிக்கும் நோக்கத்தினைக் கொண்ட தேசமல்ல. தமிழீழ மக்களின் நலன்களுக்கு எதிராக இந்திய ஆளும் வர்க்கம் செயற்படும் போதுதான், அதனை எதிர்க்க வேண்டிய அவசியம் தமிழீழத்திற்கு ஏற்படுகிறது. தமிழீழ விடுதலையும் இந்தியாவின் நலன்களுக்கு எதிராக அமையாது.

இதனால், தமிழீழத்திற்கு எதிரான செயற்பாடுகளை இந்திய ஆளும் வர்க்கம் நிறுத்த வேண்டும். இதனை இந்திய ஆளும் வர்க்கம் நிறுத்தும் பட்சத்தில் இந்திய -தமிழீழ முறுகல் நிலையினைத் தவிர்த்துக் கொள்ளலாம். இவ்விரு தேசங்களும் நட்பு நாடுகளாக தங்கள் பொதுநலன்களை அடைந்து கொள்வதற்கு இணைந்து செயற்படலாம்.

ஆனால், இந்தியாவின் தற்போதைய போக்கு தமிழீழத்திற்கு எதிரானதாகவே இருக்கிறது. இது இந்திய மக்களின் நலன்களுக்கு எதிரானது; இதனால் இந்திய தேசத்துக்கும் எதிரானது. எனவே இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். தமிழீழம் இந்திய ஆளும் வர்க்கத்தினை எதிர்ப்பது இந்திய விரோதப் போக்கினால் அல்ல. மாறாக இந்திய ஆளும் வர்க்கத்தின் தமிழீழ விரோதப் போக்கினாலேயே. இந்தியா தனது தமிழீழ விரோதப் போக்கினைத் தொடருமானால், அது தனது முகத்திலேயே கரி பூசிக் கொள்ள வேண்டிவரும். மேலும் அவமானப்பட்டுக் குறுக வேண்டிவரும். இதனை இந்திய ஆளும் வர்க்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆனால் இந்திய ஆளும் வர்க்கம் இதனை உணருமா? ■

## மாறா ரணம்

முன்னரைப் போல் -
அள்ளி வந்து நுரைநுரையாய்
அடிசேர்க்கும் அலையையும்,
ஆதவன் சாயும் நேரம்
தங்கப் பாளமாய்
தகதகக்கும் கடலையும்,
இடையிடையே
காற்று காவிவரும்
ஏலேலோ பாட்டையும்
அனுபவிக்க முடியவில்லை!
முன்னரைப் போல்.....
அனுபவிக்க முடியவில்லை!

ரணம் - இதயத்தில்
மாறாத ரணம்!
கிட்டண்ணாவோடு எம்
காவலர் பதின்மரை
இந்துக் கடல் விழுங்கி
ஏப்பம் விட்டு
மூ நான்கு திங்கள்
முழுதாய்ப் போனது.
இன்றுங்கூட.......
அலை வந்து கால்தொட்டு
கடல் மீளும் போது,
உதிரப் பசையாய் பிசுபிசுப்பு.
உள்ளங் காலடியில் மண்
உதிர்ந்து கரைகையில்
உணர்வுகளில் ஓர் உறுத்தல்.

பாறைகளில் போயறைந்து
பரிதவிக்கும் கடலம்மா -
தோழர்
பட்ட துயரா சொன்னாய்?
அலைபாசை அறியேனே
அம்மா!
காற்றே...!
காதோரம் வீசு -
கடல் நடுவே
கண்டு வந்ததை மூச
புரியும்படி பேசு.

சூழ்ந்த துரோகத்தையும்,
பகை எதிர்த்து
பச்சை இளந் தளிர்கள்
பற்றிக் கொண்டதையும்,
கடைசிக் கணங்களில்
கண்டவரல்லவா நீங்கள்
பாடுங்கள் - மனித மொழியில்
புதிய பரணியாய் பாடுங்கள்!

அதோ.....
அச்சிறு நண்டுகள்
அடிக்கடி அலை இழுத்தாலும்
மீண்டும் மீண்டும்......
கரையை நோக்கி - தம்
வளையை நோக்கி........

■ சோதியா
நோர்வே.

**தலைவரைப் பற்றி. தளபதி கிட்டு**

வெளிநாடுகளில் வாழும் மக்கள் எமது தலைவரின் மீது. அதிகமான நம்பிக்கையையும், உறுதியையும் கொண்டுள்ளனர். சில இடங்களில் இயக்கத்தை நம்பாது விட்டாலும் தலைவரை நம்புகின்றனர். இப்படியாக எமது தலைவர், தனிப்பெரும் தலைவர் என்றுதான் மக்களால் கணிக்கப்படுகின்றார்.

## திதி....

பிதிர்க்கடன் என்பது வெறுமனே ஒரு சம்பிரதாயமல்ல... ஒரு சடங்குமல்ல...

'பிதிர்கள்' என்று சொல்லப்படுகின்ற, எம்மைப் பிரிந்துபோன ஜீவன்கள், நாங்கள் எதைச் செய்தால் ஆத்மதிருப்தி அடையுமோ, அதுதான் உண்மையான -அர்த்தமுள்ள -பிதிர்க்கடன்.

செல்லத்தின் மனதில் தெளிவு பிறக்கிறது.

"உங்கடை திதியை இந்த வருசம்தான் உண்மையான அர்த்தத்தோடை செய்யப் போறன்..." என்று நினைத்தவளாய், கணவருடைய படத்துக்கு முன்னால் ஒரு நிமிடம் கைகூப்பி நின்ற செல்லம், சமையலறைக்குப் போய் அவசரம் அவசரமாக அடுப்பைப் பற்ற வைக்கிறாள்.

உரப்பையைப் பிரித்துச் சமையல் பொருட்களை வெளியே எடுக்கிறாள்.

இன்னும் சிறிது நேரத்தில் அவளைத்தேடி வரப்போகும் பிள்ளைகளுக்கு ருசியான திதிச் சாப்பாடு தயாராகிக் கொண்டிருக்கிறது.

சிவன் கோவிலில் உச்சிக்காலப் பூசைக்கான ஆயத்தமணி 'கணீர் கணீர்' என ஒலிக்கிறது.

கணவனோடு, ஒவ்வொரு போராளிகளினதும் எண்ணங்கள் அவளில் நினைவாகப் பிறக்கின்றன. தன்கையால் சோறுதின்ற பிள்ளைகள், இன்றைக்கு...

மணியொலி கேட்க, அந்த வீரர்களின் நினைவுகள் நெஞ்சிலெழுகின்றன. அவளின் விழிகளில் அவர்கள் நிறைந்து போயிருக்கிறார்கள். ■

# தமிழீழ நினைவோடு....

தளராத துணிவோடு களமாடினாய் - இன்று
தமிழீழ நினைவோடு படகேறினாய்
அழகான திருமேனி தணலானதோ? - இந்தி
அதிகாரம் உனக்கிங்கு எமனானதோ

நீ நடந்த பாதையெங்கும் பூ மலர்ந்தது - தமிழ்
ஈழமெங்கும் உந்தனது போர்கலந்தது
தாயகத்து போர்க்களத்தில் நீ முழங்கினாய் - தம்பி
தானையிலே தளபதியாய் நீ விளங்கினாய்

அமைதிதேடி வந்தபுறா சிறகிழந்தது - கொடும்
அரக்கர்களின் அம்புபட்டுத் துடிதுடித்தது
இமயநாடு உந்தனுக்குக் குழிபறித்தது - உன்னை
இழந்ததினால் எங்கள் நெஞ்சு பதைபதைக்குது

பாசத்தோடு ஈழமக்கள் நெஞ்சை ஆளுவாய் - பிர
பாகரனின் தம்பியாகி என்றும் வாழுவாய்
ஆசையோடு தேசம்காண வந்தவீரனே! - கிட்டு
அண்ணன் என்ற பேரெடுத்த எங்கள் தேவனே!

☐ புதுவை இரத்தினதுரை




U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F 091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers.